# உதயன்


Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 047 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 28, திங்கட்கிழமை 12.01.2015


வானிலை
சேவற்பயான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

# சிக்கலில் கோத்தா மஹிந்த

## இலக்கு வைக்கின்றது புதிய அரசு; ஆதாரங்கள் இருக்கின்றன என்கிறார் மங்கள



கொழும்பு, ஜன. 12
தேர்தல் முடிவுகளை மதிக்காது – இராணுவ ஆட்சியின் மூலம் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்கான முயற்சிகளை மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்த பாய ராஜபக்ஷ மேற்கொண் டுள்ளனர். அது தொடர்பாக விரைவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் – இவ் வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர. பக்.25



## வெளிவிவகார துறையில் விரைவில் மாற்றங்கள்

கொழும்பு, ஜன. 12
இலங்கையின் வெளிவிவகாரத்துறை முற்றாக மாற்றியமைக்கப்படவுள்ளது. புதிய அரசின்வெளிவிவகாரகொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கானதூதுவர்கள் கலந்துரையாடல் ஒன்றுக்காக இலங்கைக்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் அரசியல்ரீதியாக நியமனம்பெற்றவர்கள் இந்தக் பக்.26

## இடைக்கால 'பட்ஜெட்' எதிர்வரும் 29ஆம் திகதி

கொழும்பு, ஜன. 12
அத்தியாவசிய பொருள்களின் விலைக்குறைப்புமற்றும் நிவாரணங்களை உள்ளடக்கியதாக இடைக்கால வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் 21 ஆம் திகதியே நாடாளுமன்றம் கூடவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பக்.25

## அச்சத்தில் ஓடியவர்கள் நாட்டுக்கு திரும்பினர்

கொழும்பு, ஜன. 12
கடந்த ஆட்சியில் நாட்டை விட்டுத்தப்பிச் சென்று வெளிநாடுகளில் வசித்து வந்த, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு நெருக்கமான இரண்டு மூத்த முன்னாள் இராணுவ அதிகாரிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நாடு திரும்பியுள்ளனர். பக்.26

## சர்வதேசத்தின் பார்வையை மாற்றுவேன் *– ஜனாதிபதி*

சர்வதேச நாடுகள் – சர்வதேச அமைப்புக்கள் மத்தியில் இலங்கை தொடர்பான எண்ணங்களை மாற்றி உயர் நிலைக்கு கொண்டு செல்வேன். சர்வதேசத்துடன் நட்புணர்வுடன் பணியாற்றி நாட்டைப் பாதுகாப்பேன் இவ்வாறு உறுதியளித்துள்ளார் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
கண்டியில் அவர் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார். பக்.02

## பாப்பரசர் வருகையை முன்னிட்டு விசேட ரயில்

யாழ்ப்பாணம்.ஜன.12
புனித பாப்பரசரின் வருகையை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபடும் என யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தின் பிரதான அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.
நாளை செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் விசேட ரயில் மறுநாள் புதன்கிழமை அதிகாலை 4.32 மணிக்குகொழும்புகோட்டையையும், அதிகாலை 4.53 மணிக்கு பக்.26

# மஹிந்தவை வீடு அனுப்பும் வியூகங்கள் படுவேகத்தில்

## சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவியும் பறிபோகின்றது

கொழும்பு, ஜன. 12
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கொழும்பில் நேற்று மாலை இரு வேறு தலைவர்களின் கீழ் இருவேறு இடங்களில் நடைபெற்றது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் இடம்பெற்ற கூட்டத்தில், ஸ்ரீலங்கா பக்.25

## கைநழுவியது '3 இல் 2'

கொழும்பு, ஜன. 12
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையில் புதிய அரசுக்கு ஆதரவு தெரிவித்து, அதனுடன் இணைந்து கொண்டுள்ளனர். அதையடுத்து ஆளும் கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழந்துள்ளது. பக்.26



பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸை வரவேற்கும் நிகழ்வுக்குரிய ஒத்திகை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கர்தினால் மல்கம் ரஞ்சித், ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இலங்கைக்கு நாளை வருகிறார் பாப்பரசர்

## நாளை மறுதினம் மடுவுக்குச் செல்வார்

கொழும்பு, ஜன.12
பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் வரலாற்று முக்கியத்துவமிக்க பயணத்தை மேற்கொண்டு நாளை இலங்கைக்கு வரவுள்ளார். பாப்பரசரின் வருகை தொடர்பான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பாப்பரசரின் வருகைக்குப் பொறுப்பான தகவல் ஊடகப்பணியகம் அறிவித்துள்ளது.
பாப்பரசரை வரவேற்பதற்காக விமான நிலையத்தில் இருந்து கொழும்பு நோக்கிய வீதிகளில் பாப்பரசரின் வத்திக்கான் கொடிகளுடன் இலங்கையின் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன் ஆங்காங்கே அலங்காரத் தோரணங்களும் அமைக்கப்பட்டுள்ளன.
இலங்கையின் அப்போஸ்தலர் என வர்ணிக்கப்படும் அருளாளர் ஜோசப் வாஸ் அடிகளாரை புனிதராக திருநிலைப்படுத்தும் வரலாற்றுப் புகழ் மிக்க மாபெரும் நிகழ்வில் பங்கேற்கும் பக்.25

## பாகிஸ்தானில் பெரும் விபத்து; 57 பேர் எரிந்து சாவு!


பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தில், எண்ணெய்த் தாங்கி லொறி ஒன்றும், பயணிகள் பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.அதில்57பேர்உடல்கருகி உயிரிழந்துள்ளனர். விபத்தின் போது பஸ்ஸிலிருந்து தூக்கியெறிப்பட்டதால் சிலர் உயிர் தப்பினர். பக்.15



## மைத்திரிக்கு மகத்தான வரவேற்பு

கொழும்பு, ஜன. 12
கொழும்பிலிருந்து கண்டிக்கு காரில் பவனியாகச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு மக்கள் பெரும் எடுப்பில் வரவேற்புக் பக்.25

## செய்திகள்



# தேசிய அரசில் பங்கெடுப்பதற்கு அனைவரையும் அழைக்கிறேன்

## கண்டியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 12

சர்வதேச நாடுகள் – சர்வதேச அமைப்புக்கள் மத்தியில் இலங்கை தொடர்பான எண்ணங்களை மாற்றி உயர் நிலைக்கு கொண்டு செல்வேன். சர்வதேசத்துடன் நட்புணர்வுடன் பணியாற்றி நாட்டைப் பாதுகாப்பேன் என்று புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு நேற்று உறுதியளித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நிறைவேற்றுவேன் என்றும், அதற்காக சகல அரசியல் கட்சிகளையும் கடந்த காலங்களில் நடந்ததை மறந்து தேசிய அரசில் பங்கெடுக்குமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் தலாதாமாளிகைக்குச் சென்று மைத்திரிபால வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன் பின்னர் நாட்டு மக்களுக்கு முதன் முறையாக, தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்திலிருந்து உரையாற்றினார். பி.ப 3.08 மணிக்கு ஆரம்பித்து 3.26 மணிக்குதனது உரையைநிறைவு செய்தார். இந்த உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு நாட்டுக்கு தேவை அரசனல்ல. உண்மையாக ஆட்சிபுரியும் நல்ல மனிதனே. இந் நாட்டின் சேவகனாக தெரிவு செய்ய ஜனாதிபதி தேர்தலில் எனக்கு வாக்களித்த சகல மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன். மேலும் இந்த தேர்தல் வெற்றி உங்களுடையது. எனவே யாருக்கும் இடையூறு ஏற்படாத வகையில் கொண்டாட வேண்டும்.

நாட்டில் மனித நேயம், நீதி ஆகியவற்றை நிலைநாட்டக் கூடிய நல்லாட்சியை ஏற்படுத்துவேன். நாட்டை அபிவிருத்தியில் இட்டுச் செல்ல நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதி களையும் எமது தேசிய அரசில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

நாட்டின் சமாதானத்துக்கும், பொருளாதார – சமுதாய – கலாசார முன்னேற்றத்துக்கும் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை நான் எதிர் பார்க்கின்றேன். எப்போதும் நல் லவற்றையே நான் எதிர் பார்க் கின்றேன். தீய எண்ணங்கள் நல்ல பயனைத் தரமாட்டாது. அது தீய சமுதாயம் ஒன்றை உருவாக்கி விடும்.

நாட்டு மக்களின் வறுமையைப் போக்கி, அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைத்து பலமிக்க சுபீட்சமான நாட்டை உருவாக்குவதற்கு எனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதைப் போன்று அர்ப்பணிப்புடன் செயலாற்றுவேன். இந்த நாட்டில் நிறைவேற்றி முடிப்பதற்கு ஏராளமான விடயங்கள் உள்ளன.

சர்வதேச நாடுகள் மத்தியில், இலங்கையை பெருமை மிக்க நாடாக உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். சர்வதேச சமூகத்துடன் நட்புணர்வுடன், சகோதரத்துவத்துடன் பணியாற்றி நாட்டைப் பாதுகாப்பேன்.

இது பௌத்த நாடு. இதனால் பௌத்தத்தை பேணிக் காத்து, பௌத்த சாசனத்தை மேம்படுத்துவதுடன், நாட்டின் ஏனைய மதங்களான இந்து, முஸ்லிம், கத்தோலிக்கம் உள்ளிட்ட சகல மதங்களினதும் உரிமையைப் பாதுகாப்பேன்.

விவசாய நாடான இந்த நாட்டின், விவசாய பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயத்தை அபிவிருத்தி செய்து நாட்டில் பலமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவேன். அத்துடன் நாட்டில் பாரபட்சமற்ற முறையில் சிறப்பான அரச சேவையைக் கொண்டு செல்வேன். தனியார் துறைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் செயற்படுவேன் – என்றார். (ந–5)

# கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடுதல் கூடாது

## அறிவுறுத்துகின்றது வெள்ளிக்கிழமை அரங்கம்

கொழும்பு,ஜன.12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வெள்ளிக்கிழமை அரங்கத்தின் சார்பில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர் தமக்கு முன்னுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் வெற்றி கிடைக்க வேண்டுமெனவும் வாழ்த்துத் தெரிவிக்கப் பட்டது.

இது தொடர்பாக அரங்கத்தின் சார்பில் ஜயந்த தனபால, சூரிய விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மக்கள் தமது ஜனநாயகக் கடமைகளை உறுதியாக ஆற்றியதன் காரணமாக அமைதியான முறையில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்தி யுள்ளார்கள். மேலும் ஜனநாய கம், அரசமைப்பு ஆகியவற்றை மதித்து பதவியிலிருந்து விலகிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைதியான முறையில் அதிகாரத்தைக் கையளித்தமை தொடர்பிலும் வெள்ளிக்கிழமை அரங்கம் பாராட்டுத் தெரிவிக் கின்றது.

மேலும் தேர்தல்கள் ஆணையாளர் அவரது அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர்கள், பொலிஸார், தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அரச அலுவலர்கள் தமது கடமைகளை அர்ப்பணிப்புடனும் திறமையாகவும் மேற்கொண்ட உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த தேர்தல்கண்காணிப்பாளர்கள் அனைவரையும் அரங்கம் பாராட்டுகின்றது.

தமது விருப்பத்தை செயலில் செய்து காட்டிய பொதுமக்களும் பாராட்டுதல்களுக்குஉரியவர்கள்.

அத்துடன் பதினெட்டாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவதன் மூலமாகவும் ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை இல்லாதொழிப்பதன் மூலமாகவும் ஜனநாயக விழுமியங்களை மீளவும் கட்டியெழுப்ப முடியும்.

மேலும் நாட்டின் சகல சமூகங்களின் உரிமைகளை வழங்குவதற்கும் அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றி வைப்பதற்கும் எமது நாட்டுக்குப் புதியதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனை நிறைவேற்றி வைக்க வேண்டிய தருணமும் இதுதான். (க)

# ஜனரஞ்சகம்







முகநூலில் சுட்டது....




## தப்பினார் சோப்ரா




ஹிந்தி திரைப்பட உலகில் முன்னணி நடிகையாக இருக்கும் ப்ரியங்கா சோப்ரா விபத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார். தனது குடும்பத்தினருடன் மாலைதீவுக்கு சுற்றுலா சென்ற ப்ரியங்கா சோப்ராவும் குடும்பத்தினரும் படகில் கடல் மற்றும் கடற்கரையோர அழகை ரசித்தபடி சென்று கொண்டிருந்தனர்.

திடீரென படகு பவளப்பாறையொன்றில் பயங்கரமாக மோதியது. இதில் படகு உடைந்தது. எல்லோரும் தண்ணீருக்குள் விழுந்து தத்தளித்தனர். இதைப் பார்த்ததும் கடலோர காவல் படையினர் அடுத்த சில நிமிடங்களில் அந்தப் பகுதிக்கு விரைந்தனர். உடைந்த படகை பிடித்தபடி தத்தளித்துக் கொண்டிருந்த அவர்களை வேறு படகில் ஏற்றிக் கரைக்கு அழைத்து வந்தனர். இந்த விபத்தில் ப்ரியங்கா சோப்ராவும் குடும்பத்தினரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

## ரிலாக்ஸா வாசியுங்க...

வெளியூரிலிருந்து வந்த ஒருவர், வீட்டின் அழைப்பு மணியை அழுத்தினார். ஒரு வாண்டு (குட்டிப் பையன்) கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.

'அப்பா இருக்கிறாரா?'
'இல்லை. வெளியில் போயிருக்கிறார்'
'அப்போ, வீட்டில் பெரியவங்க, தாத்தா, பாட்டி, இருக்கிறாங்களா?'
'அவங்க சித்தப்பா வீட்டுக்கு போயிருக்கிறாங்க'
'அண்ணனையாவது கூப்பிடு'
'அண்ணன் கிரிக்கெட் விளையாட போயிருக்கிறான்'
'சரிப்பா.. அம்மாவைக் கூப்பிடு'
'அம்மா கோயிலுக்கு போயிருக்கிறாங்க'
வந்தவர் கடுப்பேறி....' நீ மட்டும் ஏன் இருக்கிறாய். நீயும் எங்கேயாவது போக வேண்டியதுதானே ?'
'நானும் என் நண்பன் வீட்டுக்குத்தான் வந்திருக்கேன்...!!!'
என்றது அந்த வாண்டு.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எந்த வேலையிலும் கவனம் சிதற விடாமல் இருப்பது வெற்றிக்கு உதவும். பொருளாதாரம் உயரும். எதிர்ப்புகள் விலகும். கடன் தொடர்பான பிரச்சினைகள் தீரும். பல வகையான யோகங்கள் ஏற்படும். பிறருடன்பழகும்போது நிதானம் தேவை.

**இடபம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் நன்மை தீமை பற்றிக் கவலைப்படாமல் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை திறம்பட செய்வார்கள். குடும்பத்தில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மறையும்.

**மிதுனம்:** நீண்ட நாள்களாக இருந்த கவலை குறையும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சொல்லாற்றல் அதிகரிக்கும். காரியங்களைச் சாதிக்கும் ஆற்றலும் திறனும் அதிகரிக்கும்.

**கடகம்:** தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த வேலையை எப்பாடுபட்டாவது செய்து விடுவீர்கள்.

**சிங்கம்:** உங்களது ஆலோசனை கேட்டு குடும்பத்தில் இருப்பவர்கள் செயற்படுவார்கள்.வீண் அலைச்சல் ஏற்படலாம். தேவையற்ற கவலைகள் நீங்கும்.

**கன்னி:** சிலர் புதிய வீட்டிற்கு குடிபுகுவார்கள். கணவன் மனைவிக்கிடையில் திடீரென்று கருத்து வேற்றுமை உண்டாகலாம். பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் அடைய தேவையான உதவிகளைச் செய்வீர்கள்.

**துலாம்:** மற்றவர்களிடம் கவனமாகப் பேசுவது கருத்து வேற்றுமை வராமல் தடுக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் பெற தேவையான உதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் திறமை அதிகரிக்கும். துணிச்சலாக எதையும் செய்து முடித்து காரிய வெற்றி அடைவீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும்.

**தனுசு:** தொழில் தொடர்பான பிரச்சினைகள் தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணி தொடர்பான கஷ்டங்கள் குறையும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு இருக்கும்.

**மகரம்:** உத்தியோகத்தில் முன்னேற்றம் பெற எடுக்கும் முயற்சிகள் சாதகமாக பலன் தரும். எதிலும் வேகமாகச் செயலாற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். மனக் கஷ்டம் நீங்கும்.

**கும்பம்:** வாக்குவன்மையால் தொழில், வியாபாரம் சிறப்பாக நடைபெறும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கும். அந்தஸ்து உயரும்.

**மீனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும். சுப காரியங்களில் குடும்பத்தினருடன் கலந்து கொள்வீர்கள். எடுத்த வேலையை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.

உதயன்

# செய்திகள்

## நகரின் சுகாதாரம் விரைவில் சீராகும்

### யாழ்.மாநகர சபை ஆணையாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன.12

அடுத்துவரும் மூன்று வாரங்களுக்குள் நகரின் சுகாதார சேவைகள்சீரமைக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்துள்ளார் யாழ். மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன்.

"25 சுகாதாரத் தொழிலாளர்களும், ஐந்து மேற்பார்வையாளர்கள் இது தொடர்பான கடமையில் உள்ளனர். தற்சமயம் கழிவகற்றும் பணிகளில் ஐந்து உழவு இயந்திரங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன"– என்றும் அவர் தெரிவித்தார்.

"அனேக வீதிகளில் காணப்பட்ட கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. குருநகர்ப் பகுதியில் மேலதிக பணிகளின் ஊடாக அந்தப் பகுதியைச் சுத்தமாக வைத்திருக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன. ஒலிபெருக்கிகள் மூலமும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றது. அனைவரினதும் உதவியுடன் குறிப்பிட்டபடி சுகாதார சேவைகள்சீராக்கப்பட்டுவிடும்"–என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அதேவேளை, குடியிருப்பாளர்கள் தத்தம் வீட்டுக் கழிவுகளை வீதியோரங்களில் கொட்டுவதை தவிர்க்கும் நோக்குடன் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று மாநகர கழிவகற்றும் பிரிவினர் தெரிவித்தனர். ஒவ்வொரு வீட்டுக்கும் விசேட அட்டைகள் வழங்கப்பட்டு, அந்த அட்டைகளை கொண்டு இந்த வீட்டுக் கழிவுகள் அகற்றப்படும் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

குடியிருப்பாளர்கள் வீட்டுக் கழிவுகளை உக்கும், உக்காத கழிவுகள் என தரம் பிரித்து அதை பொதியாக்கி வைக்க வேண்டும். இந்தக் கழிவுகள் கழிவகற்றும் பிரிவினரால் விசேட அட்டையில் பதித்து பெற்றுக் கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் வீதியோரங்களில் கழிவு கொட்டப்படுவதைத்தடுக்க முடியும் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (ற–7)

## பதவி பறிபோனதன் பின்னரும் பவிசை விடமறுக்கும் கோத்தா

### உத்தியோகபூர்வ இல்லத்திலேயே இன்னமும் உள்ளார் என்கிறது 'த ஐலன்ட்'

கொழும்பு, ஜன. 12

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதியின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ நீக்கப்பட்டுள்ள நிலையிலும், அவர் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து இன்னமும் வெளியேறவில்லை என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததையடுத்து, கோத்தபாய ராஜபக்ஷ தனது மனைவியுடன் மாலைதீவுக்குத் தப்பிச் சென்று விட்டதாக, கொழும்பு ரெலிகிராப் செய்தி வெளியிட்டிருந்தது.

ஆயினும் அவர் நாட்டை விட்டு வெளியேறவில்லை. இன்னமும் பாதுகாப்பு அமைச் சின் அதிகாரபூர்வ வதிவிடத்திலேயே தங்கியுள்ளார் என்று த ஐலன்ட் ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைவதை உணர்ந்ததும், கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையிலேயே தனது அதிகாரபூர்வ வதிவிடமான அலரி மாளிகையில் இருந்து வெளியேறியிருந்தார். (ற–5)

## திறைசேரியின் செயலராக தமிழர் ஒருவர் நியமனம்

நிதி அமைச்சின் செயலாளராகவும், திறைசேரியின் செயலாளராகவும் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மூத்த பொருளாதார நிபுணரான அர்ஜுன் மகேந்திரனே அந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவானவுடன், நிதி அமைச்சின் செயலாளராகவும், திறைசேரியின் செயலாளராகவும் கடமையாற்றிய பி.பீ.ஜெயசுந்தர பதவி விலகியிருந்தார். அதையடுத்து ஏற்பட்ட பதவி வெற்றிடத்துக்கே அர்ஜுன் மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில், முதலீட்டுச் சபையின் தலைவராகக் கடமையாற்றிய இவர், எச்.எஸ்.பி.சி. வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தார்

ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ஆகியோர் நேற்றுமுன்தினம் தடாலடியாக மாற்றம் செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில், நிதி அமைச்சின் செயலாளராகவும், திறைசேரியின் செயலாளராகவும் கடமையாற்றிய பி.பீ.ஜெயசுந்தர பதவி விலகியிருந்தார். (ற–5)

## ஐ.ம.சுதந்திர கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்படுகின்றது

### விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

CM K

கொழும்பு, ஜன.12

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய அரசின்திட்டங்களுக்குஆதரவு திரட்டும் நோக்கிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் இந்தப் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசுக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை பலமில்லை என்ற போதிலும், நாடாளுமன்றில் பெரும்பான்மை பலமற்ற முதலாவது அரசு இதுவல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முற்போக்கான – மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய திட்டங்களை புதிய அரசு முன்வைக்க உள்ளது.

இந்தத் திட்டங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களினால் நிராகரிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரையில் இந்த நாடாளுமன்றுடன் பணியாற்ற அரசு விரும்புகின்றது. புதிய அரசு தேசிய அரசொன்றை அமைப்பதற்கு முயற்சித்து வருகின்றது என்றும்– அவர் கூறினார். (ற)

## வைத்தியர் பற்றாக்குறை நோயாளர்கள் சிரமம்

### பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையிலேயே இந்த நிலைமை

சண்டிலிப்பாய், ஜன.12

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறையால் பெரும்சிரமங்களைஎதிர்கொள்வதாக நோயாளர்கள் தெரிவித்துள்ளனர். இரவு வேளையில் சிகிச்சைக்காகச்செல்லும்நோயாளர்கள், வைத்தியர் இன்மையால் சங்கானை, யாழ்ப்பாண வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பண்டத்தரிப்பு பகுதியில் காட்டப்பாப்புலத்தில் இயங்கி வரும் பிரதேச வைத்தியசாலைக்கு சுற்றியுள்ளகிராமங்களிலிருந்து தினசரி 300க்கும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சைக்குச் செல்கிறார்கள். அங்கு பகல் வேளையில் ஒரு வைத்தியரே கடமையாற்றுவதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் இந்த வைத்தியசாலையில் ஆண், பெண் நோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெறுவதற்கான விடுதி, வைத்தியர்களுக்கான விடுதி, பிரசவ விடுதி போன்றனவும், அம்புலன்ஸ் உட்பட சகல வசதிகளும்உள்ளபோதும், இரவு நேரத்துக்கான வைத்தியர்நியமிக்கப்படாததால்நோயாளர் தூர இடங்களிலுள்ள யாழ்ப்பாணம், சங்கானை போன்ற வைத்தியசாலைகளை நாட வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யுமாறு நோயாளர் நலன் புரிசங்கம்பலதடவைகள்சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியிருந்த போதும் இன்று வரை இரவு நேரத்தில் கடமையாற்றுவதற்கு வைத்தியர் நியமிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டதுடன், நோயாளரின் நலன் கருதி விரைவாக வைத்தியரை நியமிக்குமாறு கோரியுள்ளது. (ற–115)

## மீண்டும் கிடைக்குமா வேலை?

### கேட்கின்றனர் ரயில் கடவை காப்பாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன.12

நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக பணி இழந்த ரயில் கடவைக் காப்பாளர்கள் தமக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டும் அல்லது ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் 'உதயனு'க்குத் தெரிவிக்கையில்;

1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொடிகாமம் முதல் காங்கேசன் துறை வரை 410 இற்கும் அதிகமானோர் ரயில் பாதை கடவைக்காப்பாளர்களாகப் பணியாற்றினோம். போர் காரணமாக ரயில் சேவை தடைப்பட்டது.அதையடுத்து எமக்குவேலை பறிபோனது. தற்போது மீண்டும் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ஏற்கனவே பணியாற்றியவர்கள் குறித்து கருத்தில் எடுக்காமல் புதிதாக பலருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எமக்குத் தொழிலும் இல்லை. ஓய்வூதியமும் இல்லை. இது தொடர்பில் பலமுறை உரிய தரப்பினரிடம்சுட்டிக்காட்டினோம். எவருமே நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது ஆட்சி மாற்றியுள்ளது.

இந்த நிலையில் எமது பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ–10)

## யாழ்.நகர் வீதிகளில் குப்பை; சுகாதாரத்துக்கு பெரும் கேடு

கொழும்புத்துறை, ஜன.12

யாழ்.நகரின் பிரதான வீதிகள், சந்திகள் மற்றும் சந்தைப் பகுதிகள், புறநகர்ப் பகுதி வீதியோரங்கள் எனப் பல இடங்களிலும் திண்மக் கழிவுகள் அகற்றப்படாது குவித்து, சுகாதார சீர்கேடுகள் விளைவிக்கும் வகையில் காணப்படுகிறது.

பல நாள்களாக அகற்றப்படாத இந்தக் குப்பை, பொலித்தீன் மற்றும் மாமிசக் கழிவுகளை விலங்குகளும் பறவைகளும் இழுத்துச் சிந்தி வீதிகள் எங்கும் பரவிக் காணப்படுகின்றது.

இதனால் வீதிகளில்துர்நாற்றம் வீசுவதுடன்நுளம்புப் பெருக்கத்துக்கும்ஏதுவாகசூழலும்தோன்றியுள்ளது.

அதேவேளை, மாடுகள், ஆடுகள் போன்ற கால்நடைகள் பொலித்தீன்களையும் சேர்த்து உண்பதால் அவை இரைப்பைக்குள் தங்கி நோய்களை ஏற்படுத்திக் கால்நடைகள் இறக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றன.



எனவே மேற்படி சூழல் மாசடையும் வகையில் மனிதருக்கும் விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வண்ணம் தேங்கியுள்ள கழிவுகளை சிரமமாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஒ–135)

# தப்பியோட்டம்!

## டுபாய் பறந்தார் பஸில்;
## தொண்டமான் சென்னைக்கு




கொழும்பு, ஜன. 12
ஜனாதிபதியின் சகோதரரும், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் நேற்றுக் காலை நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். அவர்களுடன் திறைசேரியின் செயலாளர் பி.பீ.ஜெயசுந்தரவும் வெளியேறியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய அரசு பதவியேற்றுள்ளது. கடந்த அரசின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகள் தொடர்பில், விசாரணை மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால அறிவித்துள்ளார். இந்த நிலையில், கடந்த கால அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர்கள் மற்றும் அரசியல் நியமனம் பெற்ற உயர் அரச அதிகாரிகள் ஆகியோர் நாட்விட்டுத் தப்பியோடத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், முன்னைய அரசில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ நேற்றுக் காலை நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். நேற்று அதிகாலை 2.55 மணிக்கு ஈ.கே. 349 இலக்கமுடைய விமானத்தில் அவர் டுபாய் சென்றுள்ளார். அவருடன் அவரது மனைவி புஷ்பா ராஜபக்ஷவும் சென்றுள்ளார்.

இதேபோன்று, முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆறுமுகம் தொண்டமான் சென்னைக்குச் சென்றுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யு.எல். 171 எனும் இலக்க விமானத்தில் அவர் நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ளார்.

நாட்டைச் சீரழித்துக் கொண்டு இருப்பவர் என்று, எதிர்க்கட்சிகளால் விமர்சிக்கப்பட்ட திறைசேரியின் செயலாளர் ஜெயசுந்தரவும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். அத்துடன் முன்னாள் ஜனாதிபதிக்குச் சார்பாகச் செயற்பட்ட அரச ஊடகங்களின் தலைவர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். (ற-5)

## வீட்டுக்குள் முடங்கிக் கிடக்க மஹிந்தவை அனுமதியோம்

### விமல் வீரவன்ஸ கூறுகின்றார்



கொழும்பு, ஜன. 12
மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவார். அவர் வீட்டில் இருப்பதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் – என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

கொழும்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்னெடுக்கப்படும் 100 நாள் வேலைத் திட்டத்திற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். எந்த இடையூறுகளையும் மேற்கொள்ள மாட்டோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியலிலிருந்து ஒதுங்கி விடவில்லை. அவர் மீண்டும் அரசியலுக்கு வருவார். வீட்டில் அவர் இருப்பதற்கு நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் – என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

## இடைநிறுத்தப்பட்டனர் அனந்தி, சிவகரன்

### கட்சி தீர்மானங்களுக்கு மாறாக செயற்பட்டனர் என்று தெரிவித்து

யாழ்ப்பாணம், ஜன. 12
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், இளைஞரணித் தலைவர் எஸ்.சிவகரன் ஆகியோர் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்றும், தமிழரசுக் கட்சியில் அவர்கள் வகித்து வந்த பதவிகள் அனைத்திலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் அந்தக் கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மைத்திரிபாலசிறிசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பதாகத் தெரிவித்தது. அதனை எதிர்த்து, வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் மற்றும் இளைஞரணித்தலைவர் எஸ்.சிவகரன் ஆகியோர் அறிக்கை வெளியிட்டிருந்தனர். அத்துடன் கட்சியின் முடிவை விமர்சித்ததுடன், இது தொடர்பில் பகிரங்கமாக ஊடகவியலாளர் சந்திப்பையும் நடத்தியிருந்தனர்.

கட்சியின் கொள்கை மற்றும் தீர்மானங்களுக்கு மாறாகச் செயற்பட்டமை தொடர்பிலேயே இவர்கள் இருவருக்கும் எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலில் கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும், அவர்கள் வகித்து வந்த பதவி களிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். திருமதி அனந்தி சசிதரன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர், மகளிர் அணி இணைத் தலைவி, மத்திய குழு உறுப்பினர் பதவிகளிலிருந்தும், எஸ்.சிவகரன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர், தமிழரசுக் கட்சி இளைஞரணித் தலைவர், மத்திய குழு உறுப்பினர் பதவிகளிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும். அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், மத்திய குழு இவர்கள் மீதான நடவடிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் என்று செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார். அதே வேளை, இது தொடர்பில் அனந்தி சசிதரனிடம் கேட்டபோது இது வரை தமக்கு இது தொடர்பில் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். (ற-5)

## சேதன பசளைக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், ஜன.12
யாழ்.மாநகராட்சி மன்றத்தின் சேதன பசளைக்கு தொடர்ந்தும் கிராக்கி காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாநகரப் பகுதியில் அகற்றப்படும் சு... பொருள்களை கொண்டு சேதனப் பசளை தயாரிக்கப்படுகின்றது. அவை கிலோ ...த்து ரூபாவாகவும், ஐந்து கிலோ, ...த்துக் கிலோ எடையுடைய பொதிகளாக்கப்பட்டும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அவற்றைக் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ற-7)



பனங்கிழங்கு சீசன் ஆரம்பித்துள்ளதை அடுத்து யாழ். நகரில் பனங்கிழங்கு விற்பனைக்கு வந்துள்ளது. தீவகம், வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து எடுத்துவரப்படும் பனங்கிழங்கு ஒன்று 5ரூபாவுக்கு யாழ்ப்பாணத்தின் பல சந்தைகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. (ஒ-135)

## 264 பேருக்கு விதை வெங்காய மானியம்

யாழ்ப்பாணம், ஜன.12
நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதை வெங்காயத்துக்கான மானியம் வழங்கப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 2015 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் முன்மொழிவின்படி, 264 விவசாயிகளுக்கு இந்த மானியம் வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-7)

## 12 மில்.லீற்றர் பால் உற்பத்தி வடக்கில்

### கடந்த ஓராண்டு காலப்பகுதியில்

யாழ்ப்பாணம், ஜன.12
வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் கடந்த ஆண்டு 12 மில்லியன் லீற்றருக்கும் மேல் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்தது. உற்பத்தி செய்யப்பட்ட பால் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கால்நடை வளர்ப்போர் சங்கம், நெஸ்லே மற்றும் மில்கோ ஆகிய பால் சேகரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களில் இருந்தும் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 13 பிரதேச செயலர் பிரிவுகளில் 53 இலட்சத்து 17 ஆயிரத்து 573 லீற்றர் பாலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4பிரதேச செயலர் பிரிவுகளில் 11 இலட்சத்து 86 ஆயிரத்து 315 லீற்றர் பாலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பிரதேச செயலர் பிரிவுகளில் 14 இலட்சத்து 42 ஆயிரத்து 958 லீற்றர் பாலும், வவுனியா மாவட்டத்தில் 4 பிரதேச செயலர் பிரிவுகளில் 34 இலட்சத்து 20 ஆயிரம் லீற்றர் பாலும், மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலர் பிரிவுகளில் 12 இலட்சத்து 69 ஆயிரத்து 270 லீற்றர் பாலும் என மொத்தமாக 126 இலட்சத்து 36 ஆயிரத்து 116 லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் யாழ்.மாவட்ட கால்நடை கூட்டுறவு அபிவிருத்தி சங்கம் 7 இலட்சத்து 75 ஆயிரத்து 181 லீற்றர் பாலையும், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் 12 இலட்சத்து 69 ஆயிரத்து 270 லீற்றர் பாலையும், நெஸ்லே நிறுவனம் 42 இலட்சத்து 65 ஆயிரத்து 608 லீற்றர் பாலையும், மில்கோ நிறுவனம் 13 இலட்சத்து 89 ஆயிரத்து 780 லீற்றர் பாலையும் சேகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-14)

# செய்திகள்

## வன்னியில் மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கைக் கால் பொருத்தும் பணி

### ஆரம்பித்து வைத்தது சர்வதேச லயன்ஸ் கழகம்



மாற்றுத்திறனாளி ஒருவருக்கு பரிசோதனை மேற்கொள்வதையும் ஊன்றுகோல் வழங்குவதையும் காணலாம்.

கிளிநொச்சி, ஜன.12

சர்வதேச லயன்ஸ்கழகங்களின் 306பி 1 மாவட்டமும் தமிழ் நாடு கோயம்புத்தூர் மிட் டவுன் றோட்டரிக் கழகமும் இணைந்து வன்னிப் பிரதேச மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கைக் கால் பொருத்தும் பணிகளை ஆரம்பித்துள்ளனர். அதற்கான ஆரம்ப கட்டப் பணிகளை கடந்த புதன்கிழமை விசுவமடு மாற்றுத் திறனாளிகள் செயற்கை உறுப்புக்கள் தொழில்நுட்ப நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட உப ஆளுநர் லயன் வை.தியாகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோயம்புத்தூர் றோட்டரிக் கழக மாவட்டத்தலைவர் றோட்றேரியன் பாபுக் கண்ணன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கர் சுப்பு ஆகியோருடன் லயன்ஸ் பிரதம இணைப்பாளர் லயன்ஸ் கே.எம். பத்மநாதன், பிரதி இணைப்பாளர் லயன் வி.ஸ்ரீபிரகாஸ், ஹெந்தல லயன்ஸ் கழக இணைப்பாளர் லயன் கமிலஸ் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கால்களை இழந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 100 மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

100 பேரின் செயற்கைக் கால் பொருத்துவதற்கான அளவுகள் எடுக்கப்பட்டு தமிழ்நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டன. பெப்ரவரி மாத இறுதிப்பகுதியில் செயற்கைக் கால்களுடன் வருகைதரும் றோட்டரிக் கழக உறுப்பினர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கைக் கால் களைப் பொருத்தவுள்ளனர்.

மேலும், வழங்கப்படும் செயற்கால்கள் பழுது ஏற்படின் திருத்துவதற்குரிய உபகரணங்களும் எடுத்துவரப்பட்டு விசுவமடு மாற்றுத்திறனாளிகள் செயற்கை உறுப்புகள் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு வழங்கவுள்ளதாக றோட்டேரியன் பாபுக்கண்ணன் தெரிவித்தார். விசுவமடு மாற்றுத் திறனாளிகள் செய்கை உறுப்புக்கள் தொழில்நுட்ப நிறுவன இணைப்பாளர் அல்பிரட் அன்ரன், திட்ட இணைப்பாளர் கு.பிரேம்ராஜ் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற நிகழ்வில் ஹெந்தல லயன்ஸ் கழக இணைப்பாளர் லயன் கமிலஸ் பெர்னாண்டோவால் வழங்கப்பட்ட ஊன்று கோல்கள் நிகழ்வில் கலந்து கொண்ட லயன்ஸ் கழக மாவட்ட உப ஆளுநர் லயன்ஸ் வை.தியாகராசாவினால் 100 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (வ–9)

## பாஷையூர் கடற்கரையில் எம்.ஜி.ஆருக்குச் சிலை



கொழும்புத்துறை,ஜன.12

பாஷையூர் கடற்கரைப் பகுதியில் முன்னாள் தமிழக முதலமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு சிலை அமைக் கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாஷையூர் ஜிம்பிறவுண் குழுவினரால் அமைக்கப்பட்டு வரும் எம்.ஜி.ஆர். சிலை அமைவிடம் அவரது பிறந்த நாளான எதிர்வரும் சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

அந்தப் பகுதியில் முன்னர் இருந்த சிலை போர் நடவடிக்கைகளின் போது சேதமடைந் ததை அடுத்து தற்போது புதிதாக அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ–135)

## சுவாமி விவேகானந்தரின் 153 ஆவது ஜெயந்தி விழா

### உரும்பிராய் நலன்புரி நிலையத்தில்

வலி.தென்மேற்கு, ஜன.12

சுவாமி விவேகானந்தரின் 153 ஆவது ஜெயந்தி விழா மருதனார் மடம், உரும்பிராய் சந்தியிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் இன்று சிறப்பாக நடைபெற வுள்ளது.

நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சுவாமியின் ஆசிகளைப் பெறுமாறு விழாவின் இணைப்பாளர் எஸ். சிவமோகன் தெரிவித்துள்ளார்.

சுவாமியின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு காலையும் மாலையும் இரு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

தெல்லிப்பழை புற்றுநோய் ஆதார மருத்துவமனையில் இணைப்பாளர் எஸ்.சிவமோகன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி எஸ்.ஆர்.யூட் பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார். அதைத் தொடர்ந்து புற்று நோயாளர்களுக்கு மதிய உணவும் வழங்கப்படவுள்ளது.

உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் சி.திருவாகரன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி த.ஜெயசீலன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர்.

அதைத் தொடர்ந்து அறநெறி மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (வ–115)



## ஆவணங்களை அனுப்புமாறு ஓய்வூதியருக்கு அறிவுறுத்து

வரணி, ஜன.12

ஓய்வூதியர்கள் தங்கள் பின் உரித்தாளர்களுக்கு தங்களின் பிற்பாடு இலகுவாகவும் கால தாமதமின்றியும் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக பின்வரும் ஆவணங்களை தமது பிரதேச கிராம அலுவலரிடம் எதிர்வ ரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு தென்மராட்சி பிரதேச செயலக கணக்காளர் தனது பிரதேச ஓய்வூதியர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

ஓய்வூதியரின் பிறப்பு அத் தாட்சிப் பத்திரம், துணையுடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டைகள் இருவருடையதும் விவாகச் சான்றிதழ்கள் 20 வயதுக்குட்பட்ட பிள்ளைகளது பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஆகிய ஆவணங்களின் பிரதிகள் மற்றும் வலது குறைந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களது பிறப்புச் சாட்சிப் பத்திரம் மற்றும் மருத்துவச் சான்றிதழ்கள் என்பனவற்றை அனுப்பி உதவிடுமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் இதுவரை 2செ.மீ. 3 சென்ரிமீற்றர் அளவுள்ள வர்ண ஒளிப் படங்கள் 2ஐயும் அனுப்புமாறு கணக்காளர் மேலும் கேட்டுள்ளார். (வ–122)

## கற்பித்தல் செயற்பாடுகளில் வினைத்திறனை மேலும் வலுப்படுத்த புதிய நடவடிக்கைகள்

தென்மராட்சி, ஜன.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் வகுப்பறைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் வினைத்திறனை மேலும் வலுப்படுத்தும் வகையில் புதிய நடவடிக்கைகள் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்படும். தரம் 1 தரம் 6 மற்றும் ஜி.சீ.ஈ (உயர்தர) வகுப்புக்களில் அதியுயர் மாணவர்களின் எண்ணிக்கை 35 இற்கு மேற்படலாகாது.

ஒரு வகுப்புக்கான உச்ச மாணவர் தொகை 35 ஐ விட அதிகரிக்க வேண்டிய தேவையை எதிர்கொள்ளும்போது வலய அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருவகுப்பில் ஒருபிரிவுக்குமேல் இன்னொரு பிரிவை உருவாக்க வேண்டிய தேவையை எதிர்கொள்ளும் போது புதிதாக ஆரம்பிக்கப்படும் வகுப்புக்களில் ஆகக் குறைந்தது 20 மாணவர்களாவது இருப்பது அவசியமானது. அன்றேல் நியாயப்படுத்தும் சான்றுகள் பேணப்பட வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையும் தற்போது இயங்கிவரும் வகுப்பு, பிரிவுகளின் எண்ணிக்கை போன்றவற்றை மேலும் அதிகரிக்க வேண்டின் வலய அனுமதியைப் பெற வேண்டும்.

பாடசாலை அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவை வதிவிடமாகக் கொண்ட மாணவர்களுக்குப் பாடசாலை அனுமதியில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

எமது பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியையும் பாடசாலைகளின் இருப்பையும் கருதி தமது பிரதேசத்தில் உள்ளடங்காத கிராம அலுவலர் பிரிவிலுள்ள பாடசாலைகளிலிருந்து தமது பாடசாலைகளுக்கு மாணவர்களை உள்வாங்குவதை ஒவ்வொரு பாடசாலையும் தவிர்ப்பது விரும்பத்தக்கது.

ஆரம்பப்பிரிவு வகுப்புக்களின் ஒவ்வொரு வகுப்பிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளை (ஆகக்கூடிய மூன்று பிரிவுகள்) கொண்டுள்ள பாடசாலைகளும் அந்தந்த வகுப்புக்களில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்களை மட்டுமே வகுப்புக்களில் வைத்திருப்பதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

உயர்தர வகுப்புக்களில் பிரிவு ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்த மாணவர் எண்ணிக்கை 15 ஆக அமைவது விரும்பத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார். (வ–9)

# அம்மாடியோவ் இத்தனை பரிசுகளும் எமக்கா?

# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

**உதயன் 30ஆவது ஆண்டு**
**ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பலரிமனைப் பாவனைக்கு

## ஓவியப்போட்டி

| பிரிவு | தலைப்பு |
|---|---|
| பிரிவு A தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

## மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank Sisu Udana

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

## கட்டுரைப் போட்டி

பிரிவு Aபின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்துக்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிர்காலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

30 அகவையில் உதயன்


தை திங்கள் பொங்கல் திருநாளில்

புத்தாண்டு தனி சிறப்பு மலர்

100 பக்கங்கள்
விலை ரூ.100

- வடக்கின் முன்னணி எழுத்தாளர்களது சிறுகதைகள்.
- தமிழகத்தின் சிறந்த சிறுகதைகள் சில.
- முன்னணி ஈழத் தமிழ் கவிஞர்களின் கவிதைகள்.
- செவ்வாய் தோஷத்துக்கு என்ன பரிகாரம்?
- அதிர்ஷ்டம் தரும் நவரத்தினங்கள்.
- பெண்ணிய கட்டுரைகள்
- அரசியல் அலசல்கள்
- அரசியல் பேட்டிகள்
- விளையாட்டு
- சினிமா பேட்டிகள்
- தமிழின் பெருமை.
- விளக்குப் பூசை விரதங்களின் மகிமை.
- புத்தாண்டு பலன்கள்.
- மனையடி சாஸ்திரம்.
- மச்சங்களின் பலன்கள்.
- கைரேகை பலன்கள்.
- உலக அரசியல் அலசல்கள்
- காசி ஆனந்தன் கவிதை.
- அறிவியல் புதினங்கள்.
- நகைச்சுவை விடயங்கள்.

இன்னும் பல சுவாரஸ்ய அம்சங்களுடன்!

சிறப்பிதழுக்கான உங்கள் பதிவுகளுக்கு 'உதயன்' முகவர்களை உடனே நாடுங்கள்!

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கூட்டமைப்பினருக்கான அழைப்பு, நல்ல சமிக்ஞை

தேர்தல் பரப்புரைக் காலத்தில் அவிழ்த்து விடப்பட்ட அப்பட்டமான பொய்களுக்கு, நாட்டு மக்கள் குறிப்பாக தென்பகுதியில் உள்ள சிங்கள பேரின மக்களில் குறிப்பிடக்கூடிய எண்ணிக்கையினர் செவிசாய்க்கவில்லை என்பதை முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

தேர்தல் முடிந்தவுடனேயே வடக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கொடிகள் பறக்கவிடப்பட்டிருப்பதாகவும், போரில் சாவடைந்த புலிப் போராளிகளுக்கு பகிரங்கமாக அஞ்சலி செலுத்தப்படுவதாகவும், வடக்கிலுள்ள ராணுவ நிலைகள் மீது கல் வீசப்படுவதாகவும் விஷமிகள் தென்னிலங்கையில் வதந்திகளைப் பரப்பி இருந்தனர். ஆனால் இதனை உடனடியாகவே பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மறுத்து அறிக்கைகள் விடுத்தமை பாராட்டுக்குரியது.

கடந்த காலங்களில் இம்மாதிரி வதந்திகளே தெற்கில் இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டவர்களின் முதல் ஆயுதமாக இருந்துள்ளன. பொதுமக்கள் குறிப்பாக தென்னிலங்கை சிங்கள மக்கள் இந்த வதந்திகளுக்கு செவிமடுக்காமல் இருந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் பொலிஸ், இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் இதில் விழிப்புடன் இருந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி வாக்குறுதிகள் வழங்குவதில் வல்லவராகவும் அவைகளை காற்றில் பறக்க விடுவதில் அதை விட பல மடங்கு வல்லவராகவும் இருந்து வந்துள்ளார். தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவை பெருமளவில் அவர் இழந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்துள்ளது.

இப்பொழுது பதவியில் அமர்ந்துள்ள புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் வாக்குறுதிகளை முன்வைத்துள்ளார். தேர்தல் அறிக்கையில் தாம் அறிவித்தபடி செயல்பட ஆரம்பித்திருப்பதை அவர் பதவி ஏற்றுக்கொண்ட வைபவத்திலேயே பார்க்கக் கூடியதாய் இருந்தது.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் மிக எளிமையாக - ஆடம்பரமின்றி நடந்த வைபவம் அவர் கொள்கையின்படி மிகச் சிக்கனமாகவே நடந்து முடிந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவரான பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை புறக்கணித்து சிரேஷ்ட நீதியரசர்களில் ஒருவரும், தமிழருமான கே.ஸ்ரீபவன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அத்துடன் தனது வாக்குறுதிகளில் ஒன்றான ஐ.தே.கவின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தமக்கு வாக்களித்து வெற்றியை தேடித்தந்த மக்கள் மற்றும் கட்சித் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் குறிப்பிட்ட அவர் தமிழ்த் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் விட்டமையை பெரிய பிரச்சினையாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. அதைவிட மிகப் பெரிய பிரச்சினைகள் மக்களுக்கு உள்ளன.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களை புதிய ஜனாதிபதி கலந்துரையாடலுக்கு அழைத்திருப்பதை நல்ல சமிக்ஞையாக எடுத்துக் கொள்ள வேண்டும். 60 வருட காலப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வை கோரமுடியாது, அது மெதுவாகவே நகர்த்தப்பட முடியும். ஆனால், போரினால் இம்சிக்கப்பட்ட மக்களுக்கும், பிரதேசங்களுக்கும் உடனடியாகவே பரிகாரம் காணப்பட வேண்டிய விடயங்கள் இருக்கின்றன. அவைகள் முறையாக அணுகப்பட்டு தீர்த்து வைக்கப்படுமானால் புதிய ஜனாதிபதியை அபரிமிதமாக வாக்களித்து பதவியில் அமர்த்திய தமிழ் பேசும் மக்களுக்கு சற்று ஆறுதலாக இருக்கும் எனலாம்.



# புதிய ஜனாதிபதியுடன் கூட்டமைப்பின் சந்திப்பு

சேரலாதன்

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுடனும் கூட்டமைப்பினர் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூடிப் பேசியுள்ளனர். ஆனால் புதிய ஜனாதிபதியுடனான கூட்டமைப்பின் சந்திப்பு தற்போதைய புதிய அரசியல் சூழ்நிலையில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு கூட்டமைப்பு பகிரங்கமாகவே அழைப்பு விடுத்திருந்தது. அதை அடுத்து வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து சுமார் 9 லட்சத்து 78 ஆயிரம் தமிழர்களின் வாக்குகள் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைத்தன. இந்த வாக்குகளே ஜனாதிபதித் தேர்தலின் முடிவை ஒட்டுமொத்தமாக மாற்றிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

> தற்போது ஜனாதிபதியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தவர்கள் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவரிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிமையுடன் கோரிக்கைவிடும் சக்தியைப் பெற்றுள்ளனர்.


கடந்த 2005ஆம் ஆண்டைப் போன்றதொரு நிலை ஏற்பட்டு தமிழர்கள் தமது வாக்குகளை அளித்திருக்காதுவிட்டால் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் பதவியில் அமர்ந்திருப்பார்.

புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்தின் போது உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார். இதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் புதிய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம் அரசியல் தலைவர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், ஹெல உறுமயவின் தலைவர்கள், மக்கள் விடுதலை முன்னணியினர், சரத்பொன்சேகா ஆகியோர் முக்கியமாகக் குறிப்பிடப் பட்டிருந்தனர். ஆயினும், புதிய ஜனாதிபதிக்கு தமிழர் தரப்புகளின் வாக்குகளைத் தேடிக் கொடுத்த தமிழ்த் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடாது விட்டமை ஒரு குறைபாடாகவே அமைந்தது.

மனோகணேசன் இது தொடர்பான தமது ஆதங்கத்தை வெளிப்படையாகவே சொல்லிக் காட்டிவிட்டார். ஜனாதிபதியின் இடைமறதி தமிழ் மக்களின் மனங்களை உறுத்தவே செய்தது. எதிர்காலத்தில் இதுபோன்று நடைபெறாது பார்த்துக்கொள்வது நல்லது.

தற்போது ஜனாதிபதியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தவர்கள் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவரிடம் தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிமையுடன் கோரிக்கைவிடும் சக்தியைப் பெற்றுள்ளனர். குறிப்பாக எந்தவிதமான விசாரணையும் இல்லாது நீண்ட காலமாகச் சிறைகளில் வாடும் தமிழர்களின் பரிதாப நிலை, காணாமற்போனவர்கள் தொடர்பான பிரச்சினை, சொந்த இடங்களில் மீள் குடியமர முடியாதவர்கள் தொடர்பான விடயம், படையினரால் தொடர்ந்து ஆக்கிரமிக்கப் பட்டுவரும் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள், திட்டமிடப்பட்ட வகையிலான சிங்கள குடியேற்றங்கள், தமிழர்பகுதிகளில் பெருமளவில் குவிக்கப்பட்டிருக்கும் படையினரால் எழுந்துள்ள அசாதாரண நிலை, தமிழர் பகுதியில் திடீர் திடீரென் முளைக்கும் பௌத்த ஆலயங்கள், வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை ஆகிய விடயங்களை கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடனான தமது சந்திப்பின்போது எடுத்துக் கூறுவார்களென நம்பலாம்.

மேலும் தனிநாட்டைத் தாம் கோரப் போவதில்லையெனவும், ஒற்றை யாட்சியின் கீழ் தமிழ் மக்களுக்குரிய சகல அதிகாரங்களும் வழங்கப் படவேண்டும் எனவும் கூட்டமைப்பினர் ஏற்கனவே கூறியுள்ள நிலையில் புதிய ஜனாதிபதி கூட்டமைப்பினரின் கோரிக்கைகளை ஏற்பதில் தடையெதுவும் இல்லையென்றே கூற முடியும். ஆனால் சிங்களக் கடும் போக்காளர்களைக் காரணம்கூறி புதிய ஜனாதிபதியும் தமிழர் விடயத்தில் மெத்தனமாக இருப்பாரேயின் இந்த நாட்டில் தொடர்ந்தும் அமைதிச் சூழ்நிலை நிலவும் என்பதை எவரும் சிந்தித்துப் பார்க்கவே முடியாது.



# எதற்காக இந்த கொலைவெறி தாக்குதல்

பயங்கரவாதத்தைக் கண்டு பதற்றமடையாமல் இருக்க வேண்டியது மிகவும் முக்கியம். இப்படி ஏன் நடக்கிறது? அரசியல்ரீதியாக இப்படியொரு வன்முறைத் தாக்குதல் நடக்கும்போதெல்லாம் எழும் அர்த்தபூர்வமான கேள்வி இது: எதற்காக இப்படிக் கொலைவெறித் தாக்குதலை நடத்துகிறார்கள்? இதன் மூலம் எந்த மாதிரியான கருத்துகள் மக்களிடமிருந்து வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் அல்லது வரக் கூடாது என்று எதிர்பார்க்கிறார்கள்?

பிரெஞ்சுப் பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதலில் 12 பேர் இறந்திருப்பதை யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது. ஆயுதக் காவலருடன் இருந்த பத்திரிகை அலுவலகத்துக்குள்ளேயே நவீன ஆயுதங்களுடன் புகுந்து கொலைவெறித் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள் என்றால், தாக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு அனைத்து வகையிலான ஆதரவும் இப்போது தேவைப்படுகிறது. கருத்துச் சுதந்திரத்தைத் தூக்கிப் பிடித்ததற்காகக் கொல்லப்படுகிறார்கள், படுகாயப்படுத்தப்படுகிறார்கள் என்றால், அவர்களுடைய தொழில் ஆர்வத்தைப் பாராட்ட வேண்டும். அவர்களுடைய இறப்புக்கு அஞ்சலி செலுத்தப்பட வேண்டும்.

### பயங்கரவாதம் என்றொரு தொழில்நுட்பம்

பயங்கரவாதத்தை ஒழிக்க எளிதான வழி ஏதும் இல்லை என்று அதை ஆய்வுசெய்த ரிச்சர்ட் இங்கிலீஷ் எழுதியதைத்தான் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். பயங்கரவாதம் என்பது பயங்கரவாதிகள் கையாளும் தொழில்நுட்பம்தானே தவிர, அது சித்தாந்தம் அல்ல; பயங்கரவாதம் என்பது ஒரு செயலைச் செய்யும் விளைவுதானே தவிர, அதற்கான காரணம் அதுவல்ல. ஏராளமானோரின் உயிர்களைப் பறிப்பதன் மூலம் பயங்கரவாதிகள் இரண்டு விடயங்களைச் சாதிக்கப் பார்க்கிறார்கள். எங்களைப் பற்றி விமர்சித்தால் இதுதான் நடக்கும் என்று விமர்சித்தவர்களுக்கும் விமர்சிக்கப்போகிறவர்களுக்கும் எச்சரிக்கை செய்கிறார்கள். பிரெஞ்சு மக்களுடைய மனங்களில் தங்களைப் பற்றிய அச்சத்தைப் பரப்பியிருக்கிறார்கள். வேறு மாதிரியாகச் சொல்வதானால், சுதந்திரமாகச் சிந்திக்கும் மனிதர்களைக்கூட இனி குழு சார்ந்து சிந்திக்கவைக்க முயல்கிறார்கள். மேற்கத்திய ஜனநாயகம் அளிக்கும் சுதந்திரம் என்பது பெயரளவுக்குத்தான் என்று கருதும் அவர்கள், தங்களுடைய (மதம் சார்ந்த) கட்டுப்பாடு ஒருமுகமானது, வலுவானது, துணிச்சலானது, நிரந்தரமான முத்திரையைப் பதிக்கவல்லது என்று கருதுகிறார்கள்.

### அடிப்படைவாதத்தைப் படிக்கத் தவறிவிட்டோம்

மேற்கத்திய நாடுகள் கடந்த 25 ஆண்டுகளாகவே மத அடிப்படைவாதத்தை ஊன்றிக் கவனித்து, உரிய பாடம் படிக்கத் தவறிவிட்டன. எகிப்தின் சையித் குதுப் தொடங்கிய முஸ்லிம் சகோதர அமைப்பு, ஆப்கானிஸ்தானின் தலிபான்கள், ஈரானின் அயதுல்லாக்கள், பின்லேடனின் அல்–குவைதா, சிரியா–ஈராக்கின் ஐ.எஸ். ஆகிய அமைப்புகளில் மேற்கத்திய எதிர்ப்பு என்பது வெவ்வேறு அளவுகளில் கொதிநிலையில் உள்ளது.

மத்திய கிழக்கில் மேற்கத்திய நாடுகளின் தலையீட்டுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவது அவர்களுக்கு கலாசாரமாகவே ஆகிவிட்டது. இந்த இயக்கங்கள் தங்கள் மதத்தவர் வாழும் நாடுகளிலேயே மதச்சார்பற்ற அரசுகளைக்கூடச் சகித்துக்கொள்ள முடியாமல் கவிழ்ப்பதில் ஈடுபட்டன. பாத் கட்சியின் ஆட்சிகள் அப்படித்தான் எதிர்க்கப்பட்டன.

ஏராளமான அரசுகள் நிலைகுலைந்தன. ஜனநாயக நாடுகள் சர்வாதிகார நாடுகளாக மாறின. பல நாடுகள் தங்களுடைய மக்களுக்கு அளித்த சுதந்திர உரிமைகள் பலவற்றைப் பறித்தன. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யும் உரிமை, தனிப்பட்ட நபரின் தகவல் தொடர்பு உரிமை, சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கான உரிமை – ஏன் சில வேளைகளில் பேச்சுரிமையும் கூட – மறுக்கப்பட்டன அல்லது குலைக்கப்பட்டன. அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட அரசுகள், நாட்டு நலனுக்காக அதைச் செய்வதாகக் கூறிக்கொண்டு தப்பித்தன.

### பயங்கரவாதிகளின் எதிர்பார்ப்பு


பிரான்ஸ் நாட்டில் இப்போது செயற்பட்டுள்ள பயங்கரவாதிகளும், அரசு அதைப் போலவே செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அரசு தன்னுடைய கெடுபிடிகளை மேலும் இறுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஊடகங்கள் தங்களுடைய செயல்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அரசு கூற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

பலவீனமான, தோல்வியுற்ற அரசுகள்தான் இந்தத் தாக்குதலைத் தங்கள் மீது தொடுக்கப்பட்ட போராகக் கருதும். அவைதான் தங்களுடைய தலைவர்களுக்குப் பாதுகாப்பை அதிகரித்து அவர்களை நிலவறைகளில் தங்கவைக்கும். மக்களுடைய உரிமைகளைக் கொடூரமாகக் கட்டுப்படுத்தும். உண்மையை வரவழைப்பதாகக்கூறிச் சித்திரவதைகளைக்கூடக் கட்டவிழ்த்துவிடும். இப்படிப்பட்ட தாக்குதல்கள் எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் நடக்கும் என்பதை அரசியல் தலைவர்கள் ஏற்க மாட்டார்கள். சுதந்திரமான சமூகமே அதைக் கட்டுப்படுத்திவிடும் என்பதை அவர்கள் ஏற்க மாட்டார்கள்.

### அச்சம்தான் அடிப்படை

பயங்கரவாதம் சாதாரணமான குற்றச்செயல் இல்லை. அது ஏற்படுத்தும் விளைவுகளையும் பொறுத்திருக்கிறது. ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றும் அளவுக்கோ அரசுகளைக் கவிழ்க்கும் அளவுக்கோ அது ஆற்றல் மிக்கது அல்ல. மக்களின் மனங்களில் அச்சத்தை மூட்டக்கூட அது செய்தி ஊடகங்களையும் அரசியல்வாதிகளையும்தான் நம்பியிருக்கிறது.

பயங்கரவாதத்தை அதனுடைய எல்லை, அதிகாரத்துக்கு உட்பட்டுச் சென்றே சந்தித்தாக வேண்டும். பதிலுக்கு அச்சமூட்டினால் அது பயந்து விடாது. பயங்கரவாதச் செயல் நடந்த பிறகு அச்சத்தைக் காட்டக் கூடாது, அதிகமாக உணர்ச்சிவசப்படக்கூடாது, நடந்த சம்பவங்கள் குறித்து அதிக விவரங்களை வெளியிடக்கூடாது. ஒவ்வொரு தாக்குதலையும் ஒரு பயங்கர அனுபவமாக மட்டும் கருதி அதை அப்படியே கடந்து செல்ல வேண்டும். அப்படிச் செய்தால்தான் பயங்கரவாதிகளுக்கு குரூரத் திருப்தி ஏற்படாமல் போகும். பயங்கரவாதத்தை வெல்ல அது ஒன்றே வழி.



*நன்றி–தி கார்டியன்*

# வாசகர் திருமுகம்

## பல்கலைக்கழக தெரிவில் குறைபாடுகள்

ஆசிரியர் அவர்களே, நான் 2014ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தர) பரீட்சை எழுதிய மாணவன். எனது குறையொன்றை உங்களுக்கு அறியத் தருகின்றேன். அதை பத்திரிகையில் பிரசுரித்து எனக்குச் சரியான தீர்வொன்றைப் பெற்றுத்தாருங்கள். நான் இந்த க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சிறந்த பெறுபேறு எடுத்தும் நான் நினைத்த துறைக்குள் போக முடியாதுள்ளது. காரணம் பல்கலைக்கழகத் தெரிவில் உள்ள தவறுதான். மருத்துவத் துறைக்கு நாடளாவிய ரீதியில் 1,220 பேரை எடுக்கின்றனர். ஆனால் நான் 1,000 பேருக்குள் ஒருவனாக இருந்தும் எனக்கு மருத்துவத்துறை கிடைக்கவில்லை. இது என் தவறா? ஏன் இப்படியொரு தவறான பல்கலைக்கழகத் தெரிவு நடக்கின்றது? என்னை விட பெறுபேறு குறைந்தவர்கள் மருத்துவத்துறைக்குச் செல்கின்றனர். இது சிங்கள–தமிழ் பிரச்சினை இல்லை. ஏனெனில் கொழும்பில் என்னைவிட சிறந்த பெறுபேறு எடுத்த மாணவன் மருத்துவத்துறைக்குச் செல்லாமலிருக்கிறான். வடக்கில் சில மாவட்டங்களில் என்னைவிட குறைந்த பெறுபேறு எடுத்த மாணவன் மருத்துவத்துறைக்குச் செல்கின்றான். எல்லா இடங்களிலும் மாணவன் படிக்க கஷ்டப்படும் அளவு ஒன்று தானே! திறமைகூடியவன் திறமைகுறைந்தவனைப் பார்த்து பொறாமைப்படும் ஒரே நாடு இலங்கை தான் என்று நினைக்கிறேன்.
போனமுறை யாழ்ப்பாணத்தில் மருத்துவத்துறைக்குத் தெரிவான மாணவியொருவர்தான் மருத்துவத்துறைக்கு தெரிவானது தெரியாமல் மீண்டும் பரீட்சை எழுதி இந்தமுறையும் மருத்துவத்துறைக்குத் தெரிவாகி இருக்கின்றார். ஏன் இந்தக் குழப்பம்? நாடளாவிய ரீதியில் முதல் 1,220 பேரை மருத்துவத் துறைக்கு எடுத்தால் ஒரு குழப்பமும் ஏற்படாது. சிறந்த நியாயம். சகல மாணவர்களுக்கும் கிடைக்கும்.
இதை அரசியலாக்காதீர்கள். மருத்துவத்துறைக்குத் தகுதியில்லாதவன் மருத்துவம் படிக்கிறான். தகுதியானவன் மனவிரக்தியால் பாதை மாறிச் சீரழிகின்றான். இந்தச் செய்தியை வடமாகாண முதலமைச்சருக்கும்–புதிய ஜனாதிபதிக்கும் அறிய வைப்பது உங்கள் பொறுப்பு.
கல்வித் திட்டத்தை நன்றாக வைத்து பல்கலைக்கழகத் தெரிவை கேவலமாக வைத்திருப்பதற்குக் காரணம் என்ன? திறமையானவனுக்கு நியாயம் கிடைக்க வேண்டும்.
இது ஒவ்வொரு திறமையான மாணவனினதும் கதறல். கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள்.


*ரம்ஸ்டன், கொக்குவில்.*

## சொந்த மண்ணை மிதிப்போமா?

கடந்த பல ஆண்டுகளாக எமது சொந்த இடமான பலாலியில் இருந்து இடம்பெயர்ந்த நாம் இன்றுவரையும் அகதி வாழ்க்கையே வாழ்ந்து வருகின்றோம். எமது மண்ணில் விவசாயம் செய்து செழிப்பான வாழ்க்கை நடத்திய எமக்கு இன்று அகதி என்ற பெயரும் வறுமையுமே மிஞ்சிக் கிடக்கின்றன.
எமது சொந்த இடத்தில் குடியமர்வோமா என்ற நம்பிக்கையை இழந்திருந்த நாம் தற்போது புதிய ஜனாதிபதியொருவர் பதவிக்கு வந்ததால் நம்பிக்கை துளிர்விட்ட நிலையிலுள்ளோம். இது வரை அரசியல்வாதிகளால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுவந்த நாம், தற்போது எமது அவல நிலையில் மாற்றம் ஏற்படுமென நம்புகின்றோம். நாம் தற்போது தங்கியிருக்கும் இடங்களில் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொள்கின்றோம். சுன்னாகத்திலுள்ள கிணறுகளில் ஒயில்கழிவு கலந்து உள்ளதால் பிரதேச சபை வழங்கும் நீரையே பயன்படுத்துகின்றோம். எமது சொந்த மண்ணில் தலை வைத்துப் படுக்கும் பாக்கியம் இனியாவது எமக்குக் கிட்டுமா?

*பொ.நாகலிங்கம், சுன்னாகம்.*

### கேலிச் சித்திரம்





நன்றி: மவ்பிம

## ஐயோ என்ன சொல்வது?

ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த ராஜபக்ஷ, எதிரணியினருக்கு புலம் பெயர் தமிழர்கள் பணம் கொடுத்துள்ளனர். எதிரணியினர் மேற்குலகுடன் சேர்ந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முனைகின்றனர் என்றெல்லாம் பல்வேறு கதைகளை அவிழ்த்து விட்டிருந்தார். ஆனால் நடந்து முடிந்ததைப் பார்க்கும் போது, அவர் சொல்வதில் கொஞ்சம் உண்மையும், பொய்யும் கலந்திருக்கின்றது.
அதாவது புலம்பெயர் தமிழர்களும், மேற்குலகும் எதிரணிக்குப் பணம் கொடுக்கவில்லை. மஹிந்தவின் ஆஸ்தான சோதிடருக்கே பணத்தைக் கொடுத்துள்ளனர் என்று எண்ணத் தோன்றுகின்றது. இரண்டு வருடங்கள் எந்தக் குழப்பமும் இன்றி ஆட்சி நடத்தக் கூடிய சூழ்நிலை மஹிந்தவுக்கு இருந்தும், இல்லை என்று விடாப்பிடியாக இந்த ஆண்டு தேர்தலை நடத்த வைத்தது அவர்தான்.
தேர்தலை முற்கூட்டியே நடத்த வைத்து, நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது, மஹிந்தவின் சோதிடரே. மஹிந்த ஆட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதற்கு யாராவது நன்றி சொல்ல நினைத்தால் மஹிந்தவின் ஆஸ்தான சோதிடர், சுமணதாஸவுக்குத்தான் சொல்ல வேண்டும்.
கையில் தாயத்துக் கொடுத்தார்கள். அதுவும் சரிவரவில்லை என்று இந்தியாவின் கேரளாவிலிருந்து நம்பூதிகளை அழைத்து வந்து யாகம் நடத்தினார்கள். இறுதியில் பௌத்த மதம் மட்டுமே இலங்கையின் மதம் என்றும் ஏனைய மதங்களுக்கு இடமில்லை என்று சொல்லிக் கொண்டிருந்த மஹிந்தவை, திருப்பதியானைத் தரிசித்து, லட்டுத் தின்றால் தான் எல்லாப் பிரச்சினையும் தீரும் என்று சொன்னார்கள். அதையும் மஹிந்த செய்தார்.
இதனையும் தாண்டி, தேர்தல் நாளில் வாக்களிக்கச் செல்ல முன்னர், கையில் கட்டுக் கட்டாக நூல்களைக் கட்டியதுடன், அந்த நூல் கட்டுக்களுக்கு இடையில் புதிய தங்கத் தாயத்தையும் வைத்தார்கள். இதன் பின்னர் மஹிந்த தனது மனைவியின் கையால் ஒரு கிளாஸ் தண்ணீர் வாங்கிக் குடித்து விட்டு வாக்களிக்கப் போனார்.
ஒட்டுமொத்த இலங்கையையும் ஆட்டிப் படைத்த மஹிந்தவை சோதிடர்கள் ஆட்டிப் படைத்தார்கள். ஆனால் இறுதியில் எல்லாச் சோதிடங்களுக்கும் முன்னால், மக்களின் தீர்ப்பு வென்று விட்டது. சாத்திரங்கள் – சோதிடங்கள் மாத்திரம்தான் எங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் என்பவர்களுக்கு மஹிந்தவின் முடிவு நல்ல ஒரு பாடமாக அமையும். பார்ப்போம் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற மைத்திரியும், தனது தேர்தல் பரப்புரையின் போது கையில் தாயத்துடன் பங்கேற்றிருந்தார். ஆனால் மஹிந்தவைப் போன்று அவர், சோதிடத்தில் அவ்வளவு நம்பிக்கை கொண்டவராகக் காட்டிக் கொள்ளவில்லை.
புதிய ஜனாதிபதியாவது மக்கள் ஆணையை மாத்திரம் மதித்துச் செயற்படுபவராக இருக்கின்றாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.


பத்தி எழுத்து

# சிறுவர்



## ஒளிந்து விளையாடும் சூரியன், பூமி

நிலா பூமியைச் சுற்றி வருவது உங்களுக்குத் தெரியும். அப்படி ஒருமுறை சுற்றி வர இருபத்து ஒன்பதரை (29.5) நாள்கள் ஆகின்றன. இப்படி நிலா சுற்றி வருவதால் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே நிலா வருவதும், அப்புறம் சூரியனுக்கும் நிலாவுக்கும் இடையே பூமி வருவதும் மாறி மாறி நடக்கின்றன. பூமி மேல் சூரிய ஒளி படுவதைப்போல் நிலாவின் மேலும் சூரிய ஒளி படுகிறது. அதனால் ஏற்படும் எதிரொளியைத் தான் நிலாவின் வெளிச்சமாக நாம் பார்க்கின்றோம். சூரியனுக்கும் பூமிக்கும் இடையே நிலா வரும்போது, அதன் மேல் விழும் வெளிச்சத்தை நாம் பார்க்க முடியாது. அதனால் அந்த நேரத்தில் எமக்கு நிலா தெரியாது. இதைத்தான் 'அமாவசை'என்று சொல்கிறோம். அதன் பின்னர் சிறிது சிறிதாக நிலா நகர நகர, அதன் மேல் சூரிய ஒளி விழும் பரப்பும் அதிகரிக்கும். அப்போது ஒவ்வொரு நாளும் நிலா வளர்ந்து கொண்டே இருக்கும். இதைத்தான் வளர்பிறை என்று சொல்கிறோம் ஒரு கட்டத்தில் பூமியின்,இன்னொரு பக்கத்துக்கு நிலா வந்துவிடும். அப்போது சூரியனைப் பார்த்தால் இருக்கும் மொத்த பரப்பிலும் சூரிய ஒளிபட்டு எதிரொளிக்கும்போது முழு நிலவை, அதாவது பௌர்ணமியைப் பார்க்கலாம். இப்படியாகப் பூமியைச் சுற்றி நிலா தொடர்ந்து நகர்ந்து கொண்டே இருக்கும். அமாவாசையும் பௌர்ணமியும் மாறிமாறி வந்து கொண்டே இருக்கும்.



## மிதிவண்டி

*மிதித்தால் நகரும் வண்டி*
*மிடுக்காய் ஓடும் வண்டி*
*சக்கரம் இரண்டைச் சுற்றி*
*சவாரி போகும் வண்டி!*
*சிறுவர் பெரியவர் எவருக்கும்*
*சிக்கன மான வண்டி*
*சிட்டாய்ப் பறந்து சேருமிடம்*
*சீக்கிரம் போகும் வண்டி!*
*தினமும் ஓட்டி வந்தால்*
*காலுக்கு வலிமை உண்டு*
*உடலுக்கு உறுதி கொடுக்கும்*
*பயிற்சி அதிலே உண்டு!*
*எரிபொருள் ஏதும் வேண்டாம்*
*எளிதாய்த் தூரம் போகும்*
*வீட்டில் நிறுத்திவைக்க*
*கொஞ்சம் இடமே போதும்!*
*மோட்டார் வாகனம் போல*
*கரிபுகை ஏதும் இல்லை*
*பூமியை வெப்ப மாக்கும்*
*மாசு வருவது இல்லை!*
*இயற்கை அழிவைத் தடுக்க*
*சுற்றுச் சூழலைக் காக்க*
*நாமும் முடிவு எடுப்போம்*
*மிதிவண்டி பயணம் போக!*







## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2014 ஆம் ஆண்டு க.பொ.த.உ/த பரீட்சை
கலைப்பிரிவில் 2AB பெறுபேற்றைப் பெற்று
கிளிநொச்சி மாவட்ட நிலையில் **முதலாம்**
**இடத்தையும் தேசிய மட்டத்தில் திறமைச்**
**சித்தியையும் பெற்ற கிளி/அக்கராயன்**
**மகா வித்தியாலய** மாணவன்

**செல்வன் யோகரத்தினம்**
**யனுசன்**

அவர்களையும் கற்பித்த ஆசிரியர்கள்
அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் நலன்பேண்ஒன்றியம்,**
**கிளி/அக்கராயன் ம.வி.**

(55644)(4.7)

## இந்து பௌத்த கலாசார பேரவை- யாழ்ப்பாணம்







### வாழ்த்தி'வரவேற்கின்றோம்

எமது கலாசாரப்பேரவையின் வழிமுறை போஷகர் இலங்கை ஜனாதிபதி என்றவகையில் எமது நாட்டின் புதிய ஜனாதிபதி மாண்புமிகு **மைத்திரிபால சிறிசேன** அவர்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

தலைவர்- வண.அத்துறலிய ரத்னதேரர்
(பா.உ-கம்பஹா தொகுதி)
பொதுசெயலாளர்-தேசமானிய MTS இராமச்சந்திரன்,
ஜேர்மனிய சட்டஆலோசகர்
நிர்வாகம், மாணவர்கள்,ஆசிரியர்கள்.

**29, பழம் வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(55642)(4.3.7)

## காரைநகர் பல.நோ.கூ.சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி: கணக்காளர்**
**சம்பள குறியீட்டு இல:** 104/9
**சம்பள அளவுத்திட்டம்:** 66/2006 இற்கமைய
10900-130X10-140X10-13,650

**தகைமை**

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 10 ஆம் சம்பள அளவுத்திட்டத்தில் கணக்காளர்/உள்ளக கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் உள்ளகக் கணக்குப் பரிசோதகர்/கணக்குப்பதிவாளர்/கணக்கு அல்லது கணக்குப் பரிசோதகர் அலுவல்கள் சம்பந்தமாய எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதவியாளர் நிறுவனம் இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமாய் மேற்பார்வை மட்டப் பதவியில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி/கூட்டுறவுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டுகால அனுபவம் அல்லது க.பொ.த.உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட (03) மூன்று பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுத் துறையில் ஆகக்குறைந்தது (05) ஐந்து வருட கால அனுபவம்.

**02.பதவி: பயிற்சி கிளை முகாமையாளர்**

**தகைமை:**

★ க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.
★ கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருபப்படி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.
★ வயதெல்லை 18-45 (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.) கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
★ விண்ணப்பப்படிவத்தை தலைமை அலுவலகத்தில் ரூபா 20.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். விண்ணப்பப்படிவத்துடன் தகைமை தொடர்பான விவரங்களும் இணைக்கப்பட்டுள்ளன.
★ தெரிவு செய்யப்படுபவர் கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பிணைப்பணம் செலுத்த வேண்டும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் யாவும் 31.01.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தபால் உறையின் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டிலக்கம் தவறாது குறிப்பிடல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**பல.நோ.கூ.சங்கம் (வ-து), காரைநகர்.**

(C/18917)(4.7.3)

## ஆக்கம்

# தொழில் தேர்ச்சி வாண்மையை எமது மாணவர்களும் பெறுவதற்கான சந்தர்ப்பம்

### யாழ்ப்பாணத்திலும் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பம்

பாடசாலை மாணவர்கள் இடைநிலை உயர் கல்வியைத் தொடர்ந்து தொழிற்தேர்ச்சியைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் போதுமானதாக எமது பிரதேசங்களில் இல்லை. கல்விக்கும் தொழில்வாய்ப்புக்கும் பொருத்தமான தொடர்பு போதாத சூழலில் இதனை நிவர்த்தி செய்யும் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் பல்கலைக்கழகக் கல்லூரிகளின் வருகை மிக முக்கியமானது. இலங்கையில் 2015ஆம் ஆண்டுக்கான தொழிற் கற்கை நெறிக்கான விண்ணப்பங்களைப் பல்கலைக்கழகக் கல்லூரிகள் வேண்டி நிற்கின்றன. விண்ணப்ப முடிவு திகதி 2015 ஜனவரி 15ஆம் திகதியாகும். யாழ்.மண்ணில் இந்தவருடம் புதிதாக இந்தக் கல்லூரி ஆரம்பமாகின்றது.

**விழிப்புணர்வு தேவை;**

இரத்மலானை, குளியாப்பிட்டி, அநுராதபுரம், மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகக் கல்லூரிகளில் இந்த வருடம் 24 பாடத்துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த.உயர்தரம் சித்தியடைந்தமாணவர்களும், தொழில்நுட்பக்கல்லூரியில் NAITA, VTA என்பவை மூலம் NVQ4 மட்டச் சான்றிதழ் பெற்றவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். இந்தக் கற்கை நெறிகள் தொடர்பான விழிப்புணர்வு பாடசாலை ஆசிரியர், அதிபர், மாணவர்கள், வலயம், மாகாண, தேசிய மட்டத்தில் போதுமானதாக இல்லை. சகல க.பொ.த. உயர்தரம் உள்ள பாடசாலை ஆசிரியர்களும் பல்கலைக்கழக கல்லூரிகளின் பாடநெறிகள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்காதநிலை எமது மண்ணில்காணப்படுவதுமிகவேதனையாகவுள்ளது.

பொருத்தமான தகுதியுடைய மாணவர்கள் இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரி தொழிற்றுறைப் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்காமல், அதன் பயனை அனுபவிக்காமல்உள்ளார்கள். தொழில் கல்விக்கு வழிகாட்டல், தொழிலுக்கு வழிகாட்டல் பாடசாலைக் கல்விமுறையின் பொறுப்பாகும். இந்தப் பல்கலைக்கழக கல்லூரிகளில் கற்கை நெறிகள் யாவும் எதிர்கால தொழில் உலகுக்கு ஏற்பமிகப்பொருத்தமானதொழில் வாண்மைத்தேர்ச்சிகளைவழங்குகின்றன. இலங்கையிலும், உலகத்திலும் எங்கும் தொழிலைச் செய்யக் கூடிய சர்வதேச தேர்ச்சிச் சான்றிதழ்பட்டக் கற்கையாக இந்தப் பாடநெறிகள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

ஆங்கில மொழி மூலம் இந்தக் கற்கை நெறிகள் நடத்தப்படும்.

> "க.பொ.த. சாதாரணதர உயர்தர மாணவர்களுக்கான தொழிற்கல்வி, தொழில் வழிகாட்டல் செயன்முறை முழுமையாக விழிப்புணர்ச்சி அடையவில்லை."

போட்டிப் பரீட்சை, நேர்முகத்தேர்வின் மூலம் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**விண்ணப்பப் படிவங்களைப் பெறுதல்**

யாழ்ப்பாணத்திலுள்ள பூபாலசிங்கம், தென்மராட்சி பொதிகை, வடமராட்சி சிதம்பரப்பிள்ளை, கிளிநொச்சி அறிவு நதி, மன்னார் ஜோதி மற்றும் பிரபலமான புத்தக சாலைகளில் விண்ணப்பப்படிவங்களையும் அறிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் Online மூலமாக wwwyouthskillsmin.gov.lk மூலமாகவும் விண்ணப்பப் படிவங்களைப் பார்த்து அதனூடாகவே அனுப்பலாம். இந்த விடயங்கள் தொடர்பான பாடசாலைகள், முறைசாரக் கல்விப் பிரிவுகள், ஊடகங்கள் மூலமாக அறிவுறுத்தல்கள் வழங்கியும் எமது பிரதேசத்திலிருந்து போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறவில்லை. எமது மாணவர்களுக்குச்சரியானதொழிற்கல்வி வழிகாட்டல்கள் கிடைக்காத நிலையும், உரியவர்கள் பொறுப்பற்றுக் காணப்படலும் மிகவேதனையளிக்கின்றது. 31.12.2014 இல் முடிவுதிகதியாகவர்த்தமானி அறிவித்தல்படி இருந்தும் விண்ணப்பங்களை மேலும் பெறுவதற்காக 15.1.2015வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, உரிய பாடசாலை மாணவர்கள் இந்தப் பாட நெறிகளுக்கு விண்ணப்பங்களை அனுப்ப ஆசிரியர், அதிபர்கள் ஊக்கம் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்தப் பாட நெறிகள், தொழில் கல்வி, தொழில் வாழ்க்கை, எதிர்கால இளைஞர்களின் தொழில் வளர்ச்சி, சிறந்த முறையில் தொழிலை உள்ளூரிலும், வெளியூர், வெளிநாட்டிலும் செய்து வருமானம் பெறக்கூடிய சந்தர்ப்பங்களை வழங்குகின்றன. முதல் ஆறு மாத அடிப்படைக் கற்கை நெறிகளைக் கற்றதும் பல்கலைக்கழக கற்கை நெறிகளுக்கு ஈடாகடிப்ளோமா, உயர் டிப்ளோமா பட்டங்களைப் பெறும் சந்தர்ப்பம்கிடைக்கின்றன. தொழில் சந்தைகளில் உடனடி வேலைவாய்ப்புக்கிடைக்கின்றது. மேலும்,இப்பாடநெறிகள்தொழில் துறை சார் பிரயோகக் கற்கைகளையும் கொண்டுள்ளன. ஆறு மாதங்களுக்கு குறித்த அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவனங்களில் உள்ளகப் பயிற்சியும் வழங்கப்படும். இதுவரை காலமும் NVQ மட்டம் 5, மட்டம் 6, மட்டம் 7 என்பவற்றுக்கான பட்டச்சான்றிதழ்கள் இரத்மலானை தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (univote) வழங்கப்பட்டன. தற்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் உட்பட பல்கலைக்கழகக் கல்லூரிகளில் அவற்றைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி:**

இந்தப்பல்கலைக்கழகக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டமை மிக முக்கிய ஒரு செயன் முறையாகும். மனிதவளத்தைப்பெரிதும்கொண்டுள்ள எமது பிரதேசத்தில் தொழிற் கல்வி, தொழில் செய்வதற்கான வாய்ப்புக்கள் போதாமல் உள்ளன.

இளைஞர்கள், யுவதிகள் தொழிற் பயிற்சியின்றி, தொழில் வாய்ப்பற்று சமூக சீர்கேடுகளிலும், விரக்தி நிலையிலும் காணப்படுகின்றார்கள். க.பொ.த. சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்கானதொழிற்கல்வி, தொழில் வழிகாட்டல் செயன்முறை முழுமையாக விழிப்புணர்ச்சி அடையவில்லை. இந்தச் சூழலில்பல்கலைக்கழகக்கல்லூரியை யாழ்ப்பாண மண்ணில் ஆரம்பித்தமை எமக்கொரு வரப்பிரசாதமாகும். தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் இந்தக் கல்லூரி சிறப்பாக இயங்கி, எமது இளைஞர், யுவதிகளுக்கு வளமான தொழில் வாழ்க்கையை வழங்க வேண்டும். அவர்கள் தொழில் தேர்ச்சி பெற்று வளமான ஒளிமயமான வாழ்வு பெறவேண்டும். புதிய தொழில்களை அவர்கள் உருவாக்கி தொழில் வளம் பெருக்கும் நிபுணத்துவ சேவையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி கல்வியியலாளர்கள் எமது மண்ணுக்கு வழங்க வேண்டும். ஒரு புதிய நிலையான தொழில் வாண்மைத் தேர்ச்சியை எமது இளைஞர், யுவதிகள் பெற ஒரு அரிய வாய்ப்பு என்ற வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆரம்பம் இதற்கு ஒரு மைல் கல்லாகும். பாடநெறிகளைப் பயிற்றுவிப்பதுடன் பாடசாலைகள், அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் உயிர்த் துடிப்பான இணைப்புக்களுடன் பல்வேறு செயலமர்வுகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் இந்தக் கல்லூரி மேற்கொள்ள வேண்டும்.

**பா.தனபாலன்,** இணைப்பாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## வணிகம்



# ஜி.ஐ.இசற் தொழிற்பயிற்சி கருத்திட்டம் கிழக்கிலும்

பொருளாதார வளர்ச்சியானது நிலையான சூழமைவுகளையும், விளைத்திறனான நிறுவனங்களையும், தொழிற்படும் சந்தைகளையும், நீடித்து நிலைக்கக் கூடிய நிதிச் சேவைகளைச் சென்றடையக் கூடிய நிலைமையையும், வேண்டி நிற்கிறது.

ஆனாலும் இவை அனைத்துக்கும் மேலாக எல்லாப் பொருளாதார முன்னேற்றங்களிலும் மையமாக இருப்பவர்கள் நன்கு பயிற்றப்பட்ட ஆள்களேயாவார்.

நாட்டின்தொழில்பயிற்சிதுறையை மெருகூட்டுவதில் ஒரு முக்கிய பங்காண்மையாளராக அண்மைக்காலச் செய்திகளில் இடம்பெற்றிருந்த இலங்கையின் வடக்கிலான தொழிற் பயிற்சிக் கருத்திட்டத்தின் செயற்பாடுகளில் இது பிரதிபலிக்கிறது. வரலாற்று ரீதியாக ஜேர்மனியானது இந்தத் துறையின் அபிவிருத்திக்கான, பங்களிப்புக்களில் பிரபல்யமாக இருப்பதுடன், கடந்த ஆண்டில் இலங்கையில் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதிலான கூட்டுழைப்பின் 50 ஆவது ஆண்டைக் கொண்டாடியது. ஜேர்மன் ரெக் நியமங்கள் எனப் பிரபல்யமாக அறியப்படுவதானது, இன்று நாட்டின் தரமான தொழிற்பயிற்சிக்கான ஒரு அளவுகோலாக உள்ளது.

இலங்கையின் வடக்கில் ஜி.ஐ. இசற் தொழிற்பயிற்சிக் கருத்திட்டத்தின் ஊடான இந்தத் துறைக்கு ஜேர்மனியால் செய்யப்பட்ட அடுத்த பங்களிப்பானது கிளிநொச்சியிலுள்ள இறுதியான உயர்தர தொழில்நுட்பங்களுடன் கூடிய பயிற்சி நிலையத்தின் வடிவத்தை எடுப்பதுடன், இது வடக்கின் ஏனைய இடங்களிலுமுள்ள இளைஞர்களுக்குத் தொழிற் சந்தையில் போட்டியிடுவதற்கு அவர்களுக்குத் தேவையான திறன்களை அவர்களுக்கு அளிப்பதற்குச் சேவையாற்றும்.

இந்தக் கருத்திட்டமானது இப்பொழுது சுவிற்ஸர்லாந்து அரசின் புலம்பெயர்வுக்கான சமஷ்டி அலுவலகத்தின் இணை நிதியீட்டத்துடன் அதன் செயற்பாடுகளை கிழக்குப் பிராந்தியத்துக்கும் இப்பொழுது மேலும் விஸ்தரிக்கப்படுகிறது. (த)

# ஒரேன்ஜின் புதிய அறிமுகம்

உலகத் தரம் வாய்ந்த எலெக்ரிக் மற்றும் மின்குமிழ்களை விநியோகிக்கும் முன்னணி நிறுவனமான ஒரெல் கோபரேஷனின் ஒரேன்ஜ் நிறுவனம் Office automation 2014 என்ற தொகுப்பை இலங்கைக்கு அறிமுகம் செய்தது.





இந்தஅறிமுகம்செய்யும்நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வின்போது அடுத்து வரும் சந்ததியினருக்கு சர்வ தேச தரம் வாய்ந்த முடிவுக் பொருள்களை இலங்கையிலும் ஒரேன்ஜ் இலச்சினையில் விநியோகிக்க நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஒரேன்ஜ் நிறுவனத்தின் இந்த விசேட நிகழ்வின் போது, நிறுவன துறைசார் உண்மையான எண்ணியல் வாழ்க்கை முறைமைக்கான அனுபவத்தையும் எதிர்காலத்துக்கான உற்பத்திகள் மற்றும் தொழில்நுட்பத்தையும் அறிமுகம் செய்தது.

ஒரேன்ஜ் எலெக்ரிக் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட இந்த Office automation தொகுப்பில் WiFi மற்றும் தொடர்பு சாதனங்கள், தடையில்லாத மின் உற்பத்தியாக்கிகள், சிறந்த தொலைத்தொடர்பு இணைப்புக்கள் மற்றும் தரம் வாய்ந்த பாதுகாப்பு Cameras ஆகியன உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரேன்ஜ் நிறுவனம் பல்வேறு சர்வதேச முன்னணி தொழில் துறையினருடன் கைகோர்த்து, தரம்வாய்ந்த பொருள்களை உள்ளூர் சந்தையில் அறிமுகம் செய்வதில் முக்கிய பங்கு வகிப்பதோடு, அமெரிக்காவைத் தளமாகக் கொண்டுள்ள நிறுவனம் ஒன்று 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான WiFi மற்றும் தொடர்பு சாதனங்களை சந்தைப்படுத்த முன்வந்துள்ளதோடு, இலத்திரனியல் அமைப்பு தொடர்பான வடிவமைப்புக்கு ஐக்கிய இராஜ்ஜியத்தைத் தளமாகக் கொண்ட Farnell தொழில்நுட்ப மற்றும் தீர்வுகளை வழங்க முன்வந்துள்ளதுடன், பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் தொடர்பான விடயங்களை பிரான்ஸை தளமாகக் கொண்டு இயங்கும் Numeric Legrand UPS நிறுவனமும், எவ்வித தடையும் இல்லாமல் மின் உற்பத்தியாக்கிகளை சர்வதேச சந்தைக்கு வழங்கும் உலகப் புகழ்பெற்ற 4 ஆவது பெரிய விநியோகிப்பு நிறுவனமாகும்.

# தொழில்நுட்பம்



## அதிவேகமாகச் செல்லும் விமானம்

உலகின் எந்த மூலைக்கும் நான்கு மணி நேரத்தில் பயணிக்கக் கூடிய வகையில் ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் செல்லும் நவீன ரக விமானத்தை இங்கிலாந்தை சேர்ந்த ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தயாரித்து வருகின்றது.

தரையில் இருந்து புறப்படும் போது விமானத்தின் வேகத்திலும், புவி ஈர்ப்பு சக்திக்கும் மேற்பட்ட உயரத்தில் பறக்கும் வேளையில் ராக்கெட் வேகத்திலும் சீறிப்பாயும் இந்த விமானத்தை தயாரிக்கும் இரண்டாம் கட்ட முயற்சிகள் வெற்றியடைந்துள்ளன.

முந்தைய முயற்சிகளில் ஆயிரம் டிகிரி செல்ஷியஸ் அளவிலான வெப்பத்தை, ஒருநொடியின்நூறில் ஒருபங்குநேரத்தில் 150 டிகிரி வெப்பநிலையாக குளிர் விக்கக் கூடிய தொழில்நுட்பத்தின் உதவி யுடன் ஒலியை விட இரண்டரை மடங்கு வேகத்தில் பாயும் ஜெட் எஞ்சின்கள் தயாரிக்கப்பட்டு வந்தன.

ஆனால், இதைவிட இரு மடங்கு வேகத்தில், அதாவது ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் செல்லும் ஜெட் எஞ்சின்களை இங்கிலாந்தை சேர்ந்த ஒரு நிறுவனம் தயாரித்து, அதற்கான காப்புரிமையையும் பெற்று வைத்துள்ளது.

எனினும், வர்த்தக ரீதியாக இந்த வகையிலான விமானங்களை இந்த நிறுவனம் தயாரிக்கவில்லை. இந்த நிலையில், இந்தத் தொழில்நுட்பத்தை விலைக்கு வாங்கி, ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் செல்லும் நவீன விமானங்களை தயாரிப்பதற்கான பரிசோதனை முயற்சியின் இரண்டாவது கட்டத்தில் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தற்போது வெற்றி பெற்றுள்ளது.

இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, பயணிகள் விமானங்களுக்கான சிறிய வகை எஞ்சின்களை சுமார் 250 கோடி ரூபாய் செலவில் இன்னமும் 3 ஆண்டுகளுக்குள் தயாரிக்க ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் திட்டமிட்டுள்ளது.

இதனையடுத்து, இந்த வகையிலான நவீன விமானங்களைத் தயாரித்து விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விமானத்தின் மூலம் உலகின் எந்த மூலைக்கும் நான்கே மணி நேரத்தில் செல்லலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நவீன வகை ஸ்ப்ரே தொழில்நுட்பத்துடன் நாங்கள் தயாரிக்கவுள்ள ஸ்கைலான் விமானங்கள் இன்னமும் 10 ஆண்டுகளில் வணிக ரீதியில் விற்பனைக்கு வந்துவிடும் என்று இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த ஸ்கைலான் விமானங்களின் மூலம் விண்வெளிக்கு செயற்கைக் கோள்களையும் அனுப்பி வைக்க முடியும். இதன் மூலம், செயற்கைக் கோள்களை விண்வெளிக்கு சுமந்துச் செல்ல ராக்கெட்டுகளின் உதவியை எதிர் பார்க்கும் தற்போதைய சூழ்நிலையில் மாற்றம் ஏற்படும். ஸ்கைலான் விமானங்களின் மூலம் மிகக்குறைந்த செலவில் விண்வெளிக்கு செயற்கைக் கோள்களை அனுப்பி வைக்க முடியும் எனவும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## கூகுள் +

### பயனர்களுக்கான அதிரடி வசதி

சமூகவலைத்தளங்களில் புகைப்படங்கள், வீடியோ கோப்புக்கள் பகிரப்படுவது இன்று அதிகளவில் இடம்பெறுகின்றது.

இவற்றில் வீடியோக்கள் பல்வேறு வகையான சாதனங்களைக் கொண்டு பதிவு செய்யப்படுகின்றன. இவ்வாறு வெவ்வேறு சாதனங்களின் உதவியினூடாக பதிவு செய்யப்படுவதனால் அவற்றின் தரம் மாறுபடுகின்றது.

இதனால் Google+ இல் பதிவேற்றப்படும் வீடியோக்களின் தரத்தை வெளிச்சம், கலர் போன்றவற்றினூடாக மாற்றம் செய்யும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த வசதியை ஒரே ஒரு கிளிக் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. Android, Windows, Mac மற்றும் Chrome OS ஆகிய இயங்குதளங்களில் Google+ இனைப் பயன்படுத்தும்போது இந்த வசதியை பெற்றுக்கொள்ள முடியும்.

எனினும் இந்த வசதி நேரடியாக தரப்படாமையினால் பயனர்கள் தாமாகவே உருவாக்கிக்கொள்ள வேண்டும்.


**ஸப்தஸ்வரம் இசையமைப்பு ஒலிப்பதிவுக் கலையகம்.**
**SUBTHASWARAM MUSIC COMPOSING STUDIO**

- புதிய பாடல் இசையமைப்பு
- குறும்படம் இசையமைப்பு
- ஏனைய அனைத்து ஒலிப்பதிவு தேவைகளுக்கும்

ஈழத்து, இந்திய கலைஞர்களின் இசை வண்ணத்தில் புதிய பாடல் ஆக்கத்திற்கும் நாடுங்கள்.



விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு.
தொடர்பு- இசையமைப்பாளர் ஸ்ரீகுகன். தொ.பே: 077 698 0573



**யா/வயாவிளான் மத்திய கல்லூரி வயாவிளான்**

யா/ வயாவிளான் மத்திய கல்லூரியின் 69ஆவது நிறுவுநர் தினம்

யா/வயாவிளான் மத்திய கல்லூரியின் 69 நிறுவுநர் தினம் எதிர்வரும் 16.01.2015 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கல்லூரியின் ஆ.சி.நடராஜா அரங்கில் கல்லூரியின் முதல்வர் தலைமையில் இடம் பெற உள்ளது. அன்றையதினம் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-பாடசாலைச் சமூகம் (55784) (45.3)



**கடை வாடகைக்கு விடப்படும்**

கொடிகாமம் சந்தி A-9 வீதியில் பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக 52 அடி நீளமும் 15 அடி அகலமும் சகல வசதிகளும் கொண்ட புதிதாக அமைக்கப்பட்ட கடை ஒன்று வாடகைக்கு விடப்படும். வரையறுக்கப்பட்ட நிறுவனங்களும் அரச நிறுவனங்களும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 401 1699 (45.3)



**செல்லா சினிமா யாழ்ப்பாணம்**



தைப்பொங்கல் வெளியீடு AC / DTS
40அடி அகலம் LED திரையில்
14 முதல்
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில் சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30
ஐ



**தேவை**

நெல் கொள்முதல் செய்யப்படும்.
மில் வேலை தெரிந்தவர்கள் தேவை.
தொடர்பு - 077 772 2215 (55773) (45.3)



**விற்பனைக்கு**

தாவடியில் School Lane இல் 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. அத்துடன் தனி வழிப்பாதையுடன் 2½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 727 9052, 077 281 4552 (55172)(45.3)



**முகாமையாளர் தேவை**

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல கணினி நிலையம் ஒன்றை நிர்வகிப்பதற்கு ஆளுமை மிக்க நபர் ஒருவர் தேவை.
(கணினி அறிவு விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 758 5920 (c.19042)(45.3)



**பிரத்தியேக வகுப்புக்கள்**

A/L- கலை, வர்த்தக வகுப்புக்கள் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். G.A.Q. B.A போன்ற வகுப்புகளுக்கு தமிழ், இந்துநாகரிகம், அளவையியல் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.072 351 5596 (55752)(45.3)



**இந்து நாகரிகம்**

புதிய வகுப்புகள் ஆரம்பம்
A/L - 2017
ஆசிரியர்: ஸ்ரீதரன் B.A.
ஆரம்பம்: 18.01.2015(ஞாயிறு)
முற்பகல் - 10 மணிக்கு
புதிய சாயி அக்கடமி
முடமாவடி சந்தி, கோயில்வீதி, நல்லூர்.
தொடர்பு: 077 6980 573 (c.19042)(45.3)



A Multi Disciplinary Dental Care
UNIQUE DENTAL CARE
Lava Hospitals

பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் அனைத்து வகையான சிறந்த பல் வைத்திய சேவைகளுக்கும்.

561, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(55410) (4.5.7) 021 221 2599



**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி**

கல்வி யாழ்ப்பாணம்
6th Jaffna International Trade Fair
JITF 2015

ஜனவரி 23 ஆம், 24 ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில்
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 8.00 வரை
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
(சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக)

தினசரி இசை நிகழ்ச்சி
www.jitf.lk

DAILY MUSICAL SHOWS & STUNT RIDERS Show

MAIN SPONSOR
STERLING AFTER CARE GUARANTEE
FPS
Telecom
Britex
BOC
Sri Lanka Export Development Board
LECS
CCIY

# உலகச் செய்திகள்

## நூலிழையில் தப்பினார் கர்நாடக முதல்வர்




கர்நாடகமுதல்வர்சித்தராமையா பயணிக்க இருந்த ஹெலியில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

பெங்களூர் விமான நிலையத்தில் இருந்து மைசூர் செல்வதற்காக கர்நாடக முதல்வர் சித்தராமையா மற்றும் அமைச்சர்கள்மகாதேவப்பா,ஜோர்ஜ்ஆகியோர் தனி ஹெலியில் ஏறினர். அந்த ஹெலியை விமானி இயக்கியபோது, அதன் சைலன்சரில் இருந்துதீப்பொறிகள் எழுந்தன. அதையடுத்து, அவசரமாக முதலமைச்சர் சித்தராமையா மற்றும் அமைச்சர்கள் ஹெலியில் இருந்து இறங்கினர். இதைத் தொடர்ந்துஉடனடியாகத் தீஅணைக்கப்பட்டது. இதில் எவருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை. அதையடுத்து, முதல்வர் சித்தராமையா மற்றும் அமைச்சர்கள் கார்மூலம்மைசூருக்குப்புறப்பட்டுச் சென்றனர். (வ)




பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள 'சார்லி ஹெப்தோ' வார இதழ் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை புகுந்த அல்குவைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில், வார இதழின் ஆசிரியர் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். இதனைக் கண்டித்து பிரான்ஸின் தென்கிழக்கு நகரான மார்ஸைலில் பல்லாயிரக்கணக்கானோர் நேற்று முன்தினம் நடத்திய பேரணி. (வ)





## தீவிரவாதியின் காதலி தாக்குதல் நடத்தலாம்

### பிரான்ஸ் ஜனாதிபதி எச்சரிக்கை

பாரிஸ், ஜன.12

பிரான்ஸில்தப்பியோடிய பெண் தீவிரவாதியால் மீண்டும் தாக்குதல் நடத்தப்படலாம் என்று ஜனாதிபதிபிரான்கோசிஸ்ஹாலண்டே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள சார்லி ஹெப்தோ வார இதழ் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமைபுகுந்தஅல்குவைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில், வார இதழின் ஆசிரியர் உட்பட 12 பேர் உயிரிழந்தனர்.

கடந்த 3 நாளில் 17 பேரை கொன்ற 3 தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டதால் பாரிஸில் நிலவி வந்த பதற்றம் ஓய்ந்தது.

இந்த நிலையில் பிரான்ஸ் ஜனாதிபதிபிரான்கோசிஸ்ஹாலண்டே முக்கியஅமைச்சர்களுடன்நேற்று முன்தினம் அவசர ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அவர் அளித்த பேட்டியில்,

"பிரான்ஸ்க்கு உள்ள தீவிரவாத அச்சுறுத்தல் இன்னும் ஓயவில்லை. தப்பி ஓடிய தீவிரவாதியின் காதலி ஹயாத் பவுமெட்டைனியிடம் பயங்கர நவீன ஆயுதங்கள் உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

அவர் பாரிஸில் மீண்டும் ஒரு தாக்குதலை அரங்கேற்ற இருப்பதாகவும் உளவுத் தகவல்கள் வெளியாகி உள்ளன. தப்பிய பெண் தீவிரவாதியை தீவிரமாக தேடி வருகிறோம்" என்று கூறியுள்ளார். (வ)

## பாக்.ராவல்பிண்டியில் தாக்குதல்; 7 பேர் சாவு

இஸ்லாமபாத், ஜன.12

பாகிஸ்தானில் ராவல்பிண்டி நகரில் ஷியா பிரிவினர் அதிகளவில் வசித்து வருகின்றனர். இங்கு உள்ள மசூதி ஒன்றில் நேற்று முன்தினம் மனித வெடிகுண்டுப் படை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்கே ராவல்பிண்டி நகரம் வர்த்தக மற்றும் முக்கிய இராணுவத்தளமாக அமைந்துள்ளது. அங்கு பாகிஸ்தானின் சிறுபான்மைப்பிரிவினரான ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகளவில் வசிக்கின்றனர். அங்கு உள்ள மசூதி ஒன்றில் நேற்றுமுன்தினம் நண்பகல் தொழுகை நடைபெற்றது. இத்தொழுகையில் நூற்றுக்கும்மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். தொழுகை முடிந்தவுடன் நபிகள் பிறந்த நாளை முன்னிட்டு இனிப்புகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன.



அப்போது மசூதிக்குள் இருந்த மனிதவெடிகுண்டுப்படைத்தீவிரவாதி ஒருவன், தனது உடலில் பொருத்தியிருந்த சக்திவாய்ந்த வெடிகுண்டுகளைவெடிக்கச் செய்தான். இந்த வெடிகுண்டுத் தாக்குதலில் மசூதியின் கண்ணாடி ஜன்னல்கள் வெடித்துச் சிதறின. பல்வேறு இடங்கள் தீப்பற்றி கொழுந்து விட்டு எரிந்தன.

இந்தத் தாக்குதலில் மசூதிக்குள் இருந்த 7 பேர்பரிதாபமாகஉயிரிழந்தனர். மேலும் 15 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதால், இறப்புகளின் எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று ராவல்பிண்டி நகர பொலிஸ் அதிகாரி முகம்மது சலீம் கூறினார். இந்தத் தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. எனினும், சன்னி பிரிவினரின் தலிபான், அல்குவைதா தீவிரவாத இயக்கங்கள்தான் ஷியா பிரிவினர் மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று மசூதியின் தலைவர் ஷமீம் சயீத் கூறினார். (வ)

## போடோ தீவிரவாதிகள் 6 பேர் அசாமில் கைது

அசாம் மாநிலத்தில் போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி தீவிரவாதிகள் 6 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

இதுகுறித்து பொலிஸ் துறையின் மூத்த அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் மேலும் கூறியதாவது:

தீவிரவாதிகள் 6 பேரும் கோக்ரஜார் மாவட்ட வனப் பகுதியில் பாதுகாப்பு படையினரால் வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர். அவர்களில் மித்திங்கா, குரேய் என்ற 2 தீவிரவாதிகள், கடந்தடிசம்பர் 23 ஆம் கோக்ரஜார் படுகொலையில் நேரடித் தொடர்புடையவர்கள். இதில் மித்திங்கா, கோக்ரஜார் பிரிவுத் தீவிர்வாதிகளுக்கு துணைப் பொறுப்பாளர் ஆவார். அவர்கள் அளித்த தகவலின் பேரில் வேறொரு இடத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 4 கைத்துப்பாக்கிகள், ஒரு ஏ.கே. ரகதுப்பாக்கி, ஒரு எம் 16 ரக துப்பாக்கி, 4 கையெறிகுண்டுகள், 300 இற்கும் மேற்பட்ட ரவைகள், 4 பைகளில் மருந்துகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இவ்வாறு அந்தப் பொலிஸ் அதிகாரி கூறினார்.

அசாமில் கடந்த டிசெம்பர் 23 ஆம் திகதி, கோக்ரஜார், சிராங், சோனித்பூர் ஆகிய மாவட்டங்களில் என்.டி.எப்.பி. தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 70 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர். (வ)





# எண்ணெய் தாங்கியுடன் மோதியது பஸ்

# 57 பேர் சாவு

## பாகிஸ்தானில் துயரம்

கராச்சி, ஜன.12

பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தில், எண்ணெய் தாங்கிலொறிஒன்றுபஸ்ஸுடன் நேற்று மோதியதில் 57 பேர் இறந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இதுகுறித்து கராச்சி பொலிஸ் கமிஷனர் சாயீப் சித்திகிய் கூறியதாவது:

கராச்சியிலிருந்து ஷிகார்பூருக்குச் சென்றுகொண்டிருந்த பஸ், நெடுஞ்சாலையில் எதிரே வந்த எண்ணெய் லொறியுடன்மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்துக்கு இரு வாகனங்களின் சாரதிகளும் முக்கிய காரணமாக இருந்துள்ளனர். இவர்கள் தங்கள் வாகனங்களை வேகமாக ஓட்டி வந்துள்ளனர். தவிர, பஸ் மேற்கூரையில் ஏராளமான பயணிகள் ஏற்றி வரப்பட்டிருந்தனர் என்றார்.

ஜின்னா மருத்துவ உயர்கல்வி மையத்தின் அவசரப்பிரிவு உயர் அதிகாரி சீமி ஜமாலி இது குறித்துக் கூறுகையில்,

விபத்தில் உயிரிழந்த 57 பேரின் உடல்கள் ஜின்னா மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இங்கு அவசரகால நிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பஸ் தீப்பிடிப்பதற்கு முன்னதாக அதில் அமர்ந்திருந்த சிலர் ஜன்னலுக்கு வெளியே தூக்கி எறியப்பட்டதால் அவர்கள் உயிர்பிழைத்தனர் என்றார்.

பஸ்ஸில் கட்டுக்கடங்காத கூட்டத்தை ஏற்றியதோடு பஸ்ஸை படுவேகமாக ஓட்டுநர் செலுத்திச் சென்றதும்தான் இந்த விபத்துக்குக் காரணம் என்று உயிர்பிழைத்தவர்களில் ஒருவர் தெரிவித்தார். (வ)

## ஜாக்கி சான் மகனுக்கு 6 மாதச் சிறைத் தண்டனை

பீஜிங், ஜன.12

போதைப் பொருள் பதுக்கியது மற்றும் போதைப் பொருளை பயன்படுத்தியது தொடர்பான வழக்கில், தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து, பிரபல நடிகர் ஜாக்கிசானின் மகன் ஜெய்ஸீ சானுக்கு (வயது 32) பெய்ஜிங் நீதிமன்றம் 6 மாத காலச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.


கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஜெய்ஸீசான்100கிராம்போதைப் பொருளுடன், தைவான் நாட்டு நடிகர் கோ காயுடன் கைது செய்யப்பட்டார்.

2009ஆம் ஆண்டு முதல் சீனாவின் போதைப் பொருள் தடுப்புக்கான தூதராக ஜாக்கி சான் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஸ்பேஸ் எக்ஸ் ரொக்கெட் பரிசோதனை தோல்வி

புளோரிடா, ஜன.12

செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவப்பயன்படுத்தப்படும் ரொக்கெட்டுக்களை, மீட்டெடுத்து மீண்டும் பயன்படுத்த முடியுமா என்பதைஉறுதி செய்ய அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தால்எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.




விண்ணில் இருந்து கீழே விழும் ரொக்கெட்டை, புளோரிடாவின் கடற்கரைக்கு அப்பால் கடலில் இருந்த ஒரு மிதவையில் விழச் செய்து அதை மீண்டும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

திட்டமிடப்பட்டபடியே ரொக்கெட் மிதவையில் விழுந்ததாகவும், ஆனால் அதன் வேகம் மிக அதிகமாக இருந்ததன் காரணமாக மிதவை உடைந்து போய்விட்டதாகவும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைமை அதிகாரி எலான் மஸ்க் கூறியுள்ளார்.

ரொக்கெட்டை தாம் விரும்பியபடி, கட்டுப்படுத்தப்பட்ட முறையில் கீழே கொண்டு வந்ததாகவும் ஆனால் முழு வெற்றி கிடைக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இருந்தும் எதிர்காலத்துக்கு இது நல்ல ஆரம்பம் என்று அவர் வர்ணித்துள்ளார்.

செயற்கைக் கோள்களை ஏவப் பயன்படுத்தப்படும் ரொக்கெட்டுக்களை மீண்டும் பயன்படுத்தும் நிலை உருவானால், அதன் காரணமாக செயற்கைக் கோள் சார்ந்த தொழில்நுட்பங்களுக்கும், விண்வெளிப் பயணங்களுக்கும் ஏற்படும் செலவுகள் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)



## பிடல் காஸ்ட்ரோ குறித்த வதந்தி

### கியூபா அரசு மறுப்பு

கியூபா முன்னாள் ஜனாதிபதியும் புரட்சியாளருமான பிடல் காஸ்ட்ரோ உயிரிழந்ததாக வெளியான தகவல், உண்மையில்லை என்று கியூபா அரசு தெரிவித்துள்ளது.

89 வயதான பிடல் காஸ்ட்ரோ, உயிரிழந்து விட்டதாக சமூக வலைதளங்கள் மற்றும் ஊடகங்களில் செய்தி பரவியது. இதனை மறுத்துள்ள கியூபா அரசு, இது போன்ற வதந்திகளை பரப்பியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

கடந்த ஓராண்டு காலமாக பிடல் காஸ்ட்ரோ பொது நிகழ்ச்சிகள் எதிலும்பங்கேற்கவில்லை என்பதாலும்,சமீப காலமாக அவரது கட்டுரைகள் எதுவும் செய்தித்தாள்களில்வெளிவரவில்லை என்பதாலும் இது போன்ற வதந்திகள் பரப்பப்படுவதாகக்கூறப்படுகிறது. எனினும் முதுமை காரணமாகவேபிடல்காஸ்ட்ரோ கட்டுரைகளை எழுதுவதில்லை என்று கியூபா விளக்கமளித்துள்ளது. (வ)


## தலிபான்களின் அடுத்த இலக்கு பாக். பிரதமர்

இஸ்லாமபாத், ஜன.12

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பிற்கு தலிபான்கள் மறைமுகமாக குறி வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானின் பெஷாவர் இராணுவப் பாடசாலையில் நிகழ்ந்த படுகொலைக்குப்பிறகுதீவிரவாதிகளைப் பிடித்து அடுத்தடுத்து சாவுத்தண்டனையை அந்தநாட்டின் பிரதமர் நவாஸ் ஷெரீப் நிறைவேற்றி வருகிறார்.

இதனால் அவர் மீதுகடுங்கோபத்தில் ஆழ்ந்த தலிபான்கள் அவரது கட்சித் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டுள்ளனர்.இதுநவாஸ் ஷெரீப் மீதான மறைமுக தாக்குதல் உத்தரவாகக் கருதப்படுகிறது.



இதுகுறித்து ஆப்கனில் மறைந்துள்ள தெஹ்ரீகி தலிபான் தலைவர் முல்லா பஸ்லுல்லாவு காணொலி ஒன்றில் பேசியதாவது:

"நவாஸ் ஷெரீப் அவர்களே, எங்கள் முதல் எதிரி அவாமி தேசிய கட்சி தான். ஆனால் இப்போது உங்கள் கட்சி தான் எங்கள் முதல் எதிரி. உங்கள் தலைவர்களை தாக்க வேண்டும் என்று பாகிஸ்தானில்உள்ள அனைத்து முஜாகிதீன்களுக்கும் உத்தரவிட்டுள்ளேன்.

உங்கள் தலைவர்கள் ஒழுங்கான பாதைக்கு வரவேண்டும் என்றும், இல்லையேல் நரகத்துக்குத் தான் செல்ல வேண்டும்" என்றும் பேசியுள்ளார். (வ)

# பல்சுவை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 4 | | 9 | 2 | | | 7 |
| | 5 | | 1 | 7 | | 2 | 9 | 4 |
| | | 9 | | 3 | | | 1 | 8 |
| | | | | | 9 | | | |
| 3 | | | | 5 | | | | 1 |
| | | | 3 | | | | | |
| 7 | 6 | | | 2 | | 8 | | |
| 5 | 3 | 2 | | 8 | 4 | | 7 | |
| 9 | | | 6 | 1 | | 3 | | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப் பப்பட்டிருக்கும் தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 9 | 4 | 6 | 1 | 7 | 3 | 8 |
| 6 | 3 | 4 | 7 | 8 | 5 | 9 | 1 | 2 |
| 1 | 8 | 7 | 3 | 9 | 2 | 4 | 5 | 6 |
| 9 | 7 | 5 | 6 | 2 | 3 | 1 | 8 | 4 |
| 8 | 1 | 2 | 5 | 4 | 9 | 3 | 6 | 7 |
| 3 | 4 | 6 | 8 | 1 | 7 | 5 | 2 | 9 |
| 5 | 2 | 8 | 1 | 7 | 4 | 6 | 9 | 3 |
| 4 | 6 | 3 | 9 | 5 | 8 | 2 | 7 | 1 |
| 7 | 9 | 1 | 2 | 3 | 6 | 8 | 4 | 5 |

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 120 | 60 | 100 | 100 | 140 | 60 | – |
| கத்தரி | 180 | 180 | 240 | 200 | 180 | 160 | 240 | 150 |
| கரட் | 160 | 180 | 240 | 200 | 200 | 220 | 360 | 350 |
| மரவள்ளி | 40 | 50 | 60 | 60 | 50 | 40 | 50 | 25 |
| பயிற்றை | 280 | 240 | 220 | 240 | 220 | 220 | 240 | 300 |
| பாகல் | 280 | 300 | 280 | 320 | 320 | 280 | 240 | 300 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 60 | 80 | 100 | 50 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 90 | 100 | 120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 50 | 130 | 100 | 80 | 90 | 140 | 120 | 60 |
| பூசணி | 40 | 50 | 40 | 50 | 35 | 50 | 50 | 30 |
| தக்காளி | 150 | 120 | 140 | 150 | 100 | 140 | 80 | 100 |
| வாழைக்காய் | 70 | 90 | 70 | 100 | 80 | 90 | 100 | 80 |
| கீரை | 20 | 50 | 20 | 20 | 40 | 50 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 50 | 30 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 500 | 500 | 400 | 500 | 550 | 820 | 900 | 500 |
| புடோல் | 140 | 120 | 120 | 120 | 140 | 150 | 120 | 150 |
| கோவா | 120 | 120 | 120 | 140 | 120 | 180 | 160 | 180 |
| வெண்டி | 180 | 160 | 240 | 140 | 150 | 160 | 120 | 140 |
| போஞ்சி | 300 | 320 | 320 | 280 | 320 | 280 | 400 | 300 |
| லீக்ஸ் | 280 | 320 | 320 | 300 | 400 | 400 | 400 | 350 |
| தேங்காய் | 40 | 40 | 60 | 40 | 30 | 40 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 90 | 90 | 100 | 70 |
| தேசிக்காய் | 60 | 50 | 50 | 80 | 70 | 60 | 80 | 35 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 280 | 300 | 360 | 350 | 300 | 320 | 360 | 500 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 140 | 100 | 140 | 140 | 100 |

## நாளை 2015

**மார்கழி-29 செவ்வாய்க்கிழமை**

**13.01.2015**

திதி: அட்டமி பி.இ.12.48 மணி வரை
நட்சத்திரம்: சித்திரை பி.இ.03.42மணி வரை
சுபநேரம்: 11.03-12.33 மணி வரை
இராகுகாலம்: 03.33-05.03 மணி வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




### உதவி செய்வது கடவுள் அளித்த வரமாகும்

நாம் இதுவரை உதவி செய்துள்ள எந்தப் பிச்சைக்காரனும் நம்மிடம் கடமைப்பட்டவனல்ல. எல்லா வழிகளிலும் நாம்தான் அவனிடம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். ஏனெனில் நமது சிந்தையைத் தன்மீது செயற்படுத்த அவன் நம்மை அனுமதித்திருக்கிறான். நாம் உலகத்திற்கு நன்மை செய்துவிட்டோம். அல்லது செய்ய முடியும் அல்லது குறிப்பிட்ட சிலருக்குத்தான் நாம் உதவி செய்வோம் என்றெல்லாம் நினைப்பது முற்றிலும் தவறு. அது முட்டாள்தனமான எண்ணம். முட்டாள்தனமான எண்ணங்கள் துன்பத்தைத்தான் கொண்டுவரும். நாம் யாரோ ஒருவருக்கும் உதவி செய்வதாக எண்ணி, அவன் நமக்கு நன்றி பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அவன் அவ்வாறு செய்யாவிட்டால் நமது மனம் வேதனைப்படுகிறது. நாம் பிரதிபலனை எதிர்பார்க்கக் கூடாது. நீ உதவி செய்தவனிடம் நன்றி கொள். அவனைக் கடவுளாக எண்ணிக் கொள்.

## அளவாகக் குடிப்போம்


தண்ணீர் குடிப்பது நல்லது என்று அனைவருக்கும் தெரியும். ஒருவர் தினமும் 8 டம்ளர் தண்ணீராவது குடிக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துவது உண்டு.ஆனால் தண்ணீர் நல்லது என்று கருதி அளவு கடந்து இஷ்டத்துக்கு குடித்தால் அதுவும் விஷம் போல் ஆகும். நிறைய தண்ணீர் குடிக்கிற போது, உடலில் சுரக்கிற திரவங்கள் நீர்த்துப் போகின்றனவாம். இதனால் உடலில் சோடியத்தின் அளவு குறைந்து போய் சமயங்களில் உயிராபத்தையும் ஏற்படுத்தி விடுமாம். தண்ணீரை தாகத்துக்கு குடியுங்கள் ஆலோசனைகள் வழங்கியுள்ளனர் ஆய்வாளர்கள். 100 கிலோ எடை உடைய ஒருவர் அதிகபட்சம் தினமும் 3 லிற்றர் தண்ணீர் குடிக்கலாமாம். அதாவது ஒரு கிலோ எடைக்கு 3 மில்லி தண்ணீர் என்ற விகிதாசாரத்தில் தான் தண்ணீர் குடிக்க வேண்டுமாம்.



## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 600 | 420 |
| நண்டு | 300 | 400 | 400 | 250 |
| கணவாய் | 400 | 400 | 400 | – |
| பாரை | 400 | 500 | 500 | 350 |
| சுறா | 600 | 550 | 500 | – |
| சீலா | 300 | 400 | 400 | – |
| விளை | 350 | 380 | 400 | 330 |
| முரல் | 280 | 350 | 300 | – |
| கும்பிளா | 250 | 500 | – | 300 |
| கிழாக்கன் | 400 | 350 | – | – |
| ஓரா | 300 | 450 | 100 | – |
| திரளி | 200 | 200 | 100 | – |
| நகரை | 180 | 250 | 200 | – |
| சூடை | 100 | 160 | 200 | 60 |
| திருக்கை | 240 | 180 | 200 | 120 |
| மதனம் | 150 | 250 | 200 | 130 |
| கொய் | 600 | 80 | – | – |
| பாலை | 250 | 40 | 300 | – |
| வாழை | 200 | 300 | 300 | 160 |
| ஒட்டி | 200 | 200 | 210 | 170 |


## தலை வலிக்கு உணவும் காரணம்



### மருத்துவம்



தலைவலியா? சூடாக ஒரு கப் தேநீர் குடித்தால் போதும். வலி பறந்து போகும் பலருக்கும். ஆனால் குறிப்பிட்ட சில உணவுகள் தலை, வலியை வரவழைக்கும். தலைவலியைத் தூண்டும் உணவுகளில் முக்கியமானது சீஸ். அதிலுள்ள தைரமின் எனப்படுகிற வேதிப்பொருளே வலியைத் தூண்டும். இது தவிர கேக், சைனீஸ் உணவுகள், சொக்லேட் போன்றவற்றிலும் தலைவலியைத் தூண்டும் காரணிகள் இருப்பதால் அவற்றையும் தவிர்க்க வேண்டும். தினசரி நாம் உபயோகிக்கிற பதப்படுத்தப்பட்ட உணவுகளிலும், தலைவலியைத் தூண்டும் நைட்ரைட் என்கிற வேதிப் பொருள் கலக்கப்படுகிறது. ஊறுகாய், ஒரேஞ், அன்னாசி, கடலைப் பருப்பு, முந்திரிப்பருப்பு, செயற்கை இனிப்புகள், குளிர்பானங்கள், சிப்ஸ் போன்றவற்றை அடிக்கடி எடுத்துக் கொள்பவர்களுக்கும் தலைவலி வரலாம். இவை தவிர மது குடிப்பவர்களுக்கும், கருத்தடை மாத்திரைகள் எடுத்துக் கொள்கிற பெண்களுக்கும் கூட அடிக்கடி தலைவலி வரலாம்.




# உங்களுக்கு எப்படி?



## மகரம்

இந்த ஆண்டில் தாயின் வழியில் நன்மைகள் உண்டாகும். உங்களை விட்டு விலகியிருந்த தாய் வழி உறவினர்கள் மீண்டும் வந்து இணைவார்கள். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, உங்கள் நன்மதிப்பை உயர்த்திக் கொள்வீர்கள். அதிகமான பயணங்களை மேற்கொள்ள நேரிடும். எந்த வயதினருக்கும் புதிதாக ஒரு கல்வியோ, கலையோ பயில வாய்ப்புண்டாகும். சிலருக்கு வெளியூர் சென்று படிக்கும் வாய்ப்புக்களும் கிடைக்கும். செய்யும் தொழிலில் வளர்ச்சி உண்டாகும். நண்பர்களிடம் கோபப்படாமல் நடந்துகொண்டு, அவர்களின் உறவைத் தக்க வைத்துக் கொள்ளவும். அது தக்க சமயத்தில் உதவும். இந்த ஆண்டு குரு பகவான், உங்களின் ராசியைப் பார்க்கும் விதத்தில் சஞ்சரிப்பதால் ஆரோக்கியமான எண்ணங்கள் சிறகடித்துப் பறக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். உங்களின் மனதில் சிலரது போக்கினால் வருத்தங்கள் ஏற்பட்டாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் செயல்படுவீர்கள். எப்போதோ உங்களுக்கு உதவியவர்களுக்கு நீங்கள் மனமுவந்து உதவும் காலகட்டம் இது. சுதந்திரமாகச் சிந்தித்துத் தனித்துச் செயல்படுவீர்கள். உங்களை விட்டு எதிரிகள் விலகுவார்கள். புதிய உறவுகள் மலரும். அவர்கள் உங்கள் செயல்களுக்கு அரணாகத் திகழ்வார்கள். சிலர் புதிய திட்டங்களை நடைமுறைபடுத்துவார்கள். வருமானம் பெருகும். இதனால் புதிய சேமிப்புத் திட்டங்களிலும் ஈடுபடுவீர்கள். அதே நேரம் எவரிடமும் உங்கள் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். அனைத்து விடயங்களையும் நல்ல கண்ணோட்டத்துடன் காண்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொள்வீர்கள். தந்தை வழியில் சில அனுகூலங்களைக் காண்பீர்கள். உங்களை எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். தொழிலில் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். எதிர்பாராத இடங்களிலிருந்து பண வரவு உண்டாகும். மனதில் அமைதி நிலவும். நிம்மதியாக உறங்குவீர்கள். உடல் உபாதைகள் முழுமையாகத் தீர்ந்து விடும். வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் வந்து சேரும். ஆன்மிகச் சிந்தனையுடன் வாழ்க்கையை நடத்துவீர்கள்.

### உத்தியோகத்தர்கள்

உத்யோகத்தர்களுக்கு விரும்பிய பணி உயர்வு கிடைக்கும். இதனால் சம்பளம் உயரும். மேலதிகாரிகள் உங்களை நம்பிப் புதிய பொறுப்புக்களை ஒப்படைப்பார்கள். உடலில் இருந்த சோர்வும், மனதிலிருந்த குழப்பமும் மறையும். இதனால் உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். சக ஊழியர்கள் உங்களிடம் பகை மறந்து நட்பு பாராட்டுவார்கள். அலுவலகத்தில் சிறப்பான பயிற்சிகளைக் கற்றறிந்து வெற்றியடைவீர்கள்.

### வியாபாரிகள்

வியாபாரிகள், போட்டியாளர்களின் தடைக்கற்களைக் கடக்க சற்று போராட வேண்டியிருக்கும். கூட்டாளிகளை நம்பாமல் நீங்களே முன்னின்று செயற்பட்டால் வியாபாரத்தில் ஏற்படும் குளறுபடிகளைத் தவிர்க்கலாம். பண விஷயத்திலும் உஷாராக இருக்கவும். மற்றபடி சுகத்தை மறந்து கடினமாக உழைப்பீர்கள்.

### கலைஞர்கள்

கலைத்துறையினருக்கு அனைத்து வேலைகளும் சுமுகமாக முடியும். உங்களைத் தேடிப் புதிய வாய்ப்புகள் வரும். திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தாமாகவே அமையும். பொருளாதார வசதிகளில் முன்னேற்றம் ஏற்படும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

### பெண்கள்

பெண்மணிகள், குடும்பத்தாரிடம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளவும். அனைவரையும் அனுசரித்துச் செல்லவும். நன்கு யோசித்த பின்னரே முக்கிய முடிவுகளை எடுக்கவும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து சேமிப்புக்களில் கவனம் செலுத்தவும். கடுமையான சொற்களை உதிர்க்காமல் நிதானமாகப் பேசவும்.




## கூட்டெண் பலன்கள் 5-3

இந்த எண் கொண்டவர்கள் புதனும், குருவும் இணைந்து தரும் ஆதிக்கம் உடையவர்கள். நல்ல உயரமும், செந்நிறமும் அழகும் கொண்ட கவர்ச்சிகரமான தோற்றத்துடன் இருப்பர். இவருக்கு மேல் நெற்றி சிறிது கூராக இருக்கும். மூக்கு நீண்டு எடுப்பாக அமைந்திருக்கும். மரியாதைக்குரிய மங்கலமான மனிதராகக் காணப்படுவார்.

இவர்கள் அமைதியை விரும்பும் பொறுமைசாலிகள். துன்பங்களைச் சகித்துக் கொள்பவர்கள். அத்துடன் நல்ல அறிவாளிகள். நுண்ணறிவும், சாத்திர அறிவும் உடையவர். வெறும் அரட்டையடித்துப் பலருடன் கூடி பொழுது கழித்துப் பிரியும் மனிதராக இல்லாமல் நோக்கம், அதை அடையத் திட்டம், அதற்கேற்ற செயற்பாடு என்றிருப்பர்.

தகவல்கள் நிறைந்ததாக இவருடைய பேச்சு இருக்கும். மகிழ்வாகப் புதுப்புது சங்கதிகளைப் பொறுமையுடன் விளக்குவார். பிறர் மனம் புண்படும்படி செயற்படமாட்டார். காரணத்தோடு பக்குவமாகப் பேசி நடப்பார். திறந்த புத்தகம் போல இருப்பார். ஓரளவு சுயநலம் உள்ளவராவர்.

குடும்பப் பாசம், தொழிலாசை உடையவர். தவறு என பிறரிடம் ஏதாவது பட்டால் நேரடியாகக் கேட்டு விளக்கம் பெறுவார். வயதானாலும் சுறுசுறுப்போடு இருப்பார். திருமணம் தடையின்றி நடக்கும். சிறந்த பெண் மனைவியாக அமைவாள். நல்ல வாரிசு சிறிது தாமதமாக உண்டாகும்.

இவர்கள் முதலில் கிடைக்கும் தொழிலில் அமர்வர். புதியவற்றைக் கண்டுபிடிப்பவராக, பத்திரிகை ஆசிரியராக, பதிப்பகத்தாராக, நாடகம், கதை, கட்டுரை எழுதுபவராக இருப்பர். ஜோதிடராக (குறிப்பாக நாடி சோதிடம்) பார்ப்பவராக இருப்பர். சிலர், தொழிற் கூடங்களில், அரசுப் பதவிகளில், தனியார் அலுவலக அதிகாரிகளாக இருக்கக் காணலாம்.

நரம்புத்தளர்ச்சி இவர்களுக்கு உண்டு. உயர் குருதி அழுத்தம், கண் கோளாறு, வயிற்றுச் சிக்கல், மூலம், கபம், பித்தம் தொடர்பான நோய்கள் தாக்கக் கூடும்.

## கூட்டெண் பலன்கள் 5-4

சுருட்டைத் தலைமுடியுடன் மிக உயரமாக இருப்பர். மேலும் உயரத்துக்கு ஏற்ப உடல் பருமனுடன் பெரிய தோற்றமுடன் அழகாக இருப்பர். மாநிறமாகவும், அழகாகவும் இருப்பர்.

அறிவும் விளையாட்டுப் புத்தியும் இருக்கும். சுறுசுறுப்பும், குறும்புத் தனமும் அதிகமாகவே இருக்கும். நன்கு பேசி எவரிடமும் பழகி நகைச்சுவையாகப் பேசுவர். நல்ல கணீரென குரல் ஆளை நடுங்கச் செய்வதுபோல இருக்கும். பலகுரல் மன்னராகப் பல பிரபல ஆசாமிகள் போலவே பேசுவர். இவர்களிடம் சவால் விட்டு எதிலும் எவராலும் வெல்ல முடியாது.

ஒளிவு மறைவாய் இருக்கத் தெரியாது. துணிவுடன் பேசி தொல்லைகளை வளர்த்துக் கொள்வர். சில தீயவர் சேர்க்கையும் கெட்ட பழக்கமும் இவர்களுக்கு உண்டாகும். தொழிலாகவோ, பொழுது போக்காகவோ எதை யாவது செய்து கொண்டே இருப்பர். மனித நேயம் உள்ளவர்.

இளவயதில் காதலிப்பர். இவருடைய தோற்றத்திலும் பேச்சிலும் மயங்கி விடுவர். திருமணத்துக்குப் பின்னர் சிறந்த குடும்பத் தலைவராக இருப்பர். நல்ல வாழ்க்கைத் துணை கிடைக்கும். நல்ல பிள்ளைகளும் உண்டாவர். நண்பர்களும், சொந்த பந்தங்களும் ஆதரித்து கூடியிருக்கப் பெரிய வாழ்வு வாழ்வர்.

அழகை ரசிக்கும் இவர்கள் புதுமையையும் விரும்புவார்கள், ஆகையினால், நவீன ஆடை, அழகுப் பொருள், வாசனைப் பொருள் வர்த்தகம் செய்வர். இரும்பு சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளில் உயர் அதிகாரிகளாக, சோதிடர்களாக, பெரிய கல்வியியலாளர்களாகவும் இருப்பர்.

சொந்தத்தில் தொழில் நடத்தவே பெரிதும் விரும்பும் இவர்கள் தொழிலதிபராக இருந்தாலும், வேலை செய்து சம்பளம் பெறுபவரானாலும், நிறையப் பணம் சம்பாதிப்பர். ஒரு தொழில் போனாலும் அவ்வப்போது ஏதாவதொன்றைப் புதிதாகத் தொடங்கிக் கொண்டே இருப்பார்.

சாதாரணமாக இவர்கள் உடம்புக்கு ஒன்றும் வராது. வெறும் காய்ச்சல், தலைவலிகள் இருக்கும். 40 வயதுக்கு மேல் உயர் குருதி அழுத்தம், வயிறு, வெப்பத்தாலும் குடி போன்ற கெட்ட பழக்கத்தாலும் பாதிக்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி



யா/புனித ஹென்றியரசர் கல்லூரியின்
அதிபர் வணபிதா J.A.ஜெசுதாஸ்
அவர்களின் அன்புத் தந்தை
**சிங்கராசா யோசப் அந்தோனிப்பிள்ளை**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம். (55617)(4.7.3)
கோட்டக் கல்விப்பணிப்பாளர், அதிபர்கள், அலுவலக ஊழியர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவுகள்

மலர்வு 19.04.1937



மறைவு 24.12.2013

**அமரர் வ.செல்லத்துரை**
திதி: 12.01.2015

ஆண்டு ஒன்று ஆனபோதும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது. பாரினில் உளர் போற்றும் உத்தமராய் வாழ்ந்து, விண்ணுலகில் சங்கமமான உங்கள் நினைவுகளுடன் மண்ணில் நாம் வாழ்கிறோம்

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி. (55637) (45.3)
உங்கள் நினைவால் வாடும்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19 * 12 * 1975
இறப்பு 24 * 12 * 2013

**திருமதி சிவலோஜினி சுரேஸ்குமார்**
(செல்வா எலக்ரிக்கல்ஸ் திருநெல்வேலி- உரிமையாளரின் அன்பு மனைவி)
திதி: அபரபக்க ஸப்தமி

ஓடி மறைந்தது ஓர் ஆண்டு
அன்பெனும் நீர் அற்று
வாடி உதிர்ந்து போனேன் நான்
பண்பின் வடிவானவளே
தாய்ப் பறவை உனையிழந்து
தவிக்கின்றன எம் இரு குஞ்சுகளும்
சேய்கள் தவித்திட எங்கு ஏகினை
மீண்டும் வாராயோ எம்
வாழ்வெனும் கொடி தளைத்து
வானுயர வளர்ந்து செழித்திட
வாராயோ! வாராயோ!!
காத்திருக்கிறோம் நாமிங்கு

கலைவாணி வீதி, சித்தன்கேணி. 077 764 2771
என்றும் நினைவில் கணவர், பிள்ளைகள். (55641)(4.7.3)

# செய்திகள்

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர் **நடராஜா சந்திரராஜா** (போஸ்)
[முன்னாள் உரிமையாளர்- குகன் ஸ்ரோர் தலவாக்கலை]
பிறப்பு 20.02.1948 இறப்பு 19.12.1989
திதி: 12.01.2015

எங்கள் அன்புத் தெய்வமான அப்பாவே!
எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டிய தங்கள்
பசுமையான நினைவுகளை மீட்டு
ஆண்டுகள் இருபத்தைந்து ஆனாலும்
ஆறாது எம்மனதை விட்டு என்றும் நினைவுகள்
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பலாலி வீதி, கோண்டாவில். (55784)(4.3)
என்றும் நினைவுடன் குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 13.12.2014 ஆம் திகதி சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்
**அமரர் இராமலிங்கம் முத்துக்குமாரசுவாமி**
(தலைவர், இணுங்கித் தோட்டம் கந்தசுவாமிகோயில்)



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.01.2015) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும். மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னார் அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து உடன் உதவிபுரிந்த உறவினர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி தெரிவித்த இணுங்கித்தோட்ட ஆலய பரிபாலன சபையினர், ஆலய நற்பணிக்குழு, குமரன் சனசமூக நிலையம், அன்னம்மா, இரத்தினம் அன்னதான சபையினர், வெளியூர் - உள்ளூர், தொலைத்தொடர்பு மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"சாலினி வாசா" கைதடி மேற்கு, கைதடி. (34545)(45.6.3)
குடும்பத்தினர். T.P.021 721 0448, 077 828 1102

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின்மடியில் 07.07.1947
ஆண்டவன் அடியில் 03.12.2013

**திருமதி சரஸ்வதி நாகராசா**
திதி: அபரபட்ஷ ஸப்தமி (12.01.2015)

ஈராண்டுகள் ஆகியதோ அன்னையே உம்மைப் பிரிந்து
பார்க்கும் இடமெங்கும் - உம் விம்பம் தானே தெரிகிறது.
நீர் வாழ்ந்த வீடின்று கலகலப்பை இழந்த வெறுமையில்
கனவினில் அடிக்கடி வரும் உம் முகம்
இப்போது நம்ப முடியவில்லை - கட்டிய உங்கள் கணவரும்
பெற்ற பிள்ளைகளும் நேசம் மிக்க மருமக்களும்
பாசப் பேரப்பிள்ளைகளும் மற்ற உறவுகளுடன்
கலங்கித் தவிக்கின்றோம் - உங்கள் ஆத்மா சாந்திக்காய்
என்றென்றும் இறைவன் பாதம் பணிகின்றோம்.

ஆசாரியார் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (55756) (45.3.7)
உங்கள் பிரிவால் வாடும்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 663 கோடி பெறுமதியான ஹெரோயின் பறிமுதல்

### இரு வருடங்களில்

கொழும்பு, ஜன.12

2013 மற்றும் 2014 ஆகிய இரண்டாண்டுகள் காலத்துள் 663 கோடி ரூபா பெறுமதி கொண்ட 663 கிலோ ஹெரோயின் போதைப் பொருள், போதைப் பொருள் தடுப்புப் பொலிஸ் பிரிவாலும் மற்றும் பொலிஸாராலும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அக்காலகட்டத்துள் ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பாக 46 ஆயிரத்து 710 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

மேலும் போதைப்பொருள் வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்டு நாட்டைவிட்டும் வெளியேறி வெளிநாடுகளில் மறைந்திருக்கும் பெரும் போதைப் பொருள் வர்த்தகப் புள்ளிகள் 10 பேரை சர்வதேசப் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்வது தொடர்பாக சிவப்பு நோட்டீஸ் விடுக்கப்பட்டிருப்பதாகவும் இதன்போது தெரிய வந்துள்ளது. (வ–22)

## திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.12

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சுகாதார விஞ்ஞான பிரிவால் தாதியர் பட்டப்படிப்பியல், மருந்தாளர் பட்டப்படிப்பியல், விஞ்ஞான ஆய்வு கூட ஆய்வாளர் பட்டப்படிப்பியல் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தாதியர் பட்டப்படிப்பியல் கற்கை நெறிக்கு ஜி.சீ.ஈ உயர்தர விஞ்ஞான கணிதப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் அத்திபாரக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் அல்லது பொதுத் தாதியர் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தாதியர் பாடசாலையால் வழங்கப்பட்ட தாதியர் டிப்ளோமா சான்றிதழ் மற்றும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தையும் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது வெளிநாட்டு அல்லது இலங்கை சுகாதார அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது நிறுவனங்களிலேனும் வழங்கப்பட்ட 3 வருட டிப்ளோமா மற்றும் குறைந்தது இரண்டு வருட தாதியர் சேவை அனுபவம் இருப்பவர்கள் அத்துடன் கணித அல்லது விஞ்ஞானப் பிரிவில் 3 பாடசித்தி அல்லது இலங்கைத்திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் அத்திபாரக் கற்கை நெறியைப்பூர்த்தி செய்தவர்கள் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தாதியர் டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி யாழ்.பிராந்திய நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (வ–14)

# தெஹிவளை மிருகக் காட்சிச் சாலையில் காட்டுக்குதிரைக்குட்டி ஏற்புவலியால் சாவு

கொழும்பு, ஜன.12

தெஹிவளை மிருகக் காட்சிச் சாலையில் 79 ஆண்டுகால வரலாற்றில் அழிந்துபோகும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள முதல் தடவையாக கடந்த டிசெம்பர் மாதத்தில் பிறந்திருந்த மிக அபூர்வமான காட்டுக்குதிரைக் குட்டி ஒன்று மழையில் நனைந்து ஏற்புவலி ஏற்பட்டு உயிரிழந்துள்ளதாக பணியாளர்கள் தெரிவித்தனர்.

அழிந்துபோகும் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்துள்ள இனமான காட்டுக்குதிரைகள் 800 இற்கும் குறைவாகவே இன்று உலகில் காணப்படுவதோடு இந்தக் குதிரைக் குட்டிகளைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கில் மிருகங்களைப் பரிமாறிக்கொள்ளும் செயற்றிட்டத்தின் கீழ் கடந்த 2012 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாத நடுப்பகுதியில் ஜேர்மனியில் இருந்து இந்தக் காட்டுக் குதிரைகள் தெஹிவளை மிருகக்காட்சிச் சாலைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன.

உயிரிழந்துள்ள இந்தக் குதிரைக்குட்டி பிறக்கும் போது திடகாத்திரமானதாக இருந்துள்ளதோடு தாயிடமிருந்து பாலை குடித்துக் கொண்டிருந்தது என்றும் அங்குள்ள பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புதிதாக பிறந்த இந்தக் குட்டிக்கு உகந்த சூழல் மற்றும் மழைக்குப் பாதுகாப்பு இல்லாது கடந்த தினங்களில் கொட்டித் தீர்த்த தொடர் மழைக்கு நனைந்துள்ளதால் அதற்கு நியுமோனியா தாக்கம் ஏற்பட்டிருந்ததாகவும்– தொப்புள் புண் மழைக்கு நனைந்து சீழ்பிடித்து ஏற்புவலி கண்டதால் குதிரைக்குட்டி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுக் குதிரைக் குட்டியின் இறப்பு கேள்விக்குள்ளானதாகவும் மிருகக் காட்சி சாலையின் மேலதிக பணிப்பாளரான திருமதி தம்மிகா மல்சிங்க கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குதிரைக் குட்டி மழைக்குநனைந்து நியுமோனியாவில் இறந்து போனதாகவே பணியாளர்கள் தெரிவித்தாலும், எம்மால் அதை ஏற்க முடியாது. மரண விசாரணை அறிக்கையைப் பார்த்த பின்னரே எதையும் முடிவு செய்ய முடியும் என்றும்– உதவிப் பணிப்பாளரிடமிருந்து அதைத் தெரிந்து கொள்ளலாம் என்றும்–தெரிவித்துள்ளார்.

எவ்வாறான போதிலும் கடந்த 24ஆம் திகதி இறந்துள்ள காட்டுக் குதிரைக் குட்டி சம்பந்தமான இறப்பு விசாரணை அறிக்கையின் விவரங்கள் இதுவரையிலும் உதவிப் பணிப்பாளருக்குக் கிடைத்திருக்காத நிலையில் அது பற்றிய தகவல்கள் எதையும் இன்றுவரைப் பெற இயலாது போயுள்ளது.

(வ–22)

# தமிழருக்கு நிரந்தர அரசியல் தீர்வை புதிய அரசு பெற்றுக்கொடுக்க வேண்டும்

தெற்கில் சிறந்த தலைமைத்துவத்தை உடைய அரசை உருவாக்க நல்லதொரு சந்தர்ப்பதைஏற்படுத்திக்கொடுத்த தமிழ் மக்களுக்கு புதிய அரசு நிரந்தர அரசியல் தீர்வைத்தர முற்பட வேண்டும் என்று– சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சபா. வாசுதேவக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டுள்ளது தொடர்பில் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தால் விடுக்கப்பட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

காலதிகாலமாக தேர்தல் வாக்குறுதிகள் வெளிவருவதும் அது பின்னர் காணாமற் போவதும் தமிழ் மக்களுக்கு புதிதல்ல. ஆனாலும்கூட தமக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைத்தல் வேண்டும். அதற்கு தெற்கில் சிறந்த தலைமைத்துவத்தை உடைய அரசை உருவாக்க நல்லதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் என்ற உணர்வுடன் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு தமது சாதகமான நல்லிணக்க சமிக்ஞையாக தேர்தல் மூலமாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

இதற்கு நன்றிபாராட்டும் வகையில் பதவியேற்றுள்ள புதியஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனதலைமையிலான அரசு இதயசுத்தியுடன் சிறுபான்மை மக்களுக்கான காத்திரமான– நிரந்தரஅரசியல்தீர்வைவெளிப்படுத்துதல் வேண்டும். கூட்டமைப்பினரும்சிலதமிழ் அரசியல்தலைவர்களும் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவை வழங்கும்படி– தமிழ் மக்களை வேண்டிய தன்படி மக்கள்மிகப்பெரிய வெற்றியைஈட்டிக்கொடுத்துள்ளனர்.

இதனை புதிய அரசு நன்கு உணர்தல் வேண்டும். வெற்றிக்குப் பங்களித்த தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்கு தமது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இதில் கூட்டமைப்பினருக்கும் மிகப்பெரிய பெறுப்பும் தார்மீகக் கடமையும் உள்ளது.

கூட்டமைப்பினருடைய வழியில் மக்கள் தொடர்ந்துள்ளார்கள் என்பதை தேர்தல் மிகத்தெளிவாகக்காட்டியுள்ளது. எனவே தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தியாக்குவது கூட்டமைப்பினருடைய கடமையாகும். புதிய அரசுடன் தமிழ் தரப்பினர் கடந்த காலத்தில் பேச்சுக்களின் போது ஏற்பட்ட குறைபாடுகளை தவிர்த்து சரியான அணுகுமுறையுடன் பேச்சுக்களில் ஈடுபடுதல் வேண்டும். கால வரையறையுள்ளதாகவும்– இரகசியமற்ற வகையில் பகிரங்கமானதுமான பேச்சுகள் அமைதல் வேண்டும். தொடர்ந்தும் தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வு ஏமாற்றப்படக்கூடாது– என்றார். (வ–14)


## ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி



**வீரகத்தி ராசா (ராஜா)**

மலர்வு 1940.10.05 உதிர்வு 2007.12.30

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பிரிவுத் துயரத்தால் ஆறமுடியவில்லை சித்தப்பா!
உங்கள் அன்பு வார்த்தைகள்
இன்றும் என் காதில் ஒலிக்கிறது சித்தப்பா!
எத்தனை கோடி உறவுகள் இருந்தாலும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமா சித்தப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிள்ளையார் அருள்புரிவாராக.

உங்கள் பிரிவாலும், துயரத்தாலும் வாடும் மனைவி சரஸ்வதி, அண்ணர் முருகையா, பெறாமக்கள் ஜெயராணி (பிரதேச வைத்தியசாலை, அளவெட்டி.)

(55781) (4.3.7)



## 10 ஆம் வருட நினைவஞ்சலி



**குருசுமுத்து மரியநாயகம்**

தாயின் மடியில் 29.11.1941

இறைவன் அடியில் 12.01.2005

"உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
இறப்பிலும் வாழ்வார்"
(யோவான்: 11:25)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

10, ஈச்சமோட்டை, பீச்றோட், பாஷையூர்.



## 10 ஆம் ஆண்டு நினைவில்...



அமரர்
**கந்தப்பு முருகேசு**
(ஓய்வு பெற்ற அதிபர்)

ஆயிரம் பிறை கண்ட
அரும் பெரும் ஒளி விளக்கு
ஆண்டுகள் பல சென்றாலும் - எம்
அருகினிலேயே இருந்திடுவீர்

குடும்பத்தினர்.

ஆனந்தகானம் ஆவரங்கால், புத்தூர்.

தோற்றம் 26.11.1910 மறைவு 02.01.2005



## நீங்கா நினைவில் ஏழு ஆண்டுகள்



அமரர் **பொன்னையா தம்பையா**

அன்னையிடம் 01.02.1945 ஆண்டவனிடம் 10.01.2007

திதி: ஸப்தமி

ஆண்டுகள் ஏழு சென்றது அப்பா!
ஆறவில்லை எம்துயர் அப்பா!
உங்கள் நினைவுகள் தினம் எம்மைவாட்டுது அப்பா!
நினைவு அழிவதில்லை உறவு பிரிவதில்லை அப்பா!
என்றும் பிரியமுடன் வாழ்ந்த நாளை
நினைத்து ஏங்குகின்றோம் அப்பா!

பாசமாய் வாழவைத்த எங்கள் அப்பாவின் ஆத்மசாந்திக்காக
விஸ்வாம்தோட்ட விநாயகப்பெருமானை
தினம் வேண்டுகின்றோம்.

டச்சு வீதி, மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

நீங்கா நினைவில் குடும்பத்தினர்.

(சி.19030) (45.3)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**துரைஐயர் மகேந்திரன் (இந்திரன்)**
(புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் – கண்ணகிபுரம்)

மண்ணில் 13.04.1968
விண்ணில் 24.12.2013

திதி: பூர்வபக்க ஸப்தமி (12.01.2015)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வமே!
உங்கள் நினைவுகளில் வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

192, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

க.இரத்தினம் (மாமா)

(55787)(45.3)

# செய்திகள்

## மரண அறிவித்தல்கள்



### செல்லையா பத்மநாதன்

(ஓய்வு நிலை ஊழியர்- மின்சாரசபை, கோப்பாய், முன்னாள் மின் இணைப்பாளர்-உதயன் பணிமனை)

கொக்குவில், சம்பியன்லேனைப் பிறப்பிடமாகவும் குளுக்கண்டிலேன் கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பத்மநாதன் (துரை) 02.01.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை - மதியாபரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற பத்மரூபன் மற்றும் இராஜரூபி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சௌந்தர்ராஜனின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கவிதா மற்றும் உமாரூபன், ரஞ்சித், றொகான், றொனால்ட், றொஷானி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குகனேஸ்வரி மற்றும் தவமணிதேவி (தவம்), காலஞ்சென்ற மகேந்திரன் (மகம்) மற்றும் பற்குணராசா (குணா-பிரான்ஸ்), பாலச்சந்திரன் (சந்திரா -மின்சாரசபை), பாலகிருஷ்ணன் (பாலா-சுவிஸ்), புஸ்பராணி (ராணி), ராசேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேலாயுதம், தெய்வேந்திரராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2015) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.09,**
**குளுக்கண்டிலேன்,**
**கட்டப்பிராய்,**
**கோப்பாய் தெற்கு.**

தகவல்:
குடும்பத்தினர்.
மனைவி: 077 9073834, மகள்:0015147270738 (கனடா)
இராசேந்திரன் (தம்பி-077 6405221)
தவமணிதேவி (அக்கா-077 899 8924)

(55624) (4.6.3)

### திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம்பிள்ளை



கம்பலைவளவு, பன்னாலை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கனடா Markham இனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம்பிள்ளை 08.01.2015 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்- வியாழிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான தம்பையா -பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம்பிள்ளையின் பாசமிகு மனைவியும், வனஜா (பபி), சிவாஜினி (பாமா), பிறையாளன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவீந்திரன், கிருஷ்ணகுமார், நவநிதி ஆகியோரின் மாமியாரும், சாம்பவி, சங்கவி, இலக்கியன், யோகி, ஈசா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் சகோதரியும், கதிர்காமத்தம்பி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தியாகராசா மற்றும் சிவபாக்கியம், சிவஞானமலர், நந்தீஸ்வரன், காலஞ்சென்றவர்களான பாக்கியலீலாவதி, சரஸ்வதியம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை -மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை), சறோஜினி தேவி மற்றும் Dr.அருமைநாயகம்(UK) அருள்சோதிநாதன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.01.2015 செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு **FOREST -NAWN, MRUSOLEUM Creminotion Centre -4570, yonge Street, North York, ON M2N 5L6, CANADA**வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆ.பிறையாளன்/S.ரவீந்திரன்**
Martham, ONT, Canada.
T.P:0019058871513

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(55789)(4.7.3)

## 'இனவாதிகளுக்கு நல்லதொரு பாடம்'

அம்பாறை, ஜன.12

"சிறுபான்மை சமூகங்களை வதைத்து, இனவாத, மதவாத வெறிகொண்ட ஆட்சி நடத்த முற்படுவோருக்கு தேர்தல் முடிவுகள் தக்கபாடமாகும்."

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர்சங்கத்தலைவர் எஸ்.லோகநாதன் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தொடர்பாக விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.


இந்த நாட்டில் சிறுபான்மையின மக்களைக் கிள்ளுக் கீரைகளாகப் பாவிக்க முற்பட்டதோடு, சிறுபான்மையினங்களை அடக்கி, ஒடுக்கி அடிமைச் சமூகங்களாக வைத்திருக்க முற்பட்ட ஆட்சியினருக்கு மக்கள் தக்க பாடத்தை ஜனாதிபதித் தேர்தலில் புகட்டியுள்ளனர்.

இதனை எதிர்காலத்தில் ஆட்சியை முன்கொண்டு செல்வோரும் தக்க பாடமாகக் கொள்ள வேண்டும். இனவாதமும், மதவாதமும் தலைவிரித்தாட வழி வகுத்ததோடு, இனவெறி, மதவெறி கொண்டோருக்குத் தீனிபோடுவது போல், அவர்களது செயற்பாடுகளைக் கண்டும் காணாதிருந்த நிலைமைகள் சிறுபான்மையின மக்களின் நெஞ்சங்களில் தீராத துயர்களை நிலை கொள்ளச் செய்திருந்தது. அதன் பிரதிபலிப்புக்களே இன்று ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை சமூகங்களின் முடிவுக்கு முக்கியகாரணங்களாகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-30)

## ரூபவாஹினிக்கு புதிய தலைவர்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக சோமரத்தன திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமையை நேற்றுமுன்தினம் மாலை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். (ற)

## மரண அறிவித்தல்



### முருகேசு பொன்னுத்துரை

(8 ஆம் வட்டாரம் நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடா மற்றும் நயினாதீவை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு பொன்னுத்துரை 08.01.2015 வியாழக்கிழமை நயினாதீவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு- பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற நாகரெத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், நெல்லியம்மா காலஞ்சென்றவர்களான கனகசபை, சிவகியா, லெட்சுமி, குமரையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தில்லையம்பலம், நாகம்மா, முருகேசு மற்றும் உருத்திராதேவி, திருஞானசம்பந்தர், நீலாம்பிகை, தனலெட்சுமி, விசாகப்பெருமாள், ராசேஸ்வரி ஆகியோரின் அன்பு அத்தானும், சந்திரபாலன் (ஜேர்மனி), சுந்தரபாலன் (கனடா), புஸ்பகௌரி (சுவிஸ்), ஓங்காரபாலன் (சுவிஸ்), விஜயகௌரி, நித்தியகௌரி (ஜேர்மனி), இராசகௌரி (கனடா), உதயபாலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கௌரி (ஜேர்மனி), கேதாரகௌரி (கனடா), உதயகுமாரன் (சுவிஸ்), ரெத்தினகுமார் (ஜேர்மனி), நந்தகுமாரன் (வேலணை பிரதேச சபை, நயினாதீவு, உப அலுவலகம்), மதிவதனி (சுவிஸ்), குமரேசன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், கௌதம், கௌசன்- ஷர்மிதா (ஜேர்மனி), சுரேந்து, சுசாந்து, பவிந்து (கனடா), ஊஷாந்தன்- அபிராமி (சுவிஸ்), அனுஷா, அனுஷியன், அனுஷ்கா (சுவிஸ்), மதுஷன், மிதுஷன், கிருஷிகா, ஜனுஷிகா, சுதர்ஷன், காருணிகா, சுகன்யா (ஜேர்மனி), பிரவின், வித்தகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (13.01.2015) செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் நயினாதீவு சல்லிபரவை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**8 ஆம் வட்டாரம், நயினாதீவு.** தகவல்: **குடும்பத்தினர்.**

(55782)(4.7.3)

## தமிழ் கலாசார முறைப்படி நடைபெற்ற பொங்கல்

தென்மராட்சி, ஜன.12

தமிழ் கலாசாரங்களுடன் கூடிய பொங்கல் விழா நேற்று முன்தினம் சாவகச்சேரி, சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்றது.

தைப்பொங்கலுக்கு கட்டியம் கூறுவது போல ஆலய பரிபாலன சபையினரும் மக்களும் இணைந்துபொங்கல் விழாவை நடத்தினர். விழாவில் விளையாட்டுப் போட்டிகளும்கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. பாரம்பரியமுறைகளான மாட்டு வண்டியில் புது மணத் தம்பதிகள் நெல், பொங்கல்பானை, விறகு ஆகியவற்றுடன் உறவினர் சூழ வருகை தந்து ஆலய முன்றிலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் ஏர் வைத்து பொங்கலில் ஈடுபட்டனர். பண்டிதர் கலாநிதி சிவஸ்ரீ கு.து. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

பொங்கலையடுத்து தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல், மெதுவாக சைக்கிள் செலுத்துதல்போன்ற போட்டிகளும், சிறுமிகளின் நடன நிகழ்வுகளும் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. (வ-9)

## வாக்காளரை அச்சுறுத்தியவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜன.12

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்காளர்களை அச்சுறுத்தியமை மற்றும் வாக்களிக்க விடாமல் தடுத்தமை தொடர்பாக கம்பளை நகர சபை உறுப்பினர் ஒருவரை கைது செய்த கம்பளை பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த நகரசபை உறுப்பினர் ஒருவரையே விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை நீதிவான் உப்புல் ராஜகருணை பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த சந்தேகநபர் கடந்த 8 ஆம் திகதி கம்பளை மௌன்டேபல் பிரதேசத்தில் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கச் சென்ற பலரை வாக்களிக்க விடாது தாக்கியமை போன்றவை தொடர்பாக முறைப்பாடுகள் பல கிடைக்கப்பெற்றதாகவும் அதனடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேக நபரையும் அவரின் சகாவையும் கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்றைய தினம் முற்படுத்தியபோதே நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

(ந)

## மீனவர்கள் 27 பேர் வெளிநாட்டு சிறைகளில்

கொழும்பு,ஜன.12

இலங்கை மீனவர்கள் 27 பேர் தொடர்ந்தும் வெளி நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இலங்கை மீனவர்கள் 10 பேர் மற்றும் 22 மீனவப் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் லால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் மியன்மாரில் இலங்கை மீனவர்கள் 17 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த 27 மீனவர்களையும் விடுவிப்பதற்கு தூதரக மட்டத்திலான பேச்சு ஆரம்பித்துள்ளதாகவும் லால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை 86 மீனவப்படகுகள் உள்ளிட்ட இந்திய மீனவர்கள் 15 பேர் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந)

# மரண அறிவித்தல்



## கனகசுந்தரம் சந்திரராசா (சந்திரன் ஐயா)

சோடாக் கொம்பனி ஒழுங்கை மல்லாகத்தைப் பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனக சுந்தரம் சந்திரராசா (சந்திரன் ஐயா) நேற்று (11.01.2015) ஞாயிறுக் கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் பாக்கியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திரராசா, செந்திமதி, காலஞ்சென்ற காந்திமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தமயந்தி மற்றும் தனுஷன், தனுசிகா, தருசிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சயந்தனின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2015) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோடாக்கொம்பனி ஒழுங்கை,
மல்லாகம்.

(55795)

தகவல்:
குடும்பத்தினர்



## திருமதி மகேஸ்வரி நடராசா (சிறிமா)


புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 55/3 அம்பல வாணர் வீதி அத்தியடி யாழ்ப்பா ணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடராசா (சிறிமா) நேற்று (11.01. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

55/3 அம்பலவாணர் வீதி
அத்தியடி பிள்ளையார் கோவில் அருகில்
யாழ்ப்பாணம்.

தகவல்:
ந.கோணேஸ்வரன்
(மகன் சிவா)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் (சின்னக்கிளி)

(ரஜனி பீடா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் கடந்த 09.01.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - காந்திமதி தம்பதியரின் மகனும், நிர்மலாதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், துஷாந்தின் பாசமிகு தந்தையும், கன்கம்மா, விசுவலிங்கம், காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் கணேசலிங்கம், யோகேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரனும், கந்தசாமி, பரமேஸ்வரி, கார்த்திகேசு, சௌசலா, கெங்கநாதசிவம், தேவராசா, அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ரஜனி பீடா ஸ்ரோர்ஸ்,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 505 1399, 077 167 7286,
021 226 3612.

(சி/19034 (4.7.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

மலர்வு 15 • 07 • 1942



உதிர்வு 07 • 01 • 2015

## கணபதி தம்பிப்பிள்ளை

அச்சுவேலி கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும் பாரதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி தம்பிப்பிள்ளை புதன்கிழமை (07.01.2015) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00மணிக்குஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகதீத்தாக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாரதி வீதி
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.



## கந்தையா தம்பிஐயா

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிஐயா நேற்று (11.01.2015) ஞாயிறுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இந்திராணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் மனோன்மணி மற்றும் இராசமணி (மல்லாகம்), தவமலர் (கோண்டாவில்), நாகபூரணம் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

138/7, கோயில் வடக்கு வீதி,
நல்லூர்.

(55796)

தகவல்:
இந்திராணி (மனைவி)



## வைரமுத்து இரட்டாய்

காரைநகர் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் வைரமுத்து இரட்டாய் நேற்று (11.01.2015) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், வினாசித்தம்பி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), குமாரவேல் (கணக்காளர் - கொழும்பு), தெய்வானை, காலஞ்சென்ற அஞ்சனா தேவி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலநாயகி, வக்சலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெகதீஸ்வரன் (அதிபர்- வலி / தூண்டல் அ.த.க.பாடசாலை), கோபாலகிருஷ்ணன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சீனிவாசராகவன் (பொறியியலாளர், கணினி மென்பொருள்), ஸ்ரீராம் (பொறியியலாளர் - கணினி மென்பொருள்), காயத்திரி (கனடா), சுகன்யா (திட்டமிடல் உதவியாளர் - நகர அபிவிருத்தி அலுவலகம்) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.01.2015) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் மருமகனின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைநகர் வடக்கு,
காரைநகர்.

(55791)

தகவல்:
அ.கோபாலகிருஷ்ணன்
(மருமகன், தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
காரைநகர் பிரதேச சபை)

## திருமதி சாந்தகுமாரி சண்முகநாதன்



புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 2ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாந்தகுமாரி சண்முக நாதன் அவர்கள் 10.01.2015 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இராசமணி தம்பதியரின் மருமகளும், சண்முகநாதனின் அன்பு மனைவியும், சந்திரதாஸ், ராஜீவா, ரஜிதா (பிரான்ஸ்), சயந்தன் ஆகியோரின் அன்புத் தாயும், ரதி, கருணா கரன், ஐங்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், பிரதீப், மகிழன், திவிஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் மல்லிகாதேவி (ஜேர்மனி), தியாகராசா (ஜேர்மனி), புஸ்பராணி (புங்குடுதீவு), சிவகுமார் (ஜேர்மனி), சத்தியவாணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் திலகவதி (ஜேர்மனி), தயானந்தன் (வேலணை பிரதேச சபை உறுப்பினர்), றஞ்சி (ஜேர்மனி), ஜெயக்குமார் (ஜேர்மனி), முருகையா, சூரியகலா,சந்திரகலா, பத்மகலா, சிவநாதன் ஆகியோரின் மைத்துனரும் கலாநிதி, காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் ஆஸ்குமாரி, மகேஸ்வரன், சண்முகநாதன் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2015) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

(55790)

தகவல்:
குடும்பத்தினர்

# செய்திகள்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற பின்னர் நேற்று முற்பகல் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டார். அங்கு மல்வத்து மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்தார். அங்கு நடைபெற்ற சமய நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மகாநாயக்க தேரர், ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு ஆசி வழங்கினார். (ற)

# தேர்தலின் பின்னர் 38 வன்முறைகள்

## 'கபே' அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் 38 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று 'கபே' அமைப்பின் நிறைவேற்று அதிகாரி கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதில் மோசமான 6 சம்பவங்களுள், தாக்குதல் நிகழ்வுகள் நான்கு, கொலைச் சம்பவங்கள் இரண்டு என்பன அடங்குகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், சிலாபம், காலி, யட்டிநுவர ஆகிய பிரதேசங்களில் மோசமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தேர்தல் நடைபெற்று முடிந்து அடுத்து வரும் ஆறு நாள்களுக்கு தேர்தல் சட்டங்களுக்கு உட்பட்ட காலமாக கருதப்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ற)

## செந்திலை கைது செய்யுமாறு பதுளையில் ஆர்ப்பாட்டம்

பதுளை, ஜன.12

ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானை உடனடியாக கைது செய்யுமாறு கோரி பதுளை, நியூபேர்க் தோட்டத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தரான செந்தில் தொண்டமான், தபால்காரர் பெரியசாமி ஞானசேகரனை கடந்த 3ஆம் திகதி தாக்கிய சம்பவம்தொடர்பிலேயே அவரை கைது செய்யுமாறு வலியுறுத்தியே அந்தப் பிரதேச மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தபாற்காரரான பெரியசாமி ஞானசேகரன், பசறை– எல்ல வீதியிலுள்ள நீர்போட் தோட்டத்தில் வாக்காளர் அட்டைகளை விநியோகித்துவிட்டு திரும்பிகொண்டிருந்தபோதே தாக்குதலுக்கு உள்ளானார். இந்த சம்பவம் தொடர்பில், தபாற்காரர் எல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தான் விநியோகிப்பதற்கு வைத்திருந்த 35 வாக்காளர் அட்டைகளையும் காணவில்லை என்றும்– தன்னுடைய கையடக்க தொலைபேசியை காணவில்லை என்றும் –தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை– செந்தில் தொண்டமானுக்கு எதிராக பண்டாரவளை நீதிமன்றத்தால் பிடியாணைபிறப்பிக்கப்பட்டுள்ளது(ற)

## சர்வதேச கண்காணிப்பாளர் வெளியேறினர்

கொழும்பு, ஜன.12

தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக வந்திருந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களின் இலங்கைக்கான இராஜதந்திரிகள் ஆகியோர் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நேற்று நாட்டைவிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# மைத்திரியால் முன்வைக்கப்பட்ட திட்ட நடைமுறை நாள்காட்டி

### 2015 ஜனவரி

**12 திங்கட்கிழமை**
இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் உத்தேச மறுசீரமைக்கப்பட்ட யாப்பின்படி நாடாளுமன்றத்தில் சகல அரசியல் கட்சிகள் மற்றும் தொண்டு ஸ்தாபனங்களை உள்ளடக்கிய தேசிய ஆலோசனை சபையை நியமித்தல்.

**19- திங்கட்கிழமை**
நாடாளுமன்றத்தை கூட்டுதல்.

**20 -செவ்வாய்க்கிழமை**
நிரந்தர கட்டளை மறு சீரமைப்பு செய்யப்பட்டு நாடாளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்பட்டுள்ள பா/67/10 இலக்க யோசனைகளின் படி மேற்பார்வை குழுக்களுக்கு சர்வகட்சி அமைச்சரவையில் உள்வாங்கப்படாத நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமித்தலும் சர்வகட்சி தலைவர்களின் சம்மதத்துடன் சகல கட்சிகளும் அங்கத்துவம் பெறும் வகையில் குழுக்களின் தலைவர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்தல்.

**21- புதன்கிழமை-**
தற்போது நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்குப் பதிலாக அமைச்சரவை ஊடாக நாடாளுமன்றத்துக்கு நிறைவேற்று பொறுப்புக் கூறக்கூடியவாறு அரசியலமைப்பை மறு சீரமைப்பு செய்வதுடன் 18 ஆம் இலக்க அரசியலமைப்பு மறுசீரமைப்பு சட்டம் நீக்கப்பட்டு சுதந்திரமான நீதிமன்ற ஆணைக்குழு, சுதந்திரமான பொலிஸ் ஆணைக்குழு, சுதந்திரமான அரச சேவை ஆணைக்குழு, சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு ஆகியவற்றை நியமித்தலுக்கான 19 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்ட வரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து கூடிய விரைவில் இத்திருத்தச் சட்டம் நடைமுறைக்குவருமாறு சட்ட திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ளல்.

**28 புதன்கிழமை**
விருப்பு வாக்கு முறை முழுமையாக நீக்கப்பட்டு, சகல தேர்தல் தொகுதிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமனம் பெறும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை தொகுதி அடிப்படையிலும் மற்றும் விகிதாசார முறைப்படியும் தெரிவு செய்யக் கூடியவாறு தேர்தல் சட்ட வரைபை சம்பந்தமாக சர்வகட்சி குழுவொன்றை நியமித்தல்.

**29 வியாழக்கிழமை**
கூடுதலான நிவாரணம் வழங்க கூடியவாறு மக்கள் வாழ்வை நோக்கிய விசேட இடைக்கால வரவு –செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

**30 வெள்ளிக்கிழமை**
அத்தியாவசிய பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வரி மற்றும் கொடுப்பனவுகளை குறைத்து சம்பள உயர்வை அதிகரித்தல்.

### 2015 பெப்ரவரி

**02 திங்கட்கிழமை**
சகல மக்கள் பிரதிநிதிகளும் பின்பற்றக் கூடிய ஒழுக்க விதியொன்று சட்டமாக்கப்படல்.

**04 புதன்கிழமை**
ஜனநாயக ரீதியாகக் கொண்ட ஆட்சி முறை அமையுமாறு புதிய ஸ்ரீலங்காவில் சுதந்திர தினப் பிரகடனம்.

**05 வியாழக்கிழமை**
கடந்த கால ஆட்சியின் கீழ் இடம்பெற்ற பெரிய அளவிலான ஊழல் சம்பந்தமாக விசாரணைக் குழு ஒன்றை நியமித்தல்.

**06 வெள்ளிக்கிழமை**
தேசிய ஊடகக் கொள்கையை அமைச்சரவையின் அனுமதியுடன் சட்ட திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

**18 புதன்கிழமை-**
சுதந்திர ஆணைக்குழு அமைத்தலும் அதற்கான நியமனங்களும்.

**19 வியாழக்கிழமை**
தேசிய கணக்காய்வு சட்ட வரைவு சமர்ப்பித்தல்.

**20 வெள்ளிக்கிழமை**
தகவலறியும் சட்ட வரைவு சமர்ப்பித்தல்.

### 2015 மார்ச்

**02 திங்கட்கிழமை**
புதிய தேர்தல் சட்ட வரைவு சம்பந்தமான குழுக்களின் யோசனைகள் உள்வாங்கப்பட்டு அதற்கான சட்ட வரைவை உருவாக்குதல்.

**17 செவ்வாய்க்கிழமை**
புதிய தேர்தல் முறை சம்பந்தமான மறுசீரமைப்பு நகல் நாடாளுமன்றத்தில் முன்வைத்து கூடிய விரைவில் சட்டமாக்குதல்.

**18 புதன்கிழமை**
தேசிய ஊடக கொள்கை சட்டத்தை அங்கீகரித்தல்.

**19 வியாழக்கிழமை**
தேசிய கணக்காய்வு சட்ட வரைபை அங்கீகரித்தல்.

**20 வெள்ளிக்கிழமை**
தகவல் அறியும் சட்ட வரைபை அங்கீகரித்தல்.

**23 திங்கட்கிழமை**
அரசியலமைப்பு சட்டம் சம்பந்தமான சபை நிறுவப்பட்டு சுதந்திர ஆணைக்குழு மற்றும் ஏனைய நியமனங்கள் செய்வதற்கான செயல் முறையை ஆரம்பித்தல்.

### 2015 ஏப்ரல்

**20 திங்கட்கிழமை**
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு பதிலாக அமைச்சரவை ஊடாக நாடாளுமன்றம் சம்பந்தமான நிறைவேற்று முறைமையை கொண்ட அரசியலமைப்பு செயல்முறையை நிறைவேற்றுதல்.

**23 வியாழக்கிழமை**
நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு காபந்து அரசின் கீழ் சுதந்திரமும் நீதியுமான பொதுத் தேர்தல் ஒன்றை பிரகடனம் செய்தல்.
அவ்வாறான பொதுத் தேர்தலில் கூடுதலான நாடாளுமன்ற உறுப்பினர்களை பெறும் கட்சியினருக்கு பிரதமர் அமைச்சு பதவியும் அடுத்த படியான நாடாளுமன்ற உறுப்பினர்களை பெறும் கட்சிக்கு பிரதிப் பிரதமர் பதவியும் வழங்குதல்.
நாடாளுமன்றத்தில் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய அமைச்சரவை கொண்ட சர்வகட்சி ஆட்சி முறையை ஏற்படுத்துதல்.
அவ்வாறான சர்வகட்சி ஆட்சி முறையின் கீழ் நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தலுக்கான தேசிய கொள்கை பிரகடனம் ஒன்றை உருவாக்கி புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்கல்.

## மைத்திரியின் வெற்றிடத்துக்கு ஜயசிங்க பண்டார


கொழும்பு, ஜன.12

மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அவரது நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கு பொலன்னறுவை மாவட்ட ஐ.ம.சு. முன்னணி பட்டியலில் அடுத்ததாக அதிக வாக்குகளைப் பெற்ற ஜயசிங்க பண்டார நியமிக்கப்படவுள்ளார்.

இவர் எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்கவுள்ளார். (ற)



நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதை அடுத்து மலையகத்தில் அவரது ஆதரவாளர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். வெடி கொளுத்தியும், பாற்சோறு வழங்கியும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திவருகின்றனர். (ற)



## கட்டுப்பணத்தை இழந்தனர் 17 பேர்

கொழும்பு, ஜன.12

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 17 வேட்பாளர்களின் கட்டுப்பணம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

குறித்த வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் ஒரு சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளத் தவறிய நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி சுயாதீன வேட்பாளர்கள் இரண்டு பேரினதும், 15 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களதும் கட்டுப்பணம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. மேலதிக தேர்தல் ஆணையாளர் டி.அமரதாச இதனைத் தெரிவித்துள்ளார்.

சுயாதீன வேட்பாளர்கள் தலா 75 ஆயிரம் ரூபாவும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் தலா 50 ஆயிரம் ரூபாவும் கட்டுப்பணமாக செலுத்தி இருந்தனர். அதன்படி அவர்களால் செலுத்தப்பட்ட 9 லட்சம் ரூபா கட்டுப்பணம் தற்போது அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. (ற)



## போலியான குற்றச்சாட்டில் கைது செய்ய முயற்சி

**– ரொஷான் ரணசிங்க**

கொழும்பு, ஜன.12

தன்னைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

போலி குற்றச்சாட்டின் அடிப்படையில் தனக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என அவர் தெரிவித்தார். கடந்த ஜனாதிபதித்தேர்தலில், ரொஷான் ரணசிங்க மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தார். (ற)

# மஹிந்தவுடைய தோல்வி தமிழருக்கு தீர்வைத் தரும்

## நம்பிக்கை வெளியிடுகின்றார் கருணாநிதி

சென்னை, ஜன.12



இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்திருப்பதால் ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இன்னொரு நாட்டில் நடைபெற்ற தேர்தலில் ஒருவர் தோல்வி அடைந்தது கண்டு மகிழ்ச்சி கொள்வது நாம் பின்பற்றி வரும் நாகரிகத்துக்கு ஏற்புடையது அல்ல. எனினும், நமது தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்களை வேட்டையாடிய ராஜபக்ஷ தோல்வி அடைந்திருப்பது நமக்கு ஒரு வகை நிறைவைத் தருகிறது என்பதால் வரவேற்கலாம்.

இந்தத் தோல்வியின் மூலம் இயற்கை நீதி நிலை நாட்டப்பட்டிருக்கிறது. இனப்படுகொலை, மனித உரிமைகள் மீறல், போர்க் குற்றங்களுக்கு தக்க தண்டனை தரப்படும்போதுதான் இயற்கை நீதி முழுமை பெறும். கடந்த காலங்களில் எல்லா சர்வாதிகாரிகளுக்கும் ஏற்பட்ட தவிர்க்க முடியாத முடிவு, சாகாத படிப்பினையாக சரித்திரத்தில் பதிவாகியிருக்கும்.

ஈழத் தமிழர்கள் அனைத்து உரிமைகளுடன் கண்ணியத்துடன் வாழவும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தைத் திரும்பப் பெறவும் சிறிசேன வழி ஏற்படுத்த வேண்டும்.

1950ஆம் ஆண்டிலிருந்து ஈழத் தமிழர்களுக்காக குரல்கொடுத்து வரும் இயக்கம் தி.மு.க. என்ற முறையில் இதனை வலியுறுத்துகிறேன். இனியாவது ஈழத் தமிழர்கள் விரும்பும் அரசியல் தீர்வுக்கு விடியல் வெளிச்சம் ஏற்படத் தொடங்கும் என நம்புவோம் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## முன்னாள் அமைச்சரின் மருமகன் கைது

கொழும்பு, ஜன.12

முன்னாள் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தனவின் மருமகனான களுத்துறை பிரதேச சபை உறுப்பினர் வீரக்கொடி தனுஷ்க பிரியதர்சன நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி பேருவல பிரதேசத்தில் பட்டாசு கொளுத்தி கொண்டாடிய ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. அது தொடர்பில் முறைப்பாடு கிடைத்ததைத் தொடர்ந்து பொலிஸாரால் தனுஷ்க கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் கடும்காயத்துக்குள்ளான பேருவல ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் சமல ரணசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைப் பெற்றதன் பின்னர், தற்போது ராகம வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# ஊழல்வாதிகளை இணைக்காதீர்கள்

கொழும்பு, ஜன.12

NFGC
நல்லாட்சிக்கான தேசிய முன்னணி
National Front for Good Governance

புதிதாக அமைக்கப்படவுள்ள அமைச்சரவையில் ஊழல்வாதிகளை இணைத்துக் கொள்ள வேண்டாம் – என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது நல்லாட்சிக்கான தேசிய முன்னணி.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அந்த முன்னணி கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் –

உங்கள் தேர்தல் வெற்றி குறித்தும் எமது தேசத்தின் 6ஆவது ஜனாதிபதியாக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்தும் எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். உங்களது தலைமையில் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கையுடன் எமது மக்களில் பெரும்பாலான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர் என அனைத்து மக்களும் மனப்பூர்வமாக ஆதரித்து – உங்கள் வெற்றிக்காக வாக்களித்துள்ளனர்.

தற்போது அடுத்த பணியாக உங்களது அமைச்சரவையை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள் என நம்புகிறோம்.

உங்கள் அமைச்சர்களைத் தெரிவு செய்யும்போது, முன்னைய அரசில் பெரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், பொதுச் சொத்துக்களைச் சுரண்டியவர்கள் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டவர்கள் எவரையும் உள்வாங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தாழ்மையாக வேண்டிக் கொள்கிறது – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# செய்திகள்

## தேர்தல் மோசடிகள்: விசாரணை நடக்கும்

### மங்கள சமரவீர எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மிகவும் மோசடியானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.



கடந்த அரசு, தேர்தலின் போது அதிகாரத்தையும், அரச சொத்துக்களையும் பயன்படுத்திய விதம் குறித்து விசாரணை நடத்தவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்காக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் அரசு அதிகார பலம், அரச சொத்துக்கள், பொலிஸ் பலம் என அனைத்தையும் கட்டுப்பாடுகள் இன்றி பயன்படுத்தியுள்ளன. இது குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் – என்று அவர் கூறியுள்ளார். (ற)

## மஹிந்தவின் தகிடுதத்தம் விரைவில் அம்பலமாகும்

### அஜித் பீ. பெரேரா எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஜன.12



ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்வெளியிடப்படுவதைத் தடுத்து நிறுத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எவ்வாறு முயற்சித்தார் என்பது குறித்து நாடாளுமன்றில் அம்பலப்படுத்தப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

இறுதி நேரத்தில் அவசரகால நிலைமையை நடைமுறைப்படுத்தி, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதைத் தடுக்க அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சித்தார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தேர்தல் முடிவுகளை அறிவிப்பதைத் தடுக்க எவ்வாறான முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பது நாடாளுமன்றில் அம்பலப்படுத்தப்படும். இராணுவத்தின் உதவியுடன் பதவியில் நீடித்திருப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ முயற்சித்தார் – என்றும் அவர் கூறியுள்ளார்.

அதிகாலை 2 மணியளவில் சட்ட மா அதிபரை அலரி மாளிகைக்கு அழைத்து அவசரகால நிலைமை குறித்த ஆவணத்தில் கையொப்பமிடுமாறு ஜனாதிபதி மஹிந்த உத்தரவிட்டார் என்றும், எனினும், இந்த உத்தரவை சட்ட மா அதிபர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளார். சட்ட மா அதிபர் அந்த உத்தரவை ஏற்க மறுத்ததால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து ஆட்சி மாற்றம் குறித்து பேசினார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ற)

## மஹிந்த, கோத்தாவின் பாதுகாப்பு குறையாது

### உறுதியளித்துள்ளாராம் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜன.12

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றம் இருக்காது என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார்.



கடந்த வெள்ளிக்கிழமை தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த தருணத்தில் அதிகாலை வேளையில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து இந்த உறுதியை வழங்கியுள்ளார். பதவி வகித்த காலத்தில் வழங்கப்பட்ட அதே யளவு பாதுகாப்பு முழு அளவில் வழங்கப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளார்.

பாதுகாப்பு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ரணில் விக்ரமசிங்க அளித்த உறுதிமொழிகளைத் தொடர்ந்து எவ்வித கலகமும்இன்றி அதிகாரம் சுமுகமான முறையில் கைமாறப்பட்டது என்று ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் பூரண பாதுகாப்பு வழங்குவதாக புதிய அரசு வழங்கிய உறுதி மொழிக்கு ஐக்கிய மக்கள்சுதந்திரக்கூட்டமைப்புவரவேற்பை வெளியிட்டுள்ளது. (ற)

## ஆதரவு வழங்குவது குறித்து முடிவில்லை

### ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, ஜன.12

புதிய அரசுக்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று ஜே.வி.பி கட்சி தெரிவித்துள்ளது.

அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு புதிய அரசுக்குஆதரவளிப்பதா இல்லையா என்பது குறித்து எதிர்வரும் நாள்களில் தீர்மானிக்கப்படும் என கட்சியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கதெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசுக்கு ஆதரவளிப்பதா இல்லையா அவ்வாறு ஆதரவளித்தால் எவ்வாறான ஆதரவு வழங்குவது என்பது குறித்து இன்னமும் உறுதியாக தீர்மானிக்கவில்லை. எனினும் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் தேசிய ஆலோசனை சபையில் நிச்சய மாக எமது கட்சியின் பிரதிநிதித்துவம் இருக்கும் "– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் தீர்வை கோருகிறது கூட்டமைப்பு

### வடக்கில் அசம்பாவிதம் எதுவுமில்லை; பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

புலிக்கொடி எங்கும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிக்கொடியை ஏந்தி எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமக்கான தீர்வைப் பெற்றுத் தருமாறே கோருகின்றனர் – என்று தெரி வித்தார் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க.

யாழ்ப்பாணத்திலோ, வடக்கின் எந்தவொரு பகுதியிலோ எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை என்பது மகாநாயக்க தேரருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுக் கண்டியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது அங்கு அமைதி நிலவுகின்றது என்றும், அது தொடர்பில் இன்று (நேற்று) காலை யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ்மா அதிபரிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். (ற)




# தொடர்ச்சிகள்

## சிக்கலில்

"இராணுவத் திட்டத்தின் ஊடாக தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயற்சித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி விடயம் தொடர்பில் எங்களிடம் இருக்கின்ற ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்டால் சட்டம் சுயாதீனமாகச் செயற்படும்"– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது இராணுவத்தினரை வைத்து பெரும் சூழ்ச்சித் திட்டமொன்று வகுக்கப்பட்டது. 9 ஆம் திகதி விடியும் போது சில திட்டங்களை நடைமுறைப்படுத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷவும் திட்டமிட்டிருந்தனர். ஆனால், இராணுவ மற்றும் பொலிஸ் பிரதானிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்ததால் அவர்களால் தமது திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போனது."– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

"இவை தொடர்பான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. ஆனால், தற்போது இருக்கின்ற ஆதாரங்களை வைத்து நாம் எந்த நடவடிக்கையையும் எடுக்க மாட்டோம். ஆதாரங்களை நன்றாக ஆராய்ந்து அவை உண்மை என்று நிரூபிக்கப்பட்டால், இருவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவர்கள் இருவர் விடயம் தொடர்பில் சட்டம் சுயாதீனமாகச் செயற்படும்."– என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் வடக்கு – கிழக்கு மக்கள் வழங்கிய வாக்குகளை நாம் மதிக்கின்றோம். 2005ஆம் ஆண்டு இழைக்கப்பட்ட வரலாற்றுத் தவறை 2015 இல் அவர்கள் சரிசெய்துள்ளனர். புலிகள் செய்த தவறுக்கு வடக்கு மக்கள் பதிலளித்துள்ளனர்" – என்றும் அவர் கூறினார். (ந–5)

## இலங்கைக்கு

திருத்தந்தை புனிதர் பட்டத்தை அறிவித்து காலிமுகத்திடலில் பிரமாண்டமான திருப்பலி பொன்றை நிறைவேற்றி நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசி வழங்கவுள்ளார்.

அதனையடுத்து மடுத்திருப்பதிக்குச் செல்லும் பரிசுத்த பாப்பரசர் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொள்ளும் வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

எளிமையின் இருப்பிடம் என பெயர் பெற்ற பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் அனைத்து இன மத மக்களையும் நேசிப்பவர். மத்திய கிழக்கு நாடுகளில் இடம்பெறும் மோதல்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதுடன் அங்கு சமாதானம் நிலவ விசேட பிரார்த்தனைகளையும் வழிபாடுகளையும் தொடர்ந்து நடத்தி வருகின்றார்.

இதுவரை இலங்கைக்கு இரண்டு பரிசுத்த பாப்பரசர்கள் வருகை தந்துள்ளனர். 1976ஆம் ஆண்டு பரிசுத்த பாப்பரசர் 6ஆம் சின்னப்பரும் 1995ஆம் ஆண்டு பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரும் இலங்கைக்குப் பயணம் செய்து சில மணித்தியாலங்களை இலங்கையில் கழித்தனர். இம்முறையே பரிசுத்த பாப்பரசர் மூன்று தினங்கள் தமது யாத்திரையை மேற்கொள்கின்றார்.

ஜோர்ஜ் மரியோ பியோஜியோ அவர்கள் கத்தோலிக்க திருச்சபையின் 266வது தலைவரான திருத்தந்தையாக 2013ஆம் ஆண்டு பங்குனி மாதம் தெரிவு செய்யப்பட்டார். பிரான்சிஸ் என்ற பெயரை அவர் தெரிவு செய்து கொண்டார். இவரே அமெரிக்க கண்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பாப்பரசராவார்.

பெர்க்கோக்லியோ ஆர்ஜென்டினாவின் புவனோஸ் ஐரேஸ் நகரில் 1936ஆம் ஆண்டு மார்கழி 17ஆம் திகதி பிறந்தார். ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஐரோப்பியரல்லாதவர் இவரே. புனித பிரான்சிஸ் அசிசியின் பெயரையே இவர் தெரிவு செய்து கொண்டமை இவரது தாழ்ச்சி மிக்க பயணத்துக்கான முன்னோடி என்கின்றார்கள் ஆன்மீக அறிஞர்கள்.

பாப்பரசராகத் தெரிவுசெய்யப்படும் முன் பெர்கோக்கிலியோ புவனஸ் ஐரேஸின் பேராயராக 1998 முதல் 2013 வரை கடமையாற்றினார். 2001ஆம் ஆண்டு முதல் பதின்மூன்று ஆண்டுகளாகக் கர்தினாலாக பதவி வகித்திருந்தார். அத்தோடு ஆர்ஜென்டீனா நாட்டின் ஆயர்கள் மாநாட்டின் தலைவராக 2005ம் ஆண்டு முதல் 2011 வரை பதவி வகித்திருந்தார்.

பாப்பரசராகப் பதவி ஏற்றபின் அவர் பயணித்த முதல் சர்வதேசப் பயணமானது அவரது அண்டை நாடாகிய பிரேஸிலுக்கு 2013ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் மேற்கொண்ட பயணமாகும். அதே ஆண்டு மார்கழி மாதம் 2013ஆம் ஆண்டிற்கான உலகின் மிகச் சிறந்த நபர் என்ற விருதினை அவருக்கு அளித்து கௌரவித்தது, சர்வதேச சஞ்சிகையாகிய 'டைம்'. இத்தகைய விருதினை ஒருவர் பெறுவது மிக அபூர்வமானதாகும். (ந)

## மைத்திரிக்கு

கொடுத்தனர். கண்டிக்குச் சென்ற ஜனாதிபதி மற்றும் பிரதமர் ரணில் ஆகியோர் சர்வமதத் தலைவர்களை யும் சந்தித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

கொழும்பில் சுதந்திர சதுக்கத்துக்கு காலை 8 மணியளவில் ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில், நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித, ஹக்கீம், ரிசாத், லக்ஸ்மன் கிரியெல்ல, விஜேயதாஸ ராஜபக்ஷ மற்றும் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிக்கா ஆகியோர் வந்து சேர்ந்தனர். அங்குள்ள டி.எஸ். சேனநாயக்காவின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

இதன் பின்னர் கண்டியை நோக்கி கார் பவனி ஆரம்பமானது. இடையில், ஹொர கொல்லயில், பண்டாரநாயக்காவின் சிலைக்கும் மலரஞ்சலி செலுத்தினர். இதன் பின்னர் கண்டிக்குச் சென்று அங்கு, தலதா மாளிகையில் வழிபாடு நடத்தினர். அதன் பின்னர் மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளையும் அவர்கள் சந்தித்தனர்.

அதனைத் தொடர்ந்து கண்டியிலுள்ள ஆயர் இல்லத்துக்குச் சென்று ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர். கண்டி மீராமக்கம் பள்ளிவாசலுக்குச் சென்று விசேடது ஆ பிரார்த்தனையில் ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் பங்கெடுத்தனர். இறுதியில் கண்டி சிறி செல்வ விநாயகர் ஆலயத்துக்குச் சென்ற விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

பிரதான வீதியின் இருமருங்கிலும் நின்று பெருமளவிலான பொதுமக்கள் புது ஜனாதிபதிக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினர். (ந–5)

## மஹிந்தவை

சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேனா தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் மஹிந்தவின் தலைமையில் மற்றுமொரு மத்தியக் குழுக் கூட்டமும் இடம்பெற்றுள்ளது. இந்தநிலையில் சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பது பொய்யான தகவல் என்று முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்டார். அதில் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டியிருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதில் கட்சியின் புதிய தலைவராக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் புதிய பொதுச் செயலராக துமிந்த திசநாயக்கவும், பொருளாளராக ஜனக பண்டார தென்னக்கோனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் கட்சியின் காப்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்புப் படி அரசில் உயர்பதவி வகிக்கும் கட்சி உறுப்பினரே, கட்சியின் தலைவராகப் பதவி வகிப்பார் என்று கூறப்பட்டுள்ளது. (ந–5)

## இடைக்கால

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இந்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் கடந்த வருடம் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பின்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார். மைத்திரிபால சிறிசேனா வெற்றி பெற்றிருந்தார்.

மைத்திரிபால சிறிசேனவால், அவரது ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையில், இடைக்கால வரவு – செலவுத் திட்டம் குறித்து தெரிவிக்கப்பட்டிருந்தது. நூறு நாள் வேலைத் திட்டத்தில் அது உள்ளடக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் எதிர்வரும் 29 ஆம் திகதி, இடைக்கால வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மக்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட நிவாரணம், அத்தியாவசிய பொருள்களின் விலைகளை குறைத்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளும், இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய வருடத்தின் முதலாவது நாடாளுமன்றக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறும் என்று நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார். (ந–5)


**சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்**



அன்னை மடியில் 22 . 09 . 1955

இறைவன் அடியில் 13 . 12 . 2014

**சண்முகம் செல்லையா இராமகிருஷ்ணன்**
**(ஓய்வு பெற்ற நிதியாளர்- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

கடந்த 13.12.2014 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் ச.செ.இராமகிருஸ்ணன் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வும் நாளை 13.01.2015 மு.ப 11.00 மணியளவில் நெல்லியடி தடங்கன் புளியடி மண்டபத்தில் நடைபெறும் அன்றைய தினம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தலைவரின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர்கள் யாழ் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் விரிவுரையாளர்கள் ஊழியர்கள் அத்துடன் நேரிலும் தொலைபேசி மூலமும் தமது அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சாமியன் அரசடி,
கரவெட்டி.

குடும்பத்தினர்

**மரண அறிவித்தல்கள்**



**வைத்திய கலாநிதி**
**கனகரத்தினம் ஜெயபாலரத்தினம்**

(இளைப்பாறிய ஆசிரியர் - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி - S.Thomas Preparatory School, Kollupitiya)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி கனகரத்தினம் ஜெயரத்தினம் 10.01.2015 சனிக்கிழமையன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியகலாநிதி கனகரத்தினம், வைத்திய கலாநிதி கோமதி அம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான நடராசா கனகம்மா தம்பதியரின் மருமகனும், சறோஜினி தேவியின் அன்புக் கணவரும், ஜெயப்பிரசாத், ஜெயதினேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரரத்தினம், அருள்ஜோதி, கோபாலரத்தினம், திலகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்கிழமை (13.01.2015) நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரத்தின வைத்தியசாலை,
மானிப்பாய் றோட், உரும்பிராய். (55799)

தகவல்:
குடும்பத்தினர்

**சுப்பிரமணியம் ஜெயராஜன்**
**(ஜெயம்)**



யாழ்ப்பாணம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் தற்போதைய வதிவிடமாக இல 49 D8 உருத் திரபுரத்தை கொண்டவருமாகிய சுப்பிர மணியம் ஜெயராஜன் (ஜெயம் K.M.P சோதிடர்) நேற்று 11.01. 2015 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் திலகவதியின் (செல்லம்) அன்புக்கணவரும், திருமாறன், சுகந்தன், தசன், சுதன், சுரேஸ், தர்ஸ்சன், நிரோஜன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சுமதி, வதனி, புஸ்பா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுவாதி, சுவர்ணிக்கா, ஆதித்தன், முகிலினி, கருணிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2015) திங்கட்கிழமை அவரது உருத்திரபுரம் இல்லத்தில் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உருத்திரபுரம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 49, 8ஆம் வாய்க்கால்,
2 ஆம் குறுக்கு, உருத்திரபுரம்,
கிளிநொச்சி (51325)

தகவல்:
குடும்பத்தினர்.

# விளையாட்டு

## நியூஸியிடம் மண் கௌவின இலங்கை சிங்கங்கள்!

நியூஸிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான 7 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் நேற்றையதினம் நியூஸிலாந்தின் கிறைஸ்சேர்ச் மைதானத்தில் ஆரம்பமானது.

இந்த இரு அணிகளுக்கும் இடையில் ஏற்கனவே நடந்து முடிந்த டெஸ்ட் தொடரை நியூஸிலாந்து அணி 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றி இலங்கையை முழுமையாக வெள்ளையடிப்பு செய்தது. இதனையடுத்து டெஸ்ட்டில் ஏற்பட்டபடு தோல்விக்குப்பதிலாக ஒருநாள் தொடரினைக் கைப்பற்றி பழி தீர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கை அணியும் சொந்த மண்ணில் தொடரினை கைப்பற்றி ஒருநாள் தொடரிலும் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நியூஸிலாந்தும் களமிறங்கின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி முன்னணிவீரர்களாக களமிறங்கிய கருணாரத்ன 5 ஓட்டங்களுடனும் டில்சான் 19 ஓட்டங்களுடனும் சங்கா 4 ஓட்டங்களுடனும் வெளியேறி ஏமாற்ற இலங்கையணி 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தனது முன்னணி வீரர்கள் மூவரையும் இழந்து தவித்தது. தொடர்ந்து வந்த மஹெல நிதானமாக நின்று போராடினாலும் மறுமுனையில் மத்தியூஸ் 15 ஓட்டங்களுடனும் திரிமன்னே 23 ஓட்டங்களுடனும் ஜீவன் மெண்டிஸ் 23 ஓட்டங்களுடனும் விடைபெற இலங்கையணி 6 இலக்குகள் இழப்பிற்கு 200 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நிதானமாக ஆடி சதம் கடந்த மஹெல ஆட்டமிழந்ததும் தொடர்ந்து வந்த பின்வரிசை வீரர்களாலும் பெரிதளவில் சாதிக்க முடியாமல் போக 50 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் இலங்கையணி 9 இலக்குகள் இழப்புக்கு 218 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக மஹெல 104 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக எம்.சி.கினிநகன் 4 இலக்குகளையும் மில்னி 2 இலக்குகளையும் அண்டர்சன் மற்றும் நாதன் மக்கெலம் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

219 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு அதன் ஆரம்ப வீரரான கப்ரில் ஓட்டம் எதனையும் பெறாமல் வெளியேறி அதிர்ச்சி கொடுத்தார். மறுமுனையில் மக்கலம் தனது பாணியில் தாண்டவத்தினை ஆரம்பித்து 19 பந்துகளில் அரைச்சதம் கடந்து அசத்தினார். 51 ஓட்டங்களுடன் மக்கலமும் விடைபெற தொடர்ந்து வில்லியம்சன் 15 ஓட்டங்களுடனும் லாதம் 15 ஓட்டங்களுடனும் எலியொற் ஓர் ஓட்டத்துடனும் வெளியேறினர். நியூஸிலாந்து அணியின் ஓட்டம் 101 ஆக இருந்த பொழுது அதன் முதல் 5 வீரர்களும் ஆட்டமிழந்திருந்த



னர். ஆனாலும் தொடர்ந்து வந்த அன்டர்சன் நிதானத்தை கையிலெடுத்த படிப்படியாக ஓட்டங்களைக் குவித்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்ல நியூஸிலாந்து அணி 43 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. அதிக பட்சமாக அன்டர்சன் 81ஓட்டங்களைப்பெற்றார்.

பந்து வீச்சில் இலங்கையணி சார்பாக குலசேகர, சேனநாயக்கா மற்றும் டில்சான் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். 7 ஆட்டங்களைக் கொண்ட தொடரில் நியூஸிலாந்து அணி 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில்உள்ளது ஆட்டநாயகனாக அன்டர்சன் தெரிவானார். இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை கமில்டன் மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ற-ரி)



## உயரப்புலம் ஸ்ரீமுருகன் தாச்சியில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 12

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு நடத்திய தாச்சிச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் உயரப்புலம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கடந்த சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இளவாலை வாலிபத் திடலில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உயரப்புலம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வசந்தபுரம் இளஞ்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணியினரும் மாறி மாறி ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். ஆட்டத்தின் முடிவு வரை இரு அணிகளுக்குமான வெற்றி வாய்ப்புக்கள் சம விகிதத்திலேயே காணப்பட்டன. இருப்பினும் ஆட்டத்தின் இரண்டாவது பாதியின் முடிவில் உயரப்புலம் ஸ்ரீ முருகன் அணி சற்று ஆதிக்கம் செலுத்தி 7 புள்ளிகளையும் வசந்தபுரம் இளஞ்சுடர் விளையாட்டுக்கழக அணி 3 புள்ளிகளையும் பெற்றன. இதனால் உயரப்புலம் ஸ்ரீ முருகன் அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ற-23,ரி)

## மரதன் ஓட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாண, ஜன .12

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு நடத்திய மரதன் ஓட்டப்போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு இளவாலை சித்திர மேழியில் நடைபெற்றது. போட்டியை வலிவடக்கு பிரதேச சபையின் உறுப்பினர் திரு.வே.சண்முகநாதன் ஆரம்பித்துவைத்தார்.

15 கிலோ மீற்றரை வெற்றியிலக்காக கொண்டு இடம்பெற்ற இந்தப் போட்டியில் பல வீரர்கள் கலந்துகொண்டனர். இருப்பினும் 15 வீரர்களே ஓட்டப் பாதையைப் பூரணப்படுத்தினர். இவர்களில் முதலாமிடத்தை செல்வன் அபில்ராஜும் 2ஆம் இடத்தை செல்வன் தமிழ்ச்செல்வனும், 3ஆம் இடத்தை செல்வன் யசிந்தனும் பெற்றுக் கொண்டனர். (ற-23-ரி)

## தொடர்ச்சிகள்

### வெளிவிவகார

கலந்துரையாடலின் முடிவில் பதவி இழக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்கவுள்ள மங்கள சமரவீர ஆகியோரே இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுக்கவுள்ளனர். இந்தக் கலந்துரையாடல் இந்த வாரம் இடம்பெறவுள்ளது. அதற்காக வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் 48 தூதுவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

புதிய அரசின் வெளிவிவகாரக் கொள்கை, சர்வ தேசத்துடன் உறவை பலப்படுத்தல், பதவி மாற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்படவுள்ளன. அதேவேளை, அரசியல் செல்வாக்கால் வெளிவிவகார பிரிவில் உயர் பதவிகளை வகிப்பவர்கள் அந்தப் பதவிகளில் இருந்து விலக்கப்பட்டு, வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களை நியமிப்பது குறித்த பேச்சும் தற்போது இடம்பெற்று வருகின்றது.

அதன் பிரகாரம், 43 பேரின் பதவிகள் மாற்றப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளிவிவகார பதவிகளில் மாற்றங்கள் இடம்பெறும் என்ற உறுதிமொழியை வழங்கியிருந்தார். (ற-5)

### கைநழுவியது

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டுமானால் 113 ஆசனங்களைப் பெற்றிருக்க வேண்டும். தற்போதைய நிலையில் ஆளும் கட்சியிடம் 106 நாடாளுமன்ற உறுப்பினர்கள்மட்டுமேஉள்ளனர். 2010 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தது. 163 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மூன்றில் இரண்டு பலத்தை உடையதாக, மஹிந்த தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியில் இருந்தது.

கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் கட்சித்தாவல்கள் தொடங்கின. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், 28 நாடாளுமன்ற உறுப்பினர்களை இழந்து 136 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்தனர்.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து 30 நாடாளுமன்ற உறுப்பினர்களும், வடமேல் மாகாண சபையின் முதலமைச்சர் தயாசிறி ஜெயசேகரவும், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்.

சரத் அமுனுகம, அதாவுட செனிவிரத்ன, ரெஜினோல்ட் குரே, பியசேன கமகே, விஜயமுனி சொய்சா, ரி.பி.எக்கநாயக்க, எஸ்.பி.நாவின்ன, சனத் ஜெயசூரிய, விநாயகமூர்த்தி முரளிதரன் உள்ளிட்ட மேலும் பலர் ஆதரவளிக்க முன்வந்துள்ளார். இதனால் நாடாளுமன்றத்தில் அரசு பெரும்பான்மையை இழந்துள்ளது.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பதவி விலகச் செய்ய வைத்து அதனூடான நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்கு மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார். அத்துடன், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் தங்களிடம் இருக்கையில், ரணில் விக்கிரம சிங்கவை எவ்வாறு பிரதமராக நியமிக்க முடியும் என்றும் நேற்றுக் காலை அவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

இந்த நிலையிலேயே, நாடாளுமன்றதில் மஹிந்த பெரும்பான்மை பலத்தை இழந்துள்ளார். (ற-5)

### பாப்பரசர்

கொழும்பு கொம்பனி வீதியையும் சென்றடையும். அதே சேவை அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்பட்டு இரவு 11.32 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

இதேவேளை நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் விசேட ரயில் நண்பகல் 12.30 மணிக்கு மடு வீதியைச் சென்றடையும். அங்கிருந்து மீண்டும் மாலை 5.30 மணிக்கு மடு வீதியில் இருந்து புறப்பட்டு இரவு 9.36 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ்ப்பாணம்– மடுவுக்கான கட்டணமாக 200 ரூபா அறவிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-14)

### அச்சத்தில்

மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க மற்றும், பிரிகேடியர் துமிந்த கெப்பிட்டிவலன ஆகியோரே இலங்கைக்குத் திரும்பி வந்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில், சரத் பொன்சேகா தோல்வியடைந்ததையடுத்து, இலங்கை அரசால் கட்டாய ஓய்வு கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதையடுத்து அவர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருந்தனர்.

தற்போது மைத்திரிபால சிறிசேன புதிய ஜனாதிபதியாகியுள்ளதை அடுத்து, இவர்கள் நாடு திரும்பியுள்ளனர். இவர்களை இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்றுள்ளனர். (ற-5)





# அறிவிக்கப்பட்டது உலகக்கிண்ண ஆஸ்திரேலிய அணி

உலக கிண்ணத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில், காயத்தில் அவதிப்படும் மைக்கேல் கிளார்க் அடுத்த மாதம் 21ஆம் திகதிக்கு முன் உடற்தகுதியை நிரூபிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மீண்டும் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மண்ணில் 11வது உலக கிண்ணத் தொடர் வரும் பெப்ரவரி 14ஆம் திகதி ஆரம்பிக்கின்றது.. இதில் பங்கேற்கவுள்ள 15 பேர் கொண்ட ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தோள்பட்டை காயத்தால் அவதிப்படும் கிளார்க் மீண்டும் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் மட்டும் பங்கேற்ற இவர், காயத்தால் அடுத்த மூன்று ஆட்டங்களில் இருந்து விலகினார். இதனால், ஸ்டீவன் ஸ்மித் கேப்டன் பொறுப்பை ஏற்றார். காயம் இன்னும் குணமாகாகத நிலையில், கிளார்க்கிற்கு மீண்டும் தலைமைப் பொறுப்பு தரப்பட்டுள்ளது.

இது குறித்து ஆஸ்திரேலிய அணி தேர்வாளர் வெளியிட்ட செய்தியில், 'உலக கோப்பை அணியில் தலைமைப் பொறுப்பை கிளார்க் ஏற்றுள்ளார். உலகக்கிண்ணத்தில் வங்கதேசத்துக்கு எதிரான ஆட்டத்திற்கு முன்பாக, கிளார்க் உடற்தகுதியை நிரூபிக்க வேண்டும். இல்லையெனில், இவருக்குப்பதில் வேறு வீரர் தேர்வு செய்யப்படுவார்.' என தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளார்க் பங்கேற்காத பட்சத்தில் தலைமைப் பொறுப்பை பெய்லி ஏற்கலாம். அணி விவரம்: கிளார்க் (தலைவர்) பெய்லி (துணை தலைவர்), கம்மின்ஸ், தோகர்டி, பால்க்னர், ஆரேரன் பின்ச், ஹாடின், ஹேசல்வுட், மிட்சல் ஜான்சன், மிட்சல் மார்ஸ், மேக்ஸ்வெல், ஸ்டீவன் ஸ்மித், ஸ்டார்க், வார்னர், வாட்சன். (ற–ரி)

## ரெய்னாவின் 'டக் அவுட்' சாதனை



சுரேஸ் ரெய்னா தனது கடைசி 3 இன்னிங்ஸ்களில் ஓட்டங்கள் எதையும் எடுக்கவில்லை. ஹேட்ரிக் 'டக்' அவுட்கள் ஆகியுள்ளார். சிட்னியில் 2 இன்னிங்ஸ்களிலும் 'டக் அவுட்' ஆன ரெய்னா, இதற்கு முன்னர் இங்கிலாந்து டெஸ்ட் தொடரில், ஓவல் மைதானத்தில் (2011) இரண்டு இன்னிங்ஸ்களிலும் 'டக் அவுட்' ஆகியுள்ளார்.

7 டெஸ்ட் இன்னிங்ஸ்களில் 5 முறை 'டக் அவுட்' ஆகியிருக்கிறார். மொகீந்தர் அமர்நாத்திற்குப் பிறகு இந்திய முன்வரிசை துடுப்பாட்ட வீரர் ஒருவர் டெஸ்ட் வாழ்வில் இருமுறை இரு இன்னிங்ஸ்களிலும் 'டக் அவுட்' ஆகியுள்ள வீரர் சுரேஸ் ரெய்னா மட்டுமே. (ற–ரி)

## வார்த்தைகளால் விளாசும் கோஹ்லி

இந்திய கிரிக்கெட் அணியின் விராட் கோஹ்லி, வாய் வார்த்தைகளால் ஆஸ்திரேலிய வீரர்களை விரட்டி வருகிறார். இந்திய அணி டெஸ்ட் தொடரை பறி கொடுத்தபோதிலும், தனது அபார ஆட்டத்தால் ஆஸ்திரேலிய பந்துவீச்சாளர்களை அச்சம்கொள்ள வைத்தார் கோஹ்லி. கோஹ்லியின் அதிரடி பற்றி ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் ஹேஸல்வுட் கூறுகையில், அடிலெய்டு மற்றும் மெல்போர்ண் டெஸ்ட் போட்டிகளில் கோஹ்லி சிறப்பாக விளையாடினார். அவரது இலக்கு எங்களுக்கு மிகவும் முக்கியமானது. தொடர் தாக்குதலைத் தொடுத்து அவரது இலக்கை சீக்கிரம் கைப்பற்றி விட்டோம் என்றால், மற்ற இலக்குகள் விரைவில் விழுந்து விடும்.

விராட் கோஹ்லியை சாய்க்க நாங்கள் ஏதாவது ஒரு புது யுக்தியை வகுப்போம். அவர் வேகமாக, சுதந்திரமாக ஓட்டங்கள் குவிக்க விரும்புவார். எனவே அவருக்கு தொடர்ந்து மிகச் சிறப்பாகப் பந்து வீசி ஓட்டங்கள் எடுக்க விடாமல் தடுமாற வைக்க வேண்டும்.

அவரை நீண்ட நேரம் ஓட்டங்கள் எடுக்கவிடாமல் கட்டுப்படுத்திவிட்டால், அதன் பிறகு நெருக்கடியில் தவறாக அடித்து ஆட்டம் இழந்து விடுவார் என்று நம்புகிறோம். பொதுவான இந்திய கிரிக்கெட் வீரர்கள் களத்தில் உணர்ச்சி வேகத்தைக் காட்டாதவர்கள். எதிராளி எவ்வளவு சீண்டினாலும் புத்தரைப் போல அமைதி காத்து நிற்பார்கள்.

முன்னாள் ஜாம்பவான்களான டெண்டுல்கர், டிராவிட் போன்றோர் எதிராளிக்கு துடுப்பு மூலம்தான் பதில் சொல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார்கள். ஆனால் அதிலிருந்து மாறுபட்டு நிற்கிறார், விராட் கோஹ்லி.

இந்தியாவின் வேகமான இளந்தலை முறையை இவர் பிரதிப லிக்கிறார் என்று கூறியுள்ளார்.(த)



# சாதித்தார் ஷரபோவா



பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையரில், ரஷ்யாவின் மரியா செரபோவா சாம்பியன் பட்டம் வென்றார். பிறிஸ்பெய்ன்னின் இறுதி ஆட்டத்தில் செர்பியாவின் இவானோவிச்சை வீழ்த்தினார்.. முடிவு கிடைக்காமல் நீடித்த முதல் செட்டை இவானோவிச் 7:6 என்ற அடிப்படையில் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட செரபோவா, இரண்டாவது செட்டை 6:3 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் மீண்டும் அசத்திய ஷர போவா 6:3 என வென்றார். இரண்டு மணி நேரம், 38 நிமிடங்கள் வரை நீடித்த பைனலின் முடிவில், ரஸ்யாவின் மரியா ஷரபோவா 6:7, 6:3, 6:3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, முதன்முறையாக பிறிஸ்பெய்ன் கிண்ணத்தினை கைப்பற்றினார். (ற–ரி)

# படமாகிறது டோனியின் வாழ்க்கை



இந்திய அணியின் வெற்றிகரமான தலைவர் மகேந்திர சிங் டோனியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக வெளிவர இருக்கிறது.

இந்தியாவுக்கு ரி–20 உலகக் கிண்ணம், ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணம் ஆகியவற்றை பெற்றுத் தந்ததுடன், டெஸ்ட் தரவரிசையில் இந்தியாவை முதலிடத்துக்குக் கொண்டு சென்றவர்என்றபெருமையும்டோனிக்கு உண்டு. இந்திய துடுப்பாட்ட வரலாற்றில் வெற்றிகரமான தலைவரும் அவர்தான்.

அவரது துடுப்பாட்ட வாழ்க்கையில் எந்த அளவுக்கு வெற்றிகளை எதிர்கொண்டாரோ அதே அளவுக்கு விமர்சனங்களில் இருந்தும் அவர் தப்பவில்லை. தலைவராக இருந்து பல்வேறு வரலாற்றுச் சாதனைகளைப் படைத்த அவர் சமீபத்தில் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றார்.

இந்த நிலையில் அவரது வாழ்க்கையைப் படமாக எடுக்க ஏற்பாடுகள் நடக்கிறது. ஹிந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் இப்படத்தை எடுக்கின்றனர். இந்த படத்துக்கு 'டோனி' என்றே பெயர் வைக்கப்படவுள்ளது. இதற்காக நடிகர், நடிகை தேர்வும், திரைக்கதை உருவாக்கும் பணியும் விறுவிறுப்பாக நடக்கிறது. டோனி தனது வாழ்க்கையை படமாக எடுக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார். இதற்காக தயாரிப்பு நிறுவனம் ரூபா 20 கோடி அளிக்க இருக்கிறது. லாபத்தில் பங்கு தருவதாகவும் உறுதி மொழி அளிக்கப்பட்டு உள்ளது. இதையும் சேர்த்து அவருக்கு ரூபா 80 கோடி வரை கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவில் யாருக்கும் வாழ்க்கை வரலாற்றை படமாக எடுப்பதற்காக இவ்வளவு பெரிய தொகை கொடுத்தது இல்லை என்று கூறப்படுகிறது. இதிலும் டோனி சாதனை படைத்துள்ளார். (த–ரி)



# தோல்வியை வெறுக்கின்றேன் - ஹோக்லி

கிரிக்கெட் ஆட்டத்தில் எமது அணி தோல்வியடைவதை நான் வெறுக்கிறேன் என்று இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் ஹோக்லி கூறியுள்ளார்.

களத்தில் ஆவேசமாக விளையாடுவதற்கு பெயர் போன ஹோக்லி, இப்போது இந்திய அணியின் டெஸ்ட் அணித் தலைவராகியுள்ளார். அவர் தலைமைப் பொறுப் பேற்ற முதல் டெஸ்ட் ஆட்டத்தை இந்தியா போராடி சமன் செய்தது.

ஆஸ்திரேலியாவில் இந்திய அணி டெஸ்ட் தொடரை 2–0 என்ற கணக்கில் இழந்தாலும், விராட் ஹோக்லி தனிப்பட்ட வகையில் மிகச் சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார். ஆஸ்திரேலிய வீரர்களுக்கு எதிராக முக்கியமாக பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சனுடன் ஹோக்லி மோதல் போக்கை கையாண்டது இந்த டெஸ்ட் தொடரில் பரபரப்பை ஏற்படுத்தியது.

4அவது டெஸ்ட் ஆட்டம் முடிவுக்கு வந்தபின்னர் கருத்துத் தெரிவித்த ஹோக்லி,

இந்திய அணி தோல்வியடைவதை நான் வெறுக்கிறேன். எதிரணியினர் களத்தில் எப்போதும் நம்மை மரியாதையுடன் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். நமது வீரர்களை ஏதோ சாதாரண இளைஞர்கள் என்ற நோக்கில் எதிரணியினர் பார்க்கக் கூடாது. நமது சிறப்பான ஆட்டம் குறித்த பயம் அவர்களுக்கு எப்போதும் இருந்துகொண்டே இருக்க வேண்டும்.

இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரில் அடைந்த தோல்விகளில் இருந்து தனிப்பட்ட முறையில் நான் பல விடயங்களை கற்றுக் கொண்டேன். அதனை வைத்து பல புதிய திட்டங்கள்ள வகுத்துள்ளேன். அதனை அணியில் நடைமுறைப்படுத்துவேன். ஒவ்வொரு துடுப்பாட்ட வீரரும் நம்மால் முடிந்த அளவுக்கு சிறப்பான ஆட் டத்தை விளையாட வேண்டும் என்ற நோக்கத்தில் களமிறங்க வேண்டும். ஆஸ்திரேலியாவில் எனது ஆட்டம் சிறப்பாக அமைந்தது.

அதிக ஓட்டங்களைக் குவிக்க முடிந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆஸ்திரேலிய அணியினர் விளையாடிய விதத்தில் இருந்தும் நிறைய புதிய விடயங்களை கற்றுக் கொண் டேன். நாம் தொடர்ந்து சிறப்பாக விளையாட வேண்டும். முக்கியமாக பந்து வீச்சில் முன்னேற்றம் வேண்டும். ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் தொடர்ந்து சீராக பந்து வீசுகிறார்கள். நாம் அதில் பலம் பெற வேண்டும். டெஸ்ட் போட்டியில் எதிரணியின் 20 இலக்குகளையும் எடுப்பது மிகவும் முக்கியம்.

அதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இந்த டெஸ்ட் தொடர் மூலம் பல நேர்மறையான விஷயங்களை பெற்றுள்ளோம். அடுத்த மாதம் தொடங்கும் உலகக் கிண்ணத் தொடருக்கு இது மிகவும் அவசியம்.

அடுத்து ஒருநாள் தொடரில் விளையாட இருக்கிறோம். அது உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாட உதவியாக இருக்கும். உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னர் சுமார் 2 மாதங்கள் ஆஸ்திரேலியாவில் கிரிக்கெட் விளையாடுவது சிறப்பான முன்னேற்பாடாக எங்கள் அணிக்கு அமைந்துள்ளது – என்று கூறியுள்ளார்.

(ற)


## கொழும்பில் வேலைவாய்ப்பு

கொழும்பு நகரப்பகுதியில் இயங்கும் சுடர்ஒளி பத்திரிகைக்கு பக்க வடிவமைப்பாளர்கள், விளம்பர வடிவமைப்பாளர்கள் தேவை.

- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- உணவு, தங்குமிட வசதியும் வழங்கப்படும்.
- மேலதிக வருமானமும் உழைக்கக்கூடிய வாய்ப்பும் உண்டு.
- வாரத்தில் ஒரு நாள் ஆங்கிலம் அல்லது சிங்களம் கற்கும் வசதியும் செய்து தரப்படும்.
- விரும்புவோர் மேலதிக தகவல்களுக்கு கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்

071 427 3035



## நீங்கா நினைவலைகள்

அமரர் **அடைக்கலம் செபமாலை (பட்டு)**



அன்னை மடியில்
1946.09.04

ஆண்டவன் பாதத்தில்
2014.11.10

அன்னையோர் ஆலயமாய் அன்பின் உறைவிடமாய்
அருள் சுரக்கும் உத்தமியாய் அமுதசுரபியின் நாயகியாய்
ஆதரித்து ஆறுதல் தந்திடும்– சாந்தியுமாய்
கருணையின் காருண்ணிய நாயகியாய்
கருவாய்ச் சுமந்து காத்த பூமாதேவியாய்
இறைசெபத்தின் வல்லமையை கற்றுத்தந்திடும் எம் தாயே!
என்றும் உம் நலம் பாராது
எம் வாழ்வுக்காக என்றும் வாழ்ந்த மாதாவே!
எம் வாழ்நாள் முழுவதும் உங்களை நேசிப்போம்.

93, 2 ஆம் குறுக்குத்தெரு.
பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.

உங்கள் அன்பிற்காக ஏங்கும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், பெறாமக்கள்.

(55657)(4.3.7)



## வேலைவாய்ப்பு

நளின் கணினி நிறுவனத்திற்கும் அதன் துணை நிறுவனங்களுக்கும் பணிநிலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணி நிலைகளுக்கேற்ப EPF/ ETF உடன் பொருத்தமான சம்பளம் வழங்கப்படும்.

ஆண் பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

| பணி நிலைகள் | தகைமைகள் |
|---|---|
| 01. கணினி தொழில்நுட்பவியலாளர்கள் - 5<br>02. கணினி / கணினிசார் பயிலுனர் - 5<br>03. பிரதியிடும் இயந்திரம் (Photo copy) தொழில்நுட்பவியலாளர் - 2<br>04. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - 1<br>05. கணக்கு உதவியாளர் (Acc. Cleark) - 1<br>06. காட்சியறை முகாமையாளர் - 1<br>07. இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர் - 1 | கணினி தொடர்பான கற்கைநெறி சான்றிதழ்களுடன் பொருத்தமான கல்வித்தகைமை. கணினி தொடர்பான தொழில்நுட்பதுறையில் 2 வருடத்திற்குமேல் அனுபவம் விரும்பத்தக்கது. சாரதி அனுமதிப்பத்திரம். கணக்கு உதவியாளர் தகைமை உயர்தரத்தில் கணக்கியல் பிரிவில் 3 பாடங்கள் சித்தியெய்திருக்கவேண்டும். 2 வருட அனுபவம் விரும்பத்தக்கது.<br>வயதெல்லை : 20 - 35 |

விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் பதவிகளை அஞ்சல் உறையில் குறிப்பிடவும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபாலிலோ விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவு திகதி 16.01.2015

NALIN Information Technologies(Pvt)Ltd.

**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**

No. 195/4, Parameswara Junction, Palaly Road. T.P: 021 222 1121. 0777 66 7975



**தவறிவிட்டது** NP-XG 7369

என்னும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு தவறிவிட்டது.

(54171)(4.7.3) T.P- 077 155 6297



உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

021 567 1111



## அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவிற்கு எனதும் எம் மக்களினதும் நல்வாழ்த்துக்கள்



எம் மக்கள் விரும்பிய மாற்றம் எம் வாக்குகளினால் தந்த இறைவனுக்கு நன்றி.

வாக்களித்து வெற்றி பெற வைத்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி.

கணேசபிள்ளை பாலச்சந்திரன் J.P
ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்.
காரைநகர் பிரதேச சபை உறுப்பினர்கள்.



## பணிநிலை வேண்டுகை

கரிகணன் தனியார் நிறுவனத்தின் விஸ்தரிப்பிற்காகப் பின்வரும் பணி நிலைகளுக்குப் பணிவேண்டுகைகள் கோரப்படுகின்றன.

- விற்பனைப் பிரதிநிதிகள் / Marketing Executive (Male/Female)
- திரை அச்சுப் பதிப்பாளர் / Screen Printer (Female) (முன் அனுபவம் விரும்பத்தக்கது)
- வெல்டர்ஸ் / Welders (முன் அனுபவம் விரும்பத்தக்கது)

விண்ணப்பிக்க விரும்புவோர் 12-01-2015 தொடக்கம் 17-01-2015 வரை கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.

**கரிகணன் (தனியார்) நிறுவனம்**

இல.681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2717


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.